22 . 10 . 93

THAYAGAM

75¢

உண்மை:5

தேடல்:16

# தாயகம்

# கொழும்பில் 2000 தமிழர்கள் கைது கருப்புலிகளைத் தேடி இராணுவம் வேட்டை

## புலிகளை அங்கீகரிக்கும்படி பொதுநல அமைப்புக்கு கோரிக்கை

## 11 வயதுச் சிறுமியைக் கற்பழித்த பொலிஸ் அதிபர்

## கிளாலிப் பாதைக்கு கரும்புலிகள் பாதுகாப்பு

## புலிகள் சமஷ்டிக்கு தயார்

ஆஸி தொலைக்காட்சியில் பாலசிங்கம்

# EVERGREEN

## IMPORT & DISTRIBUTORS

**(416) 964-8601**

**324-9345/ 968-9545**

இலங்கை,
இந்தியப்
பத்திரிகைகள்,
சஞ்சிகைகளை
உடனுக்குடன்
பெற்றுக் கொள்ளலாம்.
நேரடி வினியோகமும்
உண்டு.



**வர்த்தகர்களுக்கு
விசேட கழிவுகள்
உண்டு**

தலைநகை, தலைப்பாகை
வாடகைக்கு கிடைக்கும்

**சிவசங்கரி, பாலகுமாரன்,
அனுராதா ரமணன், சுஜாதா,
புஷ்பா தங்கத்துரை, லேனா
தமிழ்வாணன்,மு.கருணாநிதி,
கண்ணதாசன், வைரமுத்து, மேத்தா
உட்பட தமிழகத்தின்
பிரபல எழுத்தாளர்களின் புத்தகங்கள்
மலிவு விலையில் கிடைக்கும்.**

வவுனியா,
யாழ்ப்பாணம்,
கொழும்பு, இந்தியா,
சிங்கப்பூர் மற்றும்
ஐரோப்பிய நாடுகளுக்கும்
உடனுக்குடன்
பணம் அனுப்பி
வைக்கப்படும்

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

- ✪ மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக ஆடைகள்
- ✪ ஆண்களுக்கான ஜீன்ஸ், ரீ சேட் வகைகள், சாரங்கள், பட்டு வேட்டி வகைகள்
- ✪ சாறி வகைகள்
- ✪ அலங்காரப் பொருட்கள், பரிசுப் பொருட்கள்
- ✪ மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள்

*அனைத்தும் மலிவான விலையில்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்*

**566 A Parliament St (Parliament/Wellesley)**

Second class mail Registration No:8435




**'உண்மையைத் தேடி'**

## புலிகளை அங்கீகரிக்கும்படி கோரிக்கை

சர்வதேச நாடுகள் தங்களை அங்கீகரிக்க வேண்டும் என்று புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். சைப்பிரஸில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் தங்களை அங்கீகரிக்கும்படி தாங்கள் கேட்டிருப்பதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தங்கள் அரசியல் நிலை பற்றி தாங்களே நிர்ணயிக்கும் உரிமை கொண்டவர்கள் என்பதை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டிய தேவை உள்ளது என்று புலிகள் இந்த நாடுகளின் தலைவர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

## இலங்கை மீனவர்கள் விடுவிப்பு

இந்தியக் கடற்பிராந்தியத்தில் கைது செய்யப்பட்ட 29 இலங்கை மீனவர்களும் ஐந்து வள்ளங்களும் விடுவிக்கப்பட்டன. இந்த படகுகளில் இருந்து உபகரணங்கள் வேவு பார்க்க பயன்படலாம் என்றே தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

வெறும் ரேடியோ உபகரணங்களே அதில் இருந்தன என்ற இலங்கையின் விளக்கத்தை இந்தியா ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தியாவின் லட்சதீவு பகுதியில் மீன்பிடித்த இந்த மீனவர்கள் செவ்வாய்க்கிழமை இலங்கை பயணமானார்கள்.

## கிளாலிப் பாதையைக் கடப்பவர்களுக்கு கரும்புலிகள் பாதுகாப்பு

தற்போது கிளாலிப் பாதையைக் கடப்பவர்களுக்கு கரும்புலிகள் அதிகளவில் துப்பாக்கிய தாங்கிய வள்ளங்களில் பாதுகாப்பு வழங்குவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்துள்ளனர். அரசாங்கம் நிர்மூலமாக்கியதாக குறிப்பிடும் அதே பாதையையே மக்கள் இப்போதும் பயன்படுத்துவதாக வவுனியா வந்தவர்கள் தெரிவித்தனர். இதுவரை சுமார் ஐயாயிரம் பேர் வள்ளங்களில் இரு புறமும் புலிகள் பாதுகாப்பு வழங்க கடந்ததாக தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சென்று வந்த பத்திரிகையாளர்களின் தகவல்படி கரும்புலிகள் கடற்படைப் படகை அழித்த பின்னர் கடற்படைப் படகுகள் அருகில் வர அஞ்சுகின்றன என புலி முக்கியஸ்தர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

## புலிகள் சமஷ்டிக்கு தயார் அரசே மறுக்கிறது தொலைக்காட்சியில் பாலசிங்கம்

சமஷ்டி முறையை பிரபாகரன் கருத்துக்கெடுப்பதாக கூறிய போதும் அரசாங்கம் அதை நிராகரித்திருக்கிறது என்று பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார். வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களின் தாயகம் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு, சமஷ்டி முறை முன்வைக்கப்பட்டால் அதைக் கருத்துக்கு எடுக்கத் தயார் என்று அவுஸ்திரேலிய தொலைக்காட்சிக்கு பாலசிங்கம் தெரிவித்தார்.

விசேட ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எனப்படும் அவுஸ்திரேலிய தொலைக்காட்சியின் டேட்லைன் எனப்படும் நிகழ்ச்சியில் 'சிங்கத்தின் குகைக்குள் புலிகள்' என்ற தலைப்பில் இலங்கையின் இனப்பிரச்சனை பற்றி கூறப்பட்டது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.ஆர், சிறிமாவோ, அஷ்ரப், பாதுகாப்பு செயலாளர் ஹமில்டன் வணசிங்க ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் பேட்டி காணப்பட்டிருந்தனர்.

பாலசிங்கம் சமஷ்டி முறையை ஏற்றுக் கொள்வது பற்றி கூறிய அதே வேளை பாராளுமன்ற விவகார அமைச்சர் விமல் விக்கிரமசிங்கவோ 'சமஷ்டி என்ற சொல்லைத் தவிர, சமஷ்டி அமைப்பில் உள்ள அதிகாரங்கள் வழங்கப்படும்' என்று கூறியிருக்கிறார்.

பிரதமரோ 'புலிகள் தங்கள் ஆயுதங்களை கைவிட்டு, மற்றக் கட்சிகளுடன் பேச வேண்டும்' என்றார். அத்துடன் ஜனாதிபதி போலவே இனப்பிரச்சனை என்று இல்லை என்றும் பல தமிழர்கள் வெளியே வாழ்கிறார்கள் என்றும் பல விடயங்கள் தீர்க்கப்பட்டன என்றும் மாகாணசபைகள் உருவாக்கப்பட்டு தமிழ் உத்தியோக மொழியாக்கப்பட்டிருக்கிறது என்றும் அரசாங்க தொழில்களில் இனவிகிதாசாரம் பேணப்படுகிறது என்றும் பிரதமர் கூறினார்.

ஆயுதங்களை தூக்குவீர்களா என்று அஷ்ரப்பிடம் கேட்ட போது 'புலிகள் தங்கள் நடவடிக்கைகளை நிறுத்தாவிட்டால் அரசிடம் ஆயுதம் கேட்கப் போவதாகவும்' அரசு தராவிட்டால் சட்டவிரோதமாக ஆயுதங்களைப் பெறுவோம் என்றும் கூறினார்.

ஹமில்டன் வணசிங்கவோ 'பிரபாகரன் அழிக்கப்பட்டாலோ, கைது செய்யப்பட்டாலோ எல்லாமே முடிந்துவிடும்' என்று தெரிவித்தார்.

## வாணிவிழா

30.10.93 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு
50 Mont Gomery Ave, Mount Royal High School hall

மாபெரும் மலிவு விற்பனை

சிவாஸ் ரேடிங் கோ
3852 Finch Ave East (Kennedy/Finch)
321 2739

ஏடு இட்டோர் இயல்

# கனடியத் தேர்தல்

கனடியப் பாராளுமன்றத்திற்கான தேர்தல் இந்த வாரம் நடைபெறுகிறது. எங்கள் பாரம்பரியம் போல, மேடை போட்டு திட்டித் தீர்ப்பதும், ஊர்வலம் போய் கோஷம் போடுவதும் இரத்த திலகமும் மாலையும் அணிவித்து பாதபூஜை செய்வதும் இங்கே நாம் காணுதவை.. அல்லது தமிழகப் பாணியில் கட் அவுட் வைப்பதும் போஸ்டர் அடிப்பதும் கூட இங்கே இல்லை. பேசுபவர்கள் கூட 'உயிர் பிரெஞ்சுக்கு (ஆங்கிலத்துக்கு), உடல் மண்ணுக்கு' என்றோ பேசுவதும் இல்லை. அல்லது ஜனநாயக தேர்தலை ஆயுதம் தரித்து குழப்பும் வேலைகளும் இல்லை. பெரும்பாலும் பொருளாதாரப் பிரச்சனையும் வேலையில்லாத் திண்டாட்டமுமே தேர்தலுக்கான கருப்பொருளாகியுள்ளன. உணர்வுபூர்வமான விடயங்கள் முன்னெடுக்கப்படும்போதும் (பிரெஞ்சு புளொக் கியுபெக்குவாவின் பிரிவினைக் கோஷம், சீர்திருத்தக் கட்சியின் குடியேற்றவாசிகளின் மீதான எதிர்ப்புக் கோஷம்) பொருளாதாரப் பிரச்சனை தான் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த இரு கட்சிகள் தவிர்ந்த அனைத்துக் கட்சிகளுமே நாட்டின் ஒருமைப்பாட்டை கவனத்தில் கொண்டு பிரெஞ்சு மக்களையும் அணைத்துக் கொண்டு செல்வதில் அக்கறை கொள்கின்றனவே அன்றி அவர்களை புறக்கணித்து விடவில்லை.

எங்கள் தேர்தல்கள் இரண்டு கொத்து அரிசி, எட்டு றாத்தல் தானியம் போன்ற 'ஆழமான' பொருளாதாரப் பிரச்சனைகள் தவிர்ந்த பாரிய பொருளாதாரத் திட்டங்கள் எதையும் முன்வைத்ததாக தெரியவில்லை. ஐ.தே. கட்சியின் திறந்த பொருளாதாரக் கொள்கையும் சுதந்திரக்கட்சியின் 'மூடிய பொருளாதாரக் கொள்கையும்' உண்மையில் மக்கள் முன் தெளிவாக்கப்படாமல் வெறும்கோஷங்கள் தான் எங்களை ஆட்கொண்டிருந்திருக்கின்றன.

இங்குள்ள இன்றைய நிலைக்கு தற்போதைய பொருளாதார மந்த நிலை தான் காரணம்.. பொருளாதாரம் செழிப்பாக உள்ள நிலையில், சீரியஸான பிரச்சனைகள் இல்லாத போது.. வெறும் வசீகரம் மட்டுமே வெற்றிக்கு போதுமானது. அல்லது தேவையற்ற அரசியலமைப்பு பிரச்சனைகள் கிளறப்படும். ஆனால் பொருளாதாரப் பிரச்சனை எழும் போது தான் அதற்கான காரணமாக சிறுபான்மை இனங்கள் மீதும் குடியேற்றவாசிகள் மீதும் 'குற்றத்தை சுமத்தி விடுவதும்' சுலபமாகின்றன. இவற்றோடு பொருளாதாரத்தை மேம்படுத்தக் கூடிய திட்டங்களை முன்வைக்காவிட்டால் வாக்காளர்களையும் கவர முடியாது. 'சந்திர மண்டலத்திலிருந்தாவது தொழில்களைக் கொண்டு வந்து தருவோம்' என்று சொல்லாத குறையாக அனைத்துக் கட்சிகளுமே பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை ஆளுக்காள் வைத்துக் கொண்டு தங்கள் திட்டங்களை புகழ்ந்து கொண்டு நியாயப்படுத்துகின்றன.

லிபரல் கட்சி வெற்றி பெறும் என்று பெரும்பாலான கருத்துக் கணிப்புகள் காட்டி நிற்கின்றன. இருந்தாலும் இந்த தேர்தல் கனடிய அரசியலில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும். பெரும்பான்மை அரசாங்கத்தைக் கொண்ட கன்சர்வேட்டிவ் கட்சி இன்று குறைந்த பட்சம் எதிர்க்கட்சி ஸ்தானத்திலாவது தன்னைக் காத்துக் கொள்ள வேண்டிய நிலையிலும் புதிய ஜனநாயகக் கட்சி கட்சி அந்தஸ்திலிருந்து தான் அகற்றப்படாத நிலையை பாதுகாக்க வேண்டிய நிலையிலும் உள்ளன. கனடிய அரசியல் அரங்கில் சில வருடங்களுக்கு முன்னர் கேள்விப்படாமல் இருந்த புளொக் கியுபெக் இன்று எதிர்க்கட்சி ஸ்தானத்தை அடையக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கனடாவின் மேற்குப் பகுதிகளில் செல்வாக்குப் பெற்ற சீர்திருத்தக் கட்சி கிழக்குப் பகுதிகளில் கியுபெக் தவிர்ந்த அனைத்து இடங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறது.

புளொக் கியூபெக்குவா எங்கள் கூட்டணி மாதிரியான நிலையில் தான் கனடியப் பாராளுமன்றத்திற்கு சென்று கியுபெக்கின் பிரிவினையை உறுதி செய்யப் போவதாகக் கூறுகிறது. கியூபெக் மாநிலத்தில் பெரும்பாலான ஆசனங்களை இது கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சரித்திரம் ஒரு சுற்றுச் சுற்றுகிறது. முன்பு ஆயுதம் தாங்கிய கியுபெக் தனிநாட்டுப் போராட்டம் அடக்கப்பட்டு, பிரிவினைவாத கியுபெக் கட்சி மாநில ஆட்சியைப் பறிகொடுத்த பின்னர் இப்போது ஒரு சுற்றுச் சுற்றி 'கனடியப் பாராளுமன்றம் மூலமாக கியுபெக் பிரிவினை' என்ற நிலையில் நிற்கிறது. மல்ரோனியின் பாடசாலை நண்பனாக இருந்த லூசியன் பூசா அவரது மந்திரிசபையில் இருந்து தன் நண்பனுக்கு 'துரோகம்' செய்து கட்சி அமைத்து தற்போது கியுபெக் மாநிலத்தில் உள்ள கனசர்வேட்டிவ் கட்சி ஆதரவாளர்களின் வாக்குகளைப் பிரித்து விட்டார்.

மறுபுறத்தில் சீர்திருத்தக் கட்சி மேற்கு மாநிலங்களில் செல்வாக்குப் பெற்றிருந்த பின்னர் தற்போது தேசிய அளவில் போட்டியிடுகிறது. கன்சர்வேட்டிவ் கட்சியினரை விட அதிதீவிரமான பழமைவாதக் கட்சியான இது குடியேற்றவாசிகள் மீதான எதிர்ப்பலையைத் தோற்றுவிப்பதில் முன்நிற்கிறது. அத்துடன் நிறவெறிக் குழுக்கள் இந்தக் கட்சியில் அங்கத்துவம் பெற்றுள்ளதுடன் சிலர் வேட்பாளராகவும் நியமிக்கப்பட்டிருந்தனர். கனடிய இலவச மருத்துவத் திட்டத்தை மாற்றியமைப்பது போன்ற சாதாரண மக்களின் உரிமைகள், சலுகைகளில் கைவைப்பதன் மூலம் கனடிய வெள்ளையர்களின் ஆதரவைப் பெற முயலகிறார். இவரது குடியேற்றவாசிகள் மீதான எதிர்ப்புணர்வு கன்சர்வேட்டிவ் கட்சியின் ஆதரவாளர்கள் பலரைக் கவர்ந்துள்ளது. இவரைப் பேட்டி கண்ட ரொறன்ரோ ஸ்டார் ஆசிரியர் குழு 'இவர் பழகுவதற்கு நல்லவர், ஆனால் இவர் கூறும் திட்டங்கள் எந்த வித ஆதாரமும் இல்லாதன' என்றிருக்கிறது. மூன்றாண்டுகளில் கனடாவின் கடன்தொகையை சமாளிப்பதாக கூறுகிறார். இவரது திட்டங்களில் பல சாத்தியமற்றவை என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. ஐரோப்பிய நாடுகளில் கிளம்பி வரும் வெளிநாட்டார் எதிர்ப்பலையை சாதமாக்கி ஆட்சிக்கு வர முயலும் அமைப்புகள் போன்றதே இவருடையது.

அடுத்து புதிய ஜனநாயகக் கட்சி தற்போது அனுதரவான நிலையில் உள்ளது. ஒருகாலத்தில் ஆட்சியமைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட கட்சி இன்று கட்சி அந்தஸ்தையே இழக்கும் அளவில் நிற்கிறது. ஒன்ராறியோவில் பெரும்

ஆதரவுடன் ஆட்சியமைத்த இந்தக் கட்சி தனது தேர்தல் வாக்குறுதிகளில் பலவற்றை மீறியதால் இன்று செல்வாக்கிழந்த நிலையில் நிற்கிறது. தனது வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் போனதற்கு மத்திய அரசின் நெருக்கடியும் ஒரு காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. வானைக் காப்புறுதியை தேசியமயமாக்கு வதாகக் கூறி பின்னர் பின்வாங்கியது முதல் பல்வேறு உறுதிமொழிகள் கைவிடப்பட்டன. ஒன்ராறியோவிற்கு நடந்த கதி முழுக்கனடாவிற்கும் நடந்து விடக் கூடாது என்ற அச்சமோ என்னவோ தற்போது எட்டு வீதக் கனடியர்களே இந்தக் கட்சியை ஆதரிக்கின்றனர்.

ஆளும்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியின் நிலைமை பரிதாபகரமானது. 84 இல் ஆட்சியமைத்த மல்ரோனி சுதந்திர வர்த்தகத்தைக் காட்டி 88 இல் மீண்டும் பெரும்பான்மை அரசாங்கம் அமைத்து இறுதியில் செல்வாக்கிழந்து தானாகவே கட்சியை விட்டுவிலக வேண்டிய நிலையில் இருந்திருக்கிறார். தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் தான் இந்த அரசின் செல்வாக்கு குறைய காரணம் என்றால் அந்த நெருக்கடிகளுக்கான காரணமே இந்த அரசின் திட்டங்கள் தான். அமெரிக்காவுடனான சுதந்திர வர்த்தகம் தான் இங்குள்ள பலர் வேலைவாய்ப்புகளை இழக்க காரணமானது என்பது மறுக்க முடியாத உண்மை. அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்வதில் உள்ள தடைகள் நீங்கிய நிலையில்.. அங்குள்ள பொருளாதார வசதிகளை மனதில் கொண்டு பல நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலைகளை மூடிக் கொண்டு அமெரிக்காவுக்கு சென்றன. இதனால் ஆயிரக்கணக்கில் கனடியர்கள் வேலைவாய்ப்புகளை இழந்தனர். பொருளாதாரம் மந்த நிலையை அடைந்தது. இந்த சூழலிலும் தொழிலாளர்களுக்கு எதிரானதும் நிறுவனங்களுக்கு ஆதரவானதுமான பல சட்டங்களையும் அரசு இயற்றியது. அமெரிக்காவுடனான சுதந்திர வர்த்தகமே பாதிப்பை ஏற்படுத்திய நிலையில் மெக்சிக்கோவையும் சேர்த்து வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தையும் அரசு செய்துகொண்டது. இது பாரிய பாதிப்புகளை இன்னமும் ஏற்படுத்தக் கூடியது. மெக்சிக்கோவின் மலிந்த கூலிகளால் கவரப்பட்டு இன்னமும் பல நிறுவனங்கள் மெக்சிக்கோவுக்கு நகரலாம். இது பல்தேசிய நிறுவனங்களுக்கு மட்டும் வருவாயைக்கொடுக்குமேதவிர சாதாரண தொழிலாளர்களுக்கு பயன் தரக் கூடியது அல்ல.

பொருளாதாரம் இக்கட்டான நிலையில் உள்ள போது, மக்களின் கவனத்தை திருப்ப அரசியலமைப்பு நெருக்கடியை கிளப்பி அதிலும் அரசு தோல்வியே கண்டது. இறுதியில் அரசு எதிர்ப்புகளைச் சம்பாதித்த நிலையில் மல்ரோனி பதவி விலகிக் கொண்டார். இதன் மூலம் சகல தவறுகளையும் மல்ரோனியின் தலையில் கட்டி புதிய அரசு தன்னை தவறுகளற்ற ஒன்றாகக் காட்ட முயன்றது. ஆனாலும் தற்போதைய பிரதமர் முதல் அனைவருமே மல்ரோனியின் கீழ் எந்த வித எதிர்ப்பும் இல்லாமல் உடன்பட்டவர்களே. திடீரென்று 'விழித்துக் கொண்டு' தாம் பொருளாதாரத்தை மாற்றியமைக்கத் திட்டங்கள் வைத்திருப்பதாக கூறி தேர்தலில் இந்த அரசு இறங்கியிருக்கிறது. இந்த திட்டங்கள் ஏன் முன்பு அமுல்படுத்தப்படவில்லை என்பது பெரிய கேள்வி.

அத்துடன் தமது ஆதரவாளர்களுக்கு சார்பான பல விடயங்களை அரசு செய்தது பெரும் எதிர்ப்பைக்கிளப்பியுள்ளது. ரொறன்ரோ விமான நிலையத்தை தனியார் நிறுவனம் வசம் ஒப்படைத்தது. இந்த தனியார் நிறுவனம் ஆளும் கட்சியின் ஆதரவாளர்களுக்கு சொந்தமானது. மல்ரோனி தனது இறுதிக்காலத்தில் தனக்கு வேண்டிய பலருக்கு பதவிகளைக் கொடுத்து விட்டு விலகிக் கொண்டார். கெடுபிடி யுத்தம் முடிந்து சோவியத் நீர்மூழ்கிகளை செயற்படவைக்க சோவியத் முடியாமல் கடலுக்கு அடியில் நிறுத்தி வைத்திருக்க.. அந்த நீர்மூழ்கிகளைக் கண்டுபிடிப்பதற்கான ஹெலிகொப்டர் களை கோடிக்கணக்கான டொலர்கள் செலவிட்டு கனடிய அரசு வாங்க முயல்கிறது. இவ்வாறான செலவீடு அனாவசியமானதும் அநியாயமா னதுமாகும்.

இவ்வாறான அதிகார துஷ்பிரயோகங்களும் விரயங்களும் இறுதியில் சாதாரண மக்களின் தலையில் தான் விழுந்து விடுகின்றன. இந்த சூழ்நிலையில் பொருளாதாரத்தை நாம் மாற்றியமைப்போம் என்று கோஷித்து வரும் அரசை நம்புவது கடினமானதே.

லிபரல் கட்சி தற்போதைய கருத்துக் கணிப்புகளில் முன்னணியில் நிற்கிறது. தனது பொருளாதாரத் திட்டங்களை முன்வைத்து வெளியிட்ட விஞ்ஞாபனத்தில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதே முதன்மையான நோக்கம் என்று குறிப்பிட்டிருக்கிறது. தற்போதைய தேவையும் அதுதான். பொருளாதாரத் திட்டங்களின் சாத்தியத் தன்மை குறித்து சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஆயினும் மற்றக் கட்சிகளின் உறுதி மொழிகளை விட இது கொஞ்சம் பரவாயில்லை என்ற நிலையில் தான் இருக்கிறது. குடியேற்றவாசிகள் விடயத்திலும் லிபரல் கட்சி மிதமாகவே நடந்து கொள்கிறது. மற்றக் கட்சிகள் குடியேற்றவாசிகள் பற்றி பயத்தை ஏற்படுத்தி வாக்குச்சேர்க்க முயலும்போது துணிவாக குடியேற்றவாசிகள் பற்றி மிதவாதப் போக்கைக் கொண்டிருப்பது நல்ல விடயமே.

தமிழர்கள் பலருக்கு இம்முறை வாக்குரிமை கிடைத்திருக்கிறது. சிலர் வேட்பாளர்களுக்கு 'உறுதுணை'யாகவும் இருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில் வேலைவாய்ப்பும் குடிவரவும் முக்கியமான பிரச்சனைகள். இந்த விடயத்தில் யார் சரியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறாரோ அவரை ஆதரிப்பது பயன்தரும். இந்த வாக்குரிமை பொறுப்பான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். எதுவாயிருந்தால் எமக்கென்ன என்ற மனோபாவம் இல்லாமல், சரியாக சீர்தூக்கிப் பார்த்து வாக்களிக்க வேண்டும். வாக்களிக்காமல் இருந்து வேண்டத்தகாதவர் ஆட்சிக்கு வருவதற்கு சந்தர்ப்பம் கொடுக்காமல், நீங்கள் ஆதரிப்பவருக்கு வாக்களித்து அவர்களின் வெற்றியை உறுதி செய்து கொள்ளுங்கள்.

கனடிய அரசு முறை ஜனநாயக அடிப்படையிலானதாயினும் இங்கு உள்ள Lobby முறை எல்லாவற்றையும் பழுதாக்கக் கூடியது. எந்த அரசு பதவிக்கு வந்தாலும் இது தான் சிக்கல். தனியார் நிறுவனங்கள் வழமையில் பெரும் பணச் செலவில் அரசுக்கு சார்பான ஆதரவாளர்களை சம்பளத்திற்கு அமர்த்தி தங்கள் நிறுவனங்களுக்கு தேவையான விடயங்களை சாதித்து வருகின்றனர். இதனால் வாக்காளர்களின் நலனை விட இந்த நிறுவனங்களின் நலன்கள் பேணப்பட சாத்தியங்கள் அதிகம். இவ்வகையான முறையினால் தான் ரொறன்ரோ விமானநிலையம்தனியாரிடம் கையளிக்கப்பட்டது. இந்த முறை ஒழுங்குபடுத்தப்படா விட்டால் ஜனநாயகம் அர்த்தமற்றதாகி விடும்.

# தாயைக் காக்க முயன்ற தனயன்

தான் பதவி விலகுவதாகக் கூறி வெளியிட்ட அறிக்கையில் தனது தாயாருக்காக தான் உயிரைப் பணயம் வைத்ததாக அனுரா தெரிவித்திருக்கிறார். வடக்கு கிழக்கில் உள்ள மக்களை வாக்களிக்க விடுமாறு தான் புலிகளைக் கேட்பதற்காக வன்னிக்காட்டிற்கு சென்றதாகவும் இது தனது தாயின் வேண்டுகோளுக்காகவே செய்ததாகவும் தனது வாழ்வில் மேற்கொண்ட ஆபத்தான பயணம் இது என்றும் அவர் கூறியுள்ளார்.

இவருடன் குமார் பொன்னம்பலம், மோதிலால் ஆகியோரும் சென்றனர். இவர்களை ஒருநாள் இரவு அங்கு தங்கி பிரபாகரனுடன் பேசுமாறு கேட்ட போது அனுரா மறுத்து விட்டார். பின்னர் இவர்கள் வவுனியா வரை ஜீப்பில் வந்து பின்னர் அனுராதபுரத்திலிருந்து ஹெலிகொப்டரில் சென்றனர். அப்போது மோதிலால் நேரு அந்தப் பகுதியின் ஆபத்தான நிலை பற்றிக் கூறிய போது தனது தாயை பதவியில் இருத்த இது தேவையென்றால் அதை தான் செய்வதாக அனுரா கூறினாராம்.

# யாழ். பல்கலைக்கழகம் புறக்கணிப்பு

யாழ் பல்கலைக்கழகத்தில் ஆட்சேர்ப்பதைக் குறைக்க அரசு தீர்மானித்துள்ளது. அடுத்த வருடம் 408 மாணவர்களே அனுமதிக்கப்பட உள்ளார்கள். 1180 மாணவர்களை அனுமதிக்க முடியும் என்று முதலில் கூறிய போதிலும் பின்னர் குறைந்தளவு மாணவர்களை அனுமதிக்கிறது. மற்ற பல்கலைக்கழகங்கள் கோரியதை விட அதிகமான மாணவர்களை மானியக்குழு அனுமதித்த போதும் யாழ் பல்கலைக்கழகத்தில மட்டும் கோரப்பட்டதை விட பாதிக்கு குறைவாகவே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

# ஆயுதம் வாங்கும் முயற்சி தொடர்கிறது

இலங்கை அரசு தொடர்ந்தும் ஆயுதங்களை வாங்குவதில் ஈடுபட்டுள்ளது. தற்போது கிழக்கைரோப்பிய நாடுகளில் இருந்து ஆயுதங்கள் பெறப்பட உள்ளன. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து ஹெலிகொப்டர்களும் பெறப்பட உள்ளன. மூன்றுமி 17 4 ரக இராணுவ போக்குவரத்து ஹெலிகொப்டர்கள் இந்த வருட இறுதிக்குள் வந்து சேரும்.

இந்த இரண்டு இயந்திரம் கொண்ட ஹெலிகொப்டர்கள் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டு முன்பு வார்சோ சார்பு நாடுகளினால் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது விமானப்படைகளினால் பயன்படுத்தப்படும் பெரிய ஹெலிகொப்டர் இதுவாகும். ஏற்கனவே இந்த ரக ஹெலிகொப்டர்கள் இலங்கை விமானப்படை வசம் உள்ளன.

கிழக்கைரோப்பிய நாடுகளில் ஆயுதம் வாஙகுவது மலிவானது. ஏற்கனவே செக்கோஸ்லாவாகிய டாங்கிகளை இராணுவம் பயன்படுத்தி வருகிறது. துப்பாக்கிளும் மற்றும் சிறு ஆயுதங்களும் அங்கு மலிவாகக் கிடைக்கின்றது.

அடுத்த வருடம் பாதுகாப்பு செலவீனத்திற்காக 250 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

# கிழக்கில் புதிய அமைப்பு

கிழக்கு மாகாணத்தில் ஈரோஸ் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட பிரபாகரன் என்பவர் தற்போது தனது அமைப்பை கிழக்கில் கலைத்து விட்டு புதிய அமைப்பு ஒன்றை உருவாக்கியிருக்கிறார். இவர் திருகோணமலை பொறுப்பாளரான சக்திகுமாருடன் சேர்ந்து ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயற்பாடுகளை நிறுத்தி விட்டு கிழக்கு அபிவிருத்தி நிறுவனம் என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கியுள்ளார்.

கொழும்பில் ஈரோஸ் அமைப்பாளரான சுதா மாஸ்டர், பிரபாகரனின் இந்த நடவடிக்கைக்கு பின்னால் தமது பிரதிநிதி சேகு தாவூத் உள்ளார் என்று கூறுகிறார். அத்துடன் தங்கள் குழுவைப் பிரிப்பதில் அரச உளவுப்பிரிவின் பங்கையும் குற்றம் சாட்டுகிறார்.

கிழக்கு அபிவிருத்தி நிறுவனத்தின் செயற்பாடுகள் புனர்வாழ்வு எனினும் அரசாங்கத்தைச் சார்ந்து பணம் பெறுவதே இதன் நோக்கம் என்று கருதப்படுகிறது.

(தராக்கியின் கட்டுரையிலிருந்து)

# இன்னொரு தாக்குதலுக்கு முஸ்தீபு

முதலாவது இராணுவ நடவடிக்கையான யாழ் தேவி எதிர்பார்த்த பலனைத் தராததுடன் சிங்கள மக்கள் மத்தியில் எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து தற்போது இன்னுமொரு தாக்குதலை இராணுவம் ஆரம்பிக்கலாம் என்று கருதப்படுகிறது.

கிளாலிப் பகுதியில் படகுகளை நிர்மூலமாக்கியதாக கூறிய போதிலும் தற்போது படகுச் சேவை நடைபெறுவது இராணுவத்திற்கு அவமானமான ஒன்றாகவே கருதப்படுகிறது. தற்போது இன்னொரு நடவடிக்கையை விரைவில் ஆரம்பிக்கலாம் என்று கருதப்படுகிறது. இதற்காக ஏற்கனவே இளைப்பாறிய அதிகாரிகளை யுத்தத்தில் கலந்து கொள்ளுமாறு இராணுவம் கோரியுள்ளது.

பேட்டியொன்றில் தங்களது இராணுவ நோக்கம் நிறைவேறியதாக கூறிய தளபதி கிளாலியில் எந்த விதமான போக்குவரத்தும் இல்லை என மறுத்துள்ளார்.

# மாலைதீவு வாசிகள் கடத்தல்

யுத்த ஆடைகளுடன் வந்த ஆயுதம் தாங்கியவர்கள் இரண்டு மாலைதீவுக்காரர்களை கடத்திச் சென்று தாக்கியுள்ளனர். இவர்கள் இருவரும் தறபோது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். செவ்வாய்க்கிழமை அதிகாலை இவர்கள் இருவரும் தங்கள் வீட்டிலிருந்து கைது செய்யப்பட்டு பின்னர் கடற்கரை ஒன்றில் விடுவிக்கப்பட்டனர். தங்களை கடத்தியவர்கள் என்ன பேசினார்கள் என்பது தங்களுக்கு விளங்கவில்லை என்றும் இவர்கள் கூறியுள்ளனர்.

இவர்களையும் தமிழர்கள் என்ற நோக்கத்தில் கடத்தியிருக்கலாம் என்றே கருதப்படுகிறது.

# லொறி தடுக்கப்பட்டது

தாண்டிக்குளத்தின் ஊடாக வடபகுதிக்கு தடை செய்யப்பட்ட பொருட்களைக்கொண்டு சென்ற லொறி ஒன்று தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. பத்து லட்சம் பட்டரிகள், வாள்கள் போன்றவற்றைக் கொண்டு சென்ற லொறியும் அதன் சாரதியும் மற்றவர்களும் தாண்டிக்குளத்தில் கைது செய்யப்பட்டனர்.

பொலன்னறுவ பகுதியில புலிகளின் முகாம்களை தாக்கி அழித்ததாக இராணுவம் கூறியுள்ளது. அங்கூரவெல பகுதியில் உள்ள மூன்று முகாம்கள் அழிக்கப்பட்டதாக கூறப்பட்டது.

# சிங்கள இளைஞர் கைது

புலிகளுடன் தொடர்பு என்ற குற்றச்சாட்டில் ஒரு சிங்கள இளைஞர் கைது செய்யப்பட்டிருக்கிறார். களனிப் பகுதியைச் சேர்ந்த இவரிடம் ரி 56 துப்பாக்கியும் 27 சன்னங்களும் பிஸ்டல் ஒன்றும் ஏழு கிரனேட்களும் கைப்பற்றப்பட்டதாக செய்திக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

# 11 வயதுச் சிறுமி கற்பழிப்பு

இளைப்பாறிய பொலிஸ் அதிபர் ஒருவரால் பதினொரு வயதுப் பெண் குழந்தை ஒருவர் கற்பழிக்கப் பட்டிருக்கிறார். அந்தக் குழந்தையின் சார்பாக ஆஜராக முன்வந்த சட்டத்தரணிக்கு கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது. அவரது மகனை கடத்தப் போவதாக பயமுறுத்தப் பட்டத்தை அடுத்து அவர் தான் வழக்கில் ஆஜராகப் போவதில்லை என்று கூறியிருக்கிறார். தான் இது குறித்து வருந்துவதாகவும் ஆனால் தான் எதுவும் செய்வதற்கில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் குழந்தையின் பெற்றோருக்கு சட்டத்தரணியை வைப்பதற்கு பணவசதி இல்லாததால் இந்த சட்டத்தரணி இலவசமாக ஆஜராக முன்வந்திருந்தார்.

ஆயினும் இந்தக் குழந்தையைக் கற்பழித்தது தொடர்பான விசாரணையில் அரசியல் தலையீடு காரணமாக சட்டமா அதிபர் இந்த குற்றச்சாட்டை நீதிமன்றத்தில் வாபஸ் பெற்றார். இதனால் இந்த விசாரணை நிறுத்தப்படும் அபாயம் உள்ளது.

ஆனால் இது குறிதது சர்வமதக் குழு ஆர்ப்பாட்டம் செய்ய உத்தேசித்துள்ளது.

# தனிநாடு பிரிவதை அமெரிக்கா விரும்பவில்லை

இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கு ஆதரவு வழங்குவதாக அமெரிக்க நிர்வாகம் தெரிவித்திருக்கிறது. அமெரிக்கா விஜயம் செய்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாஷிங்டனில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இலங்கையின் ஒருமைப பாட்டிற்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழஙகுவதாகவும் தனிநாடு அமைவதை எதிர்ப்பதாகவும் தெரிவித்துள்ளது என சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

பிரதமருக்கும் அமெரிக்க வெளிநாட்டமைச்சருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே இந்த உறுதி மொழி வழங்கப்பட்டிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி, அமெரிக்க நிதியமைச்சர் போன்றவர்களைச் சந்திக்கிறார். அத்துடன் வாஷிங்டன் போஸட், வாஷிங்டன் ரைம்ஸ் சஞ்சிகைகள் இவரைப் பேட்டி கண்டுள்ளன.

# அனுராவுக்கு ஐ.தே.க அழைப்பு

அரசியலிலிருந்து ஒதுங்குவதாகக் கூறி கட்சியிலிருந்து வெளியேறிய அனுராவை தங்கள் கட்சியில் சேருமாறு ஐ.தே.கட்சி கேட்டுள்ளது. ஐ.தே.க செயலாளர் சிறிசேன கூரே இந்த அழைப்பை விடுத்தார்.

சுதந்திரக்கட்சிக்கு அனுராவின் திறமை தெரியவில்லை என்றும் தாங்கள் அதைப் பயன்படுத்தலாம் என்றும் அவர் மேலும் கூறினார். உண்மையான ஜனநாயக தலைவர்களில் ஒருவரான அனுராவிற்கு ஐ.தே.கட்சியே பொருத்தமானது என்றும் அவர் கட்சியில் சேர்ந்தால் யாரும் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

அனுராவின் நண்பர்களில் ஒருவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவருடன் தொடர்பு கொள்ள முயன்றதாக செய்திகள் வெளிவந்தன. அத்துடன் ஜே.ஆரும் அவரைச் சந்தித்திருக்கிறார்.

# 2000 பேர் கொழும்பில் கைது

கொழும்பில் புலிகள் உள்ளதாகக் கூறி தற்போது இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குள்ளாக்கப் பட்டிருக்கிறார்கள். கடந்த பத்து தினங்களுக்குள் கைது செய்யப்பட்ட இவர்களில் 1500 பேர் விடுவிக்கப் பட்டதாகவும் மீதிப் பேர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாகவும் கொழும்பில் உள்ள பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பத்து தடைமுகாம்களில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

பிரேமதாசாவைக் கொல்வதற்கு வந்த கொலையாளியோடு மேலும் ஒன்பது பேர் வந்திருந்ததாகக் கூறி வெளிவந்த பத்திரிகைச் செய்திகளால் இந்த கைது நடந்திருக்கிறது. பிரேமதாசாவைக் கொல்லும் முயற்சி தோல்வியடைந்தால் மற்றவர்கள் அந்த செயலைச் செய்வதற்காகவே மீதி ஒன்பது பேரும் அனுப்பப்பட்டதாக செய்திகள் கூறின. இந்த செய்திகள் கடந்த வாரம் கொழும்புக் கடற்கரையில் மனிதக் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதன் பின்பே வெளிவந்திருந்தன.

கொழும்பில் கைது செய்யப்பட்டவர்களில் பலர் தாங்கள் ஏன் கொழும்பு வந்தார்கள் என்பதை விளக்க முடியாமல் உள்ளார்கள் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

தற்போது இது சம்பந்தமாக முத்துக்குமாரு மகேந்திரன் என்பவர் தேடப்படுகிறார். முன்னாள் பொலிஸ்காரரான இவர் புலிகளின் கையாள் என்றும் இவரைக் கண்டுபிடித்துக் கொடுத்தால் ஐந்து லட்சம் சன்மானம் என்றும் கடந்த திங்கட்கிழமை அறிவிக்கப் பட்டிருக்கிறது.

இவர் கொழும்பில் கைது செய்யப்பட்ட பல புலி எனச் சந்தேகிக்கப்படுபவர்களுடன் தொடர்பானவர் என்று பொலிசார் கூறுகின்றனர். இந்த சந்தேக நபர்களில் ராஜீவ் கொலை சம்பந்தமான ஒருவரும் அடங்குவார்.

கொழும்பில் இராணுவ தடைமுகாம்களும் அதிகரிக்கப் பட்டுள்ளன.

# பிரேமாவைக் கொல்ல 10 பேர்

பிரேமதாசவைக் கொல்லும் முயற்சியில் தோல்வியுற்றால் அந்த கொலையாளிக்குப் பதிலாகப் பயன்படுத்த மேலும் ஒன்பது பேரைப் புலிகள் அனுப்பியதாக கொழும்பில் பொலிசார் தெரிவித்துள்ளனர். கடற்கரையில் காணப்பட்ட மனிதக் குண்டின் பின்னர் இந்த தகவல்கள் பத்திரிகைகளில் வெளியாகின. சமீபத்தில் கைது செய்யப்பட்ட றெஜிமஸ் பெர்ணாண்டோ என்பவரின் தகவல்படியே இந்த விடயம் தங்களுக்கு தெரிய வந்ததாக பொலிசார் கூறுகின்றனர்.

ஐலண்ட் பத்திரிகையும் பத்துக் கொலையாளிகள் பற்றி தகவல் வெளியிட்டிருந்தது.

பத்து தற்கொலையாளிகள் ஒன்றரை றாத்தல் வெடிமருந்துடன் பிரேமதாசாவுக்கு அருகில் நின்றதாகவும் பிரேமதாசா கொல்லப்பட்ட பின்னர் பெர்ணாண்டோ தனது வெடிகுண்டுகளை கடலில் வீசியதாகவும் தெரிவித்தார் என்று பொலிஸ் அதிகாரியான லயனல் குணதிலக கூறியிருக்கிறார்.

# மாடு மிரண்ட ஜனாதிபதி

ஜனாதிபதி விஜேதுங்க வயலில் உழுவதற்கு சென்ற சமயம் மாடுகள் மிரண்டோடிய சம்பவம் ஒன்று குருநாகலையில் நடைபெற்றிருக்கிறது. கடந்த புதன்கிழமை நெல் விதைப்புக் கால விழா ஒன்றில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி குருநாகலை சென்றிருந்தார். தேசிய விவசாயிகள் தினத்தில் ஜனாதிபதி உழுவதற்கு தயாராகிக் கொண்டிருந்த போது நிருபர்களின் கமெராக்களின் விளக்கொளியில் மிரண்ட மாடுகள் திமிறி ஓட ஆரம்பித்ததில் பெரும் களேபரம் ஏற்பட்டது. அங்கு திரண்டிருந்த மக்கள் பயத்தில் சிதறியோடினர் எனினும் யாரும் காயமடையவில்லை.

ஜனாதிபதி பொறுமையுடன் இருந்து வேறிரு மாடுகள் வரும்வரை காத்திருந்து விழாவை ஆரம்பித்து வைத்தார்.

# இலங்கையும் கம்பியூட்டர் தொடர்பில்..

உலகளாவிய கம்பியூட்டர் தொகுப்பு அமைப்பு (Network) ஒன்றில் இலங்கையும் சேர்ந்து கொள்கிறது. இன்ரர்நெட் எனப்படும் கம்பியூட்டர் தொகுப்பு அமைப்பு உலகெங்கும் உள்ள பல நிறுவனங்களின் கம்பியூட்டர்களுடன் இணைப்பைக் கொண்டுள்ளது. இது விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள் போன்றவர்கள் கற்பிக்கவும் ஆய்வு செய்யவும் பயன்படுகின்ற பாரிய வலைப்பின்னல் அமைப்பாகும். இந்த தொகுப்பு அமைப்பில் இலங்கையும் சேர்ந்து கொள்கிறது. இதற்கான ஒப்பந்தத்தை வாஷிங்டனில் வைத்து அமெரிக்க உதவி ஜனாதிபதி அல் கோரும் இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கைச்சாத்திட்டனர்.

வளரும் நாடுகளில் உள்ள மக்களுக்கு மலிவான முறையில் கம்பியூட்டர் தொடர்புகளை ஏற்படுத்த இந்த அமைப்பு உதவுவதாகவும் அவர்கள் விஞ்ஞான முன்னேற்றங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள உதவுவதாகவும் அல் கோர் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், ஆய்வுகூடங்கள் என்பவற்றை இந்த தொடர்புடன் இணைப்பதன் மூலம் அமெரிக்க மக்களும் இலங்கை மக்களுக்கும் இடையில் ஒத்துழைப்பை உருவாக்க முடியும் என்றும் கோர் குறிப்பிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

# கொழும்பில் இராணுவம் தேடுதல்

கொழும்பில் புலிகளைத் தேட தற்போது இராணுவத்தினர் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். தினமும் கொழும்புக்குள் வரும் 1200 வாகனங்களை இராணுவத்தினர் சோதனையிட்டு வருகிறார்கள் என பாராளுமன்ற விவகார அமைச்சர் விமல் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார். அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இதுவரையும் மூன்று வாரங்களுக்குள் 53 புலிச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். பாதைகளில் தடைகள் அமைக்கப்பட்டதுடன் பல இடங்களில் இராணுவத்தினரும் பொலிசாரும் சோதனையில் ஈடுபடுகின்றனர்.

அவசரகாலச் சட்டம் 111க்கு 53 என்ற விதத்தில் பாராளுமன்றத்தில் நீடிக்கப்பட்டது.

# பத்திரிகையாளருக்கு மிரட்டல்

இராணுவ விடயங்களை எழுதி வரும் நிருபர் மீது கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டது தொடர்பாக ஃப்ரீ மீடியா அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் நிருபரான இக்பால் அத்தாஸிற்கு கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டதுடன் அவரது மகளைக் கடத்தப் போவதாகவும் தொலைபேசி மிரட்டல்கள் கிடைத்துள்ளன. ஆயினும் யார் தன்னைப் பயமுறுத்துகிறார்கள் என்பது பற்றி தனக்குத் தெரியவில்லை என்று அத்தாஸ் கூறியுள்ளார்.

சமீபத்திய இராணுவ நடவடிக்கையான யாழ்தேவி பற்றி கண்டித்து அத்தாஸ் எழுதியிருந்தார்.

இந்த மிரட்டல் குறித்து ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பாதுகாப்புச் செயலாளரிடமும் முறையிடப்பட்டுள்ளது.

# ஆளுனரை பதவி நீக்க கோரிக்கை

காலியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் இருவர் கொல்லப்பட்டது தொடர்பாக தென்மாகாண ஆளுனர் பதவி நீக்கப்பட வேண்டும் என்று மக்கள் முன்னணி கேட்டுள்ளது. தென்மாகாண ஆளுனர் பாக்கீர் மாக்கார் எதிர்க்கட்சியினர் நீதிமன்றத்தில் ஆட்சிப் பொறுப்பை வென்றெடுத்த பின்னர் அவர்கள் பதவி ஏற்பதற்கு இவர் தடையாக இருந்தார் என்றும் இதனால் ஆத்திரமடைந்த சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்த போது பொலிசார் சுட்டதில் இருவர் கொல்லப்பட்டனர் என்றும் இந்த மரணங்களுக்கு ஆளுனரே காரணம் என்றும் எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர்.

ஆனால் தான் நடுநிலையாக செயற்பட்டதாகவே மாக்கார் கூறுகிறார். ஐலண்ட் பத்திரிகையும் இவர் பதவி விலக வேண்டும் என்று கோரியிருக்கிறது.

# மீனவர் மரணம் குறித்து ஒப்பந்தம்

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்பட்டது சம்பந்தமாக இலங்கையும் இந்தியாவும் நடத்திய பேச்சுவார்த்தையில் இருநாடுகளும் இந்த கொலைகளை நிறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள உறுதி செய்துள்ளன என வெளிநாட்டமைச்சு கொழும்பில் தெரிவித்துள்ளது.


இருநாடுகளும் கூட்டாக விடுத்த அறிக்கையில் இந்தியா இது குறித்த தனது அக்கறையையும் மகிழ்ச்சியின்மையையும் தெரிவித்ததுடன் இலங்கை இந்தியாவின் நிலையை உணர்ந்து கொள்வதாகவும் ஆனாலும் கடற்படையினர் இந்திய மீனவர்கள் மீது பலப் பிரயோகம் செய்வதை தவிர்க்க முயல்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் அந்த அறிக்கையில் எவ்வாறு இந்த தாக்குதல்கள் தடுக்கப்படும் என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை.

இது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்த வெளிநாட்டு செயலாளர் பேனாட் திலகரத்தினவும் இரண்டு கடற்படை அதிகாரிகளும் இந்தியா சென்றிருந்தனர். இந்தியா இந்தச் சம்பவத்திற்கு நட்ட ஈடு கோரியிருந்தது.



# அவள் போன போக்கு

**சிதம்பரம் ஞா. வடிவேலனார்**



இந்தப் பள்ளிக்கூடம் முன்னம் இருந்ததற்கும் இப்ப இருக்கிறதற்கும் சரியான வித்தியாசம்.முந்தி கலவன் பாடசாலே இண்டைக்கு மகாவித்தியாலயம் கடந்த ஆறு மாதத்திக்க இப்படி மாறிப்போச்சு. தை ஒண்டு, மாசி ரெண்டு, பங்குனி மூண்டு, சித்திரை நாலு, வைகாசி ஐஞ்சு, ஆனி ஆறு சரியா ஆறு மாதம் இந்த மாதக் கடசியோட புதிய அதிபர் நாகம்மா ரீச்சர் வந்து ஆறு மாதம் ஆகுது. பழைய அதிபர் கமலம் போய் ஆறு மாதம் ஆகுது. கமலம் ஹெட் ரீச்சராய் இருக்கேக்க.. பள்ளிக் கூடம் பள்ளிக்கூடமாவா இருந்தது. ரீச்சர்மாரும் பிள்ளையளும் நேரம் கடத்திற இடமாயல்லா இருந்திச்சிது.

நானும் இந்தப் பள்ளிக்கு வந்து இருவது வருசம் ஆகப்போகுது. புது அதிபர் நாகம்மா ரீச்சர் வந்த பிறகு உள்ள முன்னேற்றம் முன்பு ஒருக்காலும் இருக்கயில்ல. நான் வேலைக்குச் சேர்க்க அந்த முடக்கில இருந்த கூடத்தை பழைய அதிபர் மு.இராமலிங்கம் கட்டினவர். அவர் இருக்கேக்க குறைஞ்சது ஐஞ்சு பிள்ளையளெண்டாலும் ஐஞ்சாம் வகுப்பு கொலசிப்புச் சோதனை பாஸ் பண்ணிப் போடுங்கள். அவர் இருக்கேக்கதான் கொலசிப்புக்கு சந்தையடி மிசன் பள்ளியை கேட்டுத்தான் என்று பெயர் எடுத்தது. பிறகு அதிபர் பதவியுர்வில யூனிவேர்சிற்றிக்க புகுந்திட்டார். அடுத்தது 'மூக்குச்சளி' அதுதான் பொன்னம்பலம் அதிபர், அவருக்குப் பிறகு சிவபாக்கியம் ரீச்சர். அடுத்ததா சிவபாக்கியம் ரீச்சர் மாறிப்போக நான் அற்றிங்அதிபராய் சிலகாலம் இருந்தனான். எனக்கடுத்ததா "பிரம்பர்" சிவசாமி வாத்தியார் இருவரும் பறவாயில்ல, எந்த நேரமும் கையில பிரம்போட தான் உலாத்துவார். பிள்ளையளிட ஒழுக்கத்தில சரியான கண்டிப்பான மனுசன். இவர் இருக்கேக்க காலையில 8.30 க்குள்ள பள்ளிக்குள்ள நிற்கவேணும். ஒரு நிமிசம் பிந்தினுச் சரி. அவன் வெள்ளக் காறன்தான்.

பிறகு வந்தவாதான் கமலம் ரீச்சர் ஒரு விளப்பமும் தெரியாது. ஆறு வரியமாய் அதிபராய் இருந்து கடத்திப் பேரட்டு பெஞ்சன் எடுத்தெண்டு கனடாவுக்குப் போய் தொலைஞ்சிற்று. பள்ளிக்கூடத்தை தலைகீழ் ஆக்கினது அந்த விசர் மனிசிதான். அவவின்ர மனிசன் டி.ஆர்.ஒ. அந்த மனிசனுக்கு ஊருக்க ஒரு மதிப்பு. மனிசன்ர செல்வாக்கில் கெட் டீச்சராய் வந்தா. ஒரு பேய் மனிசி. விளக்கம் குறைவானது. அவா இருக்கேக்க கல்விக்கந்தோரில இருந்து ஒரு அதிகாரிமாரும் வாறதில்ல. ஆடிக்கொருக்கா, அமாவாசைக் கொருக்காவெண்டாலும் வருவாங்கள் எண்டு பார்த்தா அவா அதிபராய் இருந்த காலத்தில் ஒருக்காலும் வந்ததா நான் அறியேன். அவங்க அவங்க தங்கட தங்கட கந்தோர்வளிய இருந்து கொண்டு இண்டைக்கு இந்தப் பள்ளிக்குப் போனேன் அண்டைக்கு இந்தப் பள்ளிக்கு விசிற் பண்ணினேன் போக வரத் தூரம் பத்து மைல் எண்டு தங்கட தினவேடு வழியில பதிஞ்சு போட்டு பிரயாணப் படி அரசாங்கத்திட்ட இருந்து வாங்கிப் போடுவாங்கள் பரதேசிப்பயலுகள்.

இப்ப நாகம்மா ரீச்சர் தான் கெட்ரீச்சர். அவா எனக்கு ஒருவழியில மச்சாள். என்ர இவாவிட ஒண்ட விட்ட தம்பி கட்டின பக்கத்தால பார்த்தா தங்கச்சி முறை. அவா எனக்கு முதலே சொந்தம் எண்டதற்கு ஆக சொல்லேல. அவா வந்தபிறவுதான் பள்ளிக்கூடம் பள்ளிக்கூடமாய் இருக்குது. இவா வந்ததும் வராததுமாய் இந்த இருமாடிக்கட்டிடத்தைக் கட்டிப் போட்டா இந்த மாடிக் கட்டிடம் கட்டப்பட்ட பாடு கடவுளுக்குத்தான் தெரியும். கல்விக்கந்தோரில இருந்த பெரியாக்களைப் பிடிச்சு ஒருமாதிரிக்கட்டி எழுப்பிற்ரு. இராமலிங்கம் அதிபர் கட்டின முகப்புக் கட்டிடத்தை உடைச்சுத்தானே அந்த இடத்தில புதிதாய் கட்டம் எழுப்பினவா. அதால இந்த இருமாடிக் கட்டிடத்துக்கு "அதிபர் மு.இராமலிங்கம் மண்டபம்" என பெயரும் சூட்டி திறப்புவிழாவைப் பெரிசாக் கொண்டாடினவா முந்தி இவா இருந்த கோட்டக்காடு நமசிவாய தேசிகர் பள்ளிக்கூட சுத்து மதிலும் இவா அதிபராய் இருக்கேக்கதான் கட்டினது. அந்த நேரத்தில கவுமேந்து ஒரு சல்லிக்காசும் பள்ளியளுக்கு கொடுக்கிறது இல்ல. கல்விக் கந்தோர் வழியாலும் சொல்லிப் போடுவாங்கள் இப்ப நிதி ஒதுக்கிறது இல்லை எண்டு. பிறகு மருதப்பு பணிப்பாளராய் இருக்கேக்க அவரைப் பிடிச்சு ஒருமாதிரியாகக் கட்டிப்போட்டா. அந்த நேரத்தில நம்மட சனம் எல்லாம் என்ன பறைஞ்சவ தெரியும்தானே. இந்த சனங்களிட வாய்க்கு கடசியில பொரியும் இல்லாமத்தான் போவினம். இவவுக்கும் கல்விப் பணிப்பாளர் மருதப்புவுக்கும் தொடுப்பு எண்டு பாருங்க. இந்த அடியறுந்த சனத்தின்ர குணத்தை சந்திக்கடை கனகர் கூட ஒருக்கா என்னட்ட சொன்ன ஞாபகம் "ரீச்சர் மருதப்புவோட இருந்தால் என்ன சட்டாம்பிள்ளை சுந்தரத்தோட இருந்தாலென்ன நம்மட பள்ளிக்கூடம் வளர்ந்தா சரி" இப்படி இந்தச்சனம் ஒண்டும் உதாவது.

இப்ப ரீச்சர் நாகம்மா எனக்கு ஒரே உபத்திரவம் தான். உபத்திரவம்

எண்டது என்னை உப அதிபராய் இருக்கட்டாம். நான் எனக்கு உபத்திரவம் தராதயுங்க என்று அவா கேட்டாத்தானே. உப அதிபரென்ன அதிபரா கூட வருவீங்க எண்டு சொல்லுரு. நான் அண்டைக்கு கண்டிப்பாய் சொல்லிப்போட்டன். ஆறு அந்த மனிசி என்ன விட்ட பாடில்ல சேர் நீங்க படிச்ச நீங்கள் இப்படிச் சொல்லக்கூடாது. அதுவும் அண்ணுமலே யூனிவர்சிற்றி தமிழ் வித்துவான் கடந்த இருபது வருசமாய் இங்கதான் வேலே பார்க்கிறீங்க. அதோட இந்தப் பள்ளியின்ர புகழ் பூத்த பழைய மாணவன் அட சிவ சிவா நீங்கள் தமிழ்ப் பழமெல்லே இப்படி மறுக்கலாமா? எத்தனை பேர் இந்த வேலேக்கு ஆளாய் பறக்கினம். தகுதியிருந்தா குடுக்கலாம். அவைக்குத்தானே அது இம்மியளவும் இல்லயே! நீங்கள் என்னெண்டா... திறமையுள்ளவனுக்கு தன்ர திறமை தெரியாது எண்டு சொல்லுறவை.. சேர். அது உங்கள் அளவில் உண்மை. என்ன இருந்தாலும் நீங்கதான் உப அதிபர். சிலவேளையில அதற்கு மேலயும் வருவீங்க சரி நான் வாறன் சே" எண்டு சொல்லிற்று அவா போயிற்ரு. எனக்கு எனித்தான் ஏழரை பிடிக்க போகுது. நான் உப அதிபராய் வந்தா நம்மட சனம் என்ன கதைக்கும் எண்டு எனக்கெல்லா தெரியும். முந்தி நான் கமலா ரீச்சரோட அது இது என்று சொன்னவளவை இப்ப விட்டிடுவாளவையா? வீட்ட போனு அங்க என்ர மனிசி சொல்லும் பொம்பிளேக்கு கீழ இருந்து வேல செய்யிறீங்க நீங்க எல்லாம் எனக்கு முதலாளியாய் வாறீங்க எண்டு. என்னத்தை நான் செய்யிறது.. இருபது வருசமாய் இந்த பள்ளியில சேர்ந்து வேலே செய்யிறன் நான் தான் உப அதிபராய் வரவேணும், ஊர்சனம் விட்டுடுமா? ஏன் கனக்க என்ர வீட்டுக்காறியிட்ட தப்பமுடியுமா? வாத்திவேலே நாய் வேலே.. உத்தரிச்சு தொலேக்க வேணும் வேசம் போட்டு குலேக்கத்தானே வேணும்.

இவள் மகேஸ் ரீச்சர் என்னத்துக்கு பள்ளிக்கு வாறவள் எண்டு எனக்குத் தெரியாமக் கிடக்கு.. ஒரு வாத்தி அடுத்த ரீச்சர்மாரோட கதைக்க விடமாட்டாள். கதைச்சது கண்டால், அவருக்கும் அவாக்கும் அது இது எண்டு கதை கட்டிப் போடுவாள். ஏன் இஞ்ச வாருள் எண்டு தெரியாமல் கிடக்கு

இப்ப நாகம்மா ரீச்சர் வந்ததால பள்ளிக்கூடம் எவ்வளவு முன்னேற்றம். .. இருமாடிக் கட்டிடம் கட்டினு ஐந்நூறு இருந்த பிள்ளேயளின்ரை எண்ணிக்கையை எண்ணூறுக்கினு.. ரீச்சர்மார் சிலரை எடுத்துப் போட்டா. ஸ்ராப் படிக்க தினசரி பேப்பர் போடுரு. குருபூசை பெரியார் தினம்

16ம் பக்கம் பார்க்க...

# மரண அறிவித்தல்



## செல்லம்மா பொன்னுத்துரை
### (கோண்டாவில் மேற்கு)

**பிறப்பு**
**19.07.1923**

**இறப்பு**
**15.10.1993**

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த கந்தையா பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் இராசேந்திரம் (மன்னூர்) ராஜகௌரி (கொழும்பு) சௌந்தரி (கோண்டாவில்) ஜெகதீஸ்வரி (கோண்டாவில்) கலாநிதி (கனடா) தயாநிதி (கோண்டாவில்) சிவலிங்கநாதன் (கனடா) சிவநேசன் (கோண்டாவில்) ஆகியோரின் அன்புத் தாயாருமான திருமதி செல்லம்மா பொன்னுத்துரை கோண்டாவிலில் காலமானுர்.

இவர் ஆச்சிப்பிள்ளே நமசிவாயம் தம்பதியினரின் அன்பு மகளும் ஐயாத்துரை, ராசம்மா, பவளம்மா, யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தையா தம்பதிகளின் அன்பு மருமகளும் விமலாதேவி, துரைராஜா (ஜேர்மனி), அரியரத்தினம் (கோண்டாவில்) மகேந்திரன் (கோண்டாவில்) சிறிஸ்கந்தமூர்த்தி (கனடா) தக்சினி (கனடா) ஆகியோரின் மாமியாரும் ரேணன், சுபோ, அஞேசங்கர், ரெஜிசங்கர், விஜயசங்கர், உதயசங்கர், துஸ்சாயினி, தனேஸ், ஜக்சனு, கௌதமன், விதுரன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவர்.

இவ்வறிவித்தலே உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்கப்படுகிருர்கள்.

சிவலிங்கநாதன்
467 5270

தகவல்: சிறிஸ்கந்தமூர்த்தி
(416) 467 5723

# இப்படியும் செதிகள்

## ஜனமித்திரன்

***1993 அக்டோபர் 10 ம் திகதி 'ராவய' பத்திரிகையில் வெளியான 'செய்தி மனிதனின் குறிப்புகள்' என்னும் பகுதியை தழுவி எழுதப்பட்டது. நன்றி ராவய***

வடக்கில் இடம்பெறும் யுத்தத்தால் இராணுவ வீரர்கள் நூற்றுக் கணக்கில் உயிரிழந்து செய்தியை கேள்விப்பட்டவுடன் அதிர்ச்சியுற்றேன். என்ன செய்யலாம் என்பதை யோசிக்கக் கூட முடியவில்லை. யுத்தத்தால் உயிரிழந்த இராணுவ வீரர்களின் சாவீட்டிற்கு செல்லக் கூடியதே என்னால் இயன்ற ஒரே ஒரு காரியமாகும்.

இவ்வாறான மரணச் சடங்கு ஒன்றின்போது எமது தேசத்தில் வாழும் விஷேஷமான நபர்கள் பலருடன் இராணுவ தீர்வுபற்றி உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. படை வீரர்கள் மட்டுமன்றி தேசிய உணர்வுள்ள அனைவரும் போர்முனைக்கு செல்லவேண்டும் என்பதே உரையாடப்பட்ட விடயமாகும்.

இவ் உரையாடலின் போது, "காயப்படும் படை வீரர்களுக்கு நான் சிகிக்சை அளிப்பேன்" என அறிஞர் குணதாச அமரசேகர கூறினார்.

"தேசிய சிந்தனையை (ஜாதிக சிந்தயை) ஊட்டி எமது படைவீரர்களை தைரியப் படுத்த முடியும் என்னால்" பேராசிரியர் நலீன் டி சில்வா கூறினார்.

"நான் எமது பொடியன்களுக்கு எமது நாட்டின் வீரம் செறிந்த வரலாற்றை நினைவு படுத்துவேன்" என சிங்கள ஆரக்ஷக முன்னணியின் தலைவர் காமினி ஜயசூரிய கூறினார்.

"அப்படியென்றால், மிகவும் நல்ல முறையில் யுத்தத்திற்கு தலைமை வழங்க என்னால் முடியும்" ஜனாதிபதி விஜேதுங்க கூறினார்.

"நீங்கள் எல்லோரும் பயமின்றி யுத்த முனைக்கு இறங்கு வீர்களாயின் நானும் பயமின்றி முன்னணியில் இருப்பேன்" இராணுவ தளபதி கூறினார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இவ்யுத்தம் பற்றி எமது தேசமக்களுக்கு அறிவிக்கும் பாக்கியம் பத்திரிகையாளன் என்ற ரீதியில் எனக்குக் கிட்டியது.

சிங்கத் தோலால் தயாரிக்கப்பட்ட கம்பீரமான சீருடையும் ஆயுதங்களும் உடனடியாக எமக்குக் கிடைத்தன. தொலைக்காட்சியிலும் வானொலியிலும் யுத்த கீதம் இசைக்க விமானப்படையின் சொப்பர்கள் மூலமாக கிளாலி யுத்த முனைக்கு அருகில் இறக்கப் பட்டோம்.

யுத்த முனையில் போர் மும்முரமாக நடைபெற்றது. இடி விழுவதுபோல் குண்டுகள் போடப்பட்டன. ஓய்வேதுமின்றி வெடிச்சத்தம் காதைத் துளைத்தது. மோட்டார் வெடியொன்று எமக்கு அருகில் வீழ்ந்து வெடித்தது. நடுங்கி, நடுங்கி, புத்தபிரானை நினைத்துக் கொண்டே போர்முனைப் பக்கத்தை நோக்கி கமராவை பொருத்தினேன்.

ஜனாதிபதி விஜேதுங்க திடீரென சிங்கத் தோலைக் கழட்டி எனது தலையின் மேல் போட்டார். "ஐசே, நான் இங்கே இருந்து கொண்டு நாட்டை ஆள்வது எப்படி? நான் இருக்கவேண்டியது அங்கல்லவா!" எனக் கூறிக் கொண்டே பின் பக்கமாக திரும்பினார்.

" இப்படியான வேலைகளை அவசரப்பட்டு செய்ய முடியாது. யுத்தத்திற்கான ஒழுங்குகளை நாடு பூராவும் மேற்பார்வை செய்வது தான் சரியான வேலையாகப் படுகிறது" எனக் கூறி சிங்கத்தோலைக் கழட்டி எனது தோளின் மேல் வீசி பின் பக்கமாக பார்த்தார் சிங்கள ஆரக்ஷக முன்னணி தலைவர் காமினி ஜயசூரிய.

"கொழும்பில் இருந்து கொண்டுதான் யுத்தத்தை நன்றாக வழிநடத்த முடியும்" எனக் கூறிய இராணுவத் தளபதியும் சிங்க தோலைக் கழட்டி என்னிடம் தந்ததோடு மறுபக்கம் திரும்பினார்.

அவர்களுடைய சிங்கத் தோலின் பாரத்தை தாங்கமுடியாத நான் நிலத்தில் வீழ்ந்ததோடு மூச்சும் திணறியது.

ஒருவாறாக அவசரப்பட்டு எழும்பி மூச்சு வாங்கிக்கொண்டே சுற்றிப் பார்த்தேன்.

மூவரும் மணலில் புதைந்து, புதைந்து, திரும்பிச் சென்றுகொண்டிருந்தனர்.

பற்றைக்குள் இருந்து புலி ஒன்று வருவதைக் கண்ட எனக்கு வேர்த்துக் கொட்டியது. புலியைக் கண்டவுடன் அறிஞர் குணதாச அமரசேகரவும் பேராசிரியர் நலீன் டி சில்வாவும் அவ்விடத்திலிருந்த பனை மரத்தில் ஏறிக் கொண்டனர். என்ன செய்வதென்றே விளங்கிக் கொள்ள முடியாத நிலையில் நான் நிலத்தில் வீழ்ந்து செத்த மனிதனைப் போல் கிடந்தேன்.

சிறிது நேரம் எதுவுமே நடக்கவில்லை. நான் மெதுவாக கண்ணைத் திறந்து பார்த்தேன். என்ன ஆச்சரியம்! புலி எனக்கு கிட்ட இருந்து கொண்டு இளைப்பாறியது. சிறிது நேரத்தில் அது புலித் தோலைக் கழற்றி நெற்றியிலிருந்த வியர்வையை துடைத்தது.

காலடிச் சத்தம் கேட்டது. புலிக் கூட்டமே வருகிறது என எண்ணி நான் பீதியடைந்தேன். ஆனால் அவ்விடத்துக்கு வந்ததோ சிங்கள சிப்பாய் ஒருவன். இது எனக்கு புதுமையாக விருந்தது. புலி அவனைப் பார்த்து 'வணக்கம்' என்றது, அவனும் புலியைப் பார்த்து "ஆயுபோவங்" என்றான்.

என் கண்ணை என்னாலேயே நம்பமுடியவில்லை. உற்றுப் பார்த்தேன். 'நண்பனே உம்முடைய ஆட்கள் கனிசமானவர்கள் இறந்து விட்டார்கள், எங்கள் பக்கத்திலும் கனிசமான தொகையினர் உயிரிழந்துவிட்டனர்" எனக் கூறிய

***19ம் பக்கம் பார்க்க..***

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், மரக்கறி வகைகள், கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற ...
தமிழ், ஹிந்தி வீடியோப் படங்கள் வாடகைக்குப் பெற...

# A.R.K MARKET

## 31-35 ST.DENNIS DR
## (DON MILLS/EGLINTON)

**சரஸ்வதி பூஜையை ஒட்டி**
**மலிவு விற்பனை**

| | | |
|---|---|---|
| அவல் | ~~1.49~~ | .99 |
| சக்கரை | ~~1.99~~ | 1.49 |
| பச்சைப்பயறு | ~~1.99~~ | 1.49 |
| கடலை | ~~1.99~~ | 1.49 |
| சிவப்புப் பச்சை | ~~1.99~~ | 1.69 |
| சவ்வரிசி | ~~1.99~~ | 1.49 |
| மாதாளை | ~~1.49~~ | .99 |

★ பால், பழங்கள்,
உடன் மரக்கறிகள்,
இறைச்சி மீன்
வகைகள் ★ கனடிய
உணவுப் பொருட்கள்
★ Frozen seafood

**CD, Audio**
**மலிவு விற்பனையில்**

பழைய, புதிய தமிழ் வீடியோ
படங்கள் வாடகைக்கும்
விற்பனைக்கும்
(ஒரிஜினல் பிரதிகள் மட்டும்)

# ஏ.ஆர்.கே மார்க்கட்

## (416) 421 3429

## ஜெயந்தீஸன் குட்டிக்கதைகள்

# கட்

## (இதுவும் ஓர் இலக்கிய சமாச்சாரம்)



நந்தினியின் .... திருமதி ஒட்டகச் சிவிங்கியின் தொல்லை தாங்காமல் நான் எனது போனைக் கட் பண்ணி விட்டேன். கட் என்றால் ஒன்றும் உத்தியோக பூர்வமான கட் அல்ல. புளக்கை கழட்டி வைத்துள்ளேன். யாருக்காவது போன் பண்ண வேண்டியிருப்பின் பூட்டுவேன். பேசி முடிந்ததும் கட்.

எல்லாம் மாஜிக்காதலி அனீஷாவின் காதல் கவிதைகளைக் 'தாயகத்தில்' போட்டதால் வந்த வினை. இதெல்லாம் நந்தினியின் மனதில் எள்ளையும் கொள்ளையும் வெடிக்கப் பண்ணும் எனத் தெரிந்திருப்பின், அனீஷாவின் பெயரை இலக்கிய உலகினுள் இருட்டடிப்பல்லவா (ஏதோ இந்த உலகத்தில் பேரொளி பொங்கிப் பெருகுகின்றது எனத் தப்புக் கணக்குப் போட்டு விடாதீர்கள்) செய்திருப்பேன். நான்கைந்து கவிதைகளுடன் அனீஷா பேரும் புகழும் பெற்றுவிட்டாள். இனி திலீபன் நகர் சென்று பிரதட்டை பிடித்தாலும், அவளது புகழை என்னால் அசைத்து விடமுடியாது. தட்டித் தவறி அவள் தற்கொலை செய்து விட்டால் நாசமறுத்த கதையாகத்தான் இருக்கும். பிறகு அவள் அமர கவிஞை ஆகிவிடுவாள். அவள் தற்கொலை செய்தது சரியா, தப்பா என்ற புரட்சிகரமான ஆய்வுகள் எல்லாம் நடக்கும்....

என்னைக் காணும் இலக்கிய நண்பர்கள் எனக்கு விசருட்டும் சேதிகளையே சொல்லுகின்றனர். "அனீஷாவின்ரை கவிதகளை 'தாயகத்'திலை படிச்சனுங்கள். நல்ல ஹெவியா இருக்குது..." என்பர் ஒரு சிலர். "எங்கடை புத்தகத்திலையும் அவவிட கவிதையளைப் போடப்போறம் ரெலிபோன் நம்பர் தாங்கோ" என்பர் வேறு சிலர். இன்னொரு வட்டு வந்து "அனீஷா கவிதைகளில் இயக்கவியலின் பாதிப்புகள்" என்று ஆய்வுக் கட்டுரை எழுதுதாம். அதுவும் பிரெஞ்சு பாஷையிலையாம். எழுதுவினம், ஒம் நல்லா எழுதுவினம். பெட்டையள் எழுதினால் போதும், உடனை வரியுக்கை வரி புகுந்து ஆய்வு செய்ய வெளிக்கிட்டிடுவினம். உவை என்ன ஆய்வு செய்யினம் எண்டது நான் வணங்கும் ஒபேவில்லியர் பிள்ளையாருக்குத்தான் தெரியும். உந்த அறுவாங்களுக்கு எதிரா செய்வினை சூனியம் செய்யவேணும். பில்லி சூனியம் பிடிச்ச ஆரும் உங்களுக்குத் தெரிஞ்சா எனக்கு ஒருக்கா அறியப்படுத்துங்கோ...

.. நானும் இவ்வளவு காலமா எழுதி வருகிறன். ஒரு நாள் பாத்தெண்டாலும் வந்து ஒரு விமர்சனம் சொன்னுங்களா? சரி, படிச்ச தெண்டும் காட்டிக் கொண்டாங்களா? இப்ப யென்னெண்டா, அனீஷாவின்ரை கவிதையளைக் கண்டோன்னை அட்ரஸ் கேக்கினம், போன் நம்பர் தேடினம்....

இரவு ஒரு மணிக்கு ஒருவர் அடிச்சார் (இது போன் கட்டிற்கு முந்தைய சேதி)

"அண்ணை, நான் இப்பதான் கவிதையள் எழுதத் துவங்கியிருக்கிறன். அதுகளை ஒருக்காத் திருத்தவேணும்...."

எனக்குச் சந்தோஷம்.. என்னையும் ஒருவன் இலக்கியவாதியாக அங்கீகரித்துவிட்டானே....

"தம்பி, நாளைக்குப் பின்னேரம் இங்கை வாரும். திருததித்தாறன்."

"அண்ணை, உங்கடை பழைய அவவிட்டைக் குடுத்துத் திருத்த வேணுமெண்டதுதான் என்ரை கனவு."

கனவோ? எனக்கு விசர்தான் வந்தது.

"தம்பி, அவவுக்கு போன் இல்லை..."

"அண்ணை, கவிஞர்கள் எப்பவும் வறுமையிலைதான் வாழுறவை... அனீஷா போன்ற சிறந்த கவிஞர்களுக்கு ரெலிபோன் கட்டாயம் தேவை. அவ போன் பூட்டினா, கொம்யூனிக்கேஷன் செலவை நான் பார்ப்பன்.'

'தம்பி, நானும் ஒரு இலக்கியவாதி. கவிதையள் எழுதுறனான். என்னிட்ட போன் இருக்கு. ஆனா இப்ப வறுமையில் வாழுறன். என்ரை கொம்யூனிக்கேஷன் செலவுகளையும் நீர் பொறுப்பு...."

அவ்வளவுதான், டக்கெனத் தொடர்பைக் கட் பண்ணினார்.

எல்லோரும் அனீஷா மீது காட்டிய பட்சத்தைப் பார்த்ததும், மீண்டும் அவளைப் புதிதாகப் காதலிக்க வேண்டும் என்ற ஆசை வந்து எனது பிடரி மயிரைப் பிடித்து இழுத்தது. இன்னொருவனுக்கு வாழ்வு கொடுத்துள்ள அவளை லவ் பண்ணுவது தமிழ்ப் பண்பாட்டில் இல்லை என்பதால் ஓடிப் போய், அருகிலிருந்த BAR இல் ரெண்டு பியர் அடித்துக் கவலையைத் தீர்த்தேன்.

* * *

அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் விழித்து விடுகின்ற வியாதி எனக்குண்டு. ஆனால், 10 மணிவரை கட்டிலை விட்டு எழமாட்டேன். அறுந்து போன கனவின் அந்தலையைத் தேடிப் பிடித்துக் கனவினைத் தொடர விடுவேன். அதாவது அறுந்த திலீஸை ஒட்டி ஓடவிடும் படம் போல. எனது வேலை பறிபோனதற்குக் கனவும் ஒரு காரணம். இதனால் நான் இப்போது சிக்மண்ட் பிராய்டின் எதிரி.

அன்று நான் விழித்தவுடன். போன் அடித்தது. இது வழமைக்கு மாறானது. யாரோ மர்மக்குரலில் எனது அரசியல் கொள்கைகளை விமர்சிக்கப்போகின்றனர் போலும் என நினைத்தபடி எடுத்தேன்.

"உம்மோடை நான் முக்கியமான விஷயம் ஒண்டு கதைக்கவேணும்..."

அது நந்தினி. நான் திடுக்கிட்டேன். ஒட்டகச் சிவிங்கிக்கு ஹாட் அற்றாக் ஏதும் வந்து விட்டதோ எனப் பதை பதைத்து துள்ளி எழுந்தேன்.

"அவருக்கு ஏதும் நடந்திட்டுதோ?"

"அவருக்கு ஒண்டும் நடக்கேல்லை. இரவு வீட்டையும் வரேல்லை. ஆரும் பொறுக்கியளோடை சேர்ந்து குடிச்சிட்டு அங்கினேக்கையே படுத்திருப்பார்..."

"நந்தினி, உமக்குச் சத்தியம்

22ம் பக்கம் பார்க்க..

# பென் சூரியனின் கட்டுக்கதைகள்

# 'ஒன்று விட்ட' மச்சான்



ஜெயந்தீஸன் எனக்கு
ஒன்று விட்ட மச்சான்
என்றால் நம்ப மாட்டீர்கள்.
அது ஒரு பெரிய கதை..
சே.. குட்டிக்கதை.
ஒரு நாள் கலையும் அழகும்
செழித்து வாழும் பாரிஸ்
மாநகரில் வீதியால் சென்று
கொண்டிருக்கும் போது..
சும்மா போய்யா.. இவரு
பெரிய அல்லல்லாவோ
அலையுவ சல்லம்.. வீதியால்
சென்று
கொண்டிருந்தாராம். பெரிய
வரலாற்றில் ஒர் ஏடு
சொல்றார்...
அமைதி.. அமைதி..
தமிழர் மாதிரி ஒருவரைக்
கண்டேன். முதலில் இவர்
தமிழனாய் இருக்குமோ
என்ற சந்தேகத்தில்
அவரைப் பார்த்தேன்.
தமிழர் என்பதை உறுதி
செய்ய வேறு எந்த
அடையாளமும்
தேவையில்லை. கையில்
கொப்பி இருந்தால்... அது
தான் வீடியோக் கொப்பி
இருந்தால்.. தமிழனே
தான். வேறு எவனையாவது
வீடியோவுடன் வீதிகளில்
கண்டிருக்கிறீர்களா? இவர்
கையில் தாயகம்... அடடே.
தமிழர் தான். முகம் தெரிந்த
முகமாய் இருந்தது. பின்
தொடர்ந்தேன். ஒரு கணம்
என்னைத் திரும்பிப் பார்த்து
விட்டு சென்ற அவர் மாலா
கடைக்குள் நுழைந்தார்.
மெதுவாய் பின்
தொடர்ந்து..
இலங்கையிலிருந்து
விசேடமாகத்
தருவிக்கப்பட்ட
புழுக்கொடியல் ஒன்றை
பார்வையிட்டபடி
நோட்டம் விட்டேன்.
அவரோ என்னைப்
பார்த்துக் கொண்டிருந்தார்.
மெதுவாக வந்து 'என்ன
ஐசே.. நீர் என்னை
ஃபொலோ பண்ணிறீர்..
உமக்கு செவிட்டில ஒண்டு
விட்டனெண்டா' 'ஐயோ..
நான் புகலிடப் புலியில்லை..
. உம்மை எங்கேயோ
கண்ட மாதிரி இருக்கு...
நீர் முந்தி ...... ஸ்கூல்ல
படிச்சனீரோ..' 'ஓம்.. நீரும்
அங்க படிச்சனீரோ' 'ஓம்'
'நீ ஜெயந்தீஸன் அல்லோ'
'அப்ப நீர்' 'அடே நான்
தான் பென் சூரியன்' 'டேய்
பென் சூரியா' என்று
கூவிக் கொண்டு என்னைக்
கட்டி அணைத்த
ஜெயந்தீஸன் என்
பிடரியில் ஒன்று விட்டு
'ஏன் மச்சான், நீ முதல்ல
சொல்லேலை,. விசயம்
தெரியாமல் ஆரிவர்
பின்னால வாறார்,
இன்டைக்கு வளமா
வாங்கப் போறார் எண்டு
நினைச்சுக் கொண்டிருந்தன்'
என்று பிடரியில் ஒன்று
விட்டான். 'டேய் மச்சான்,
பிரான்சுக்கு வந்து
எவ்வளவு காலம்' என்று
இருவரும் மாறி மாறி
பிடரியில் ஒன்று விட்ட
மச்சான்மார் ஆகினோம்.
'மச்சான் நான்
கனடாவுக்கு போகப்
போறன்' 'ஏண்டா உன்ரை
கேஸ் றியெக்டே... உனக்கு
காயம், கீயம் எதும்
இருந்தால் சொல்லு..'
'அப்ப நீ தான் தாயகத்திலே
எழுதிறது. அதுதான்
உன்ரை கதை பார்த்தனான்
தாயகத்தில்' 'ஓ.. நீ
தாயகமும்
வாசிக்கிறனியோ' நான்
பிடரியில் ஒன்று விட்டு
'என்ன அப்பிடிக்
கேட்டிட்டாய். தாயகம்
கிடைச்சால் வாசிக்கிறது
உன்ரை கதையைத் தான்'
'அடே.. அப்ப கனடா
போறாய் எண்டால் அங்க
கியூறியஸ் இருக்கிறான்..
அவனிட்ட போ' 'ஐயோ,
ஆளை விடப்பா, அந்த
அறுவான்ரை அறுவை
தாங்கேலாமல் கிடக்கு.
அதுக்குள்ள நேர கண்டால்'
'என்ன செய்யிறியோ.. ஏது
செய்யிறியோ.. நேர
தாயகத்துக்கு போறாய்..
நான் இங்க பாரிஸ்
கதைகளை எழுதிற மாதிரி,
நீ கனடா கதைகளை எழுத
வேணும்..' தடால் என்று
ஜெயந்தீஸன் காலில்
விழுந்து 'ஆசியருளுங்கள்
குருவே' என... 'பென்
சூரியா இந்தா பிடி சாபம்.
. என் திறமை உனக்கும்
கிடைக்கக் கடவதாக'
என்று கூற..
மூலையில்
மிளகாய்த்தூள் பைக்கட்
ஒன்றுடன் நின்ற பெண்
ஒருத்தி ஓடிவந்து 'ஜெயா..
என்ன இது.. இப்படி நீர்
பெண்களை
கொச்சைப்படுத்துறது
பிழை... பெண்ணிலை வாதி
எண்டு சொல்லிக் கொண்டு
நீரே இப்படிச்
செய்யலாமோ' என்று
சொல்ல... 'பென் சூரியா..
இதுதான் கவிஞை
காஞ்சனதேவி.. பிரபல
பெண்ணிலை வாதி' என்று
எனக்கு ஜெயந்தீஸன்
அறிமுகப்படுத்த... 'அக்கா..
இதென்னக்கா.. இந்த
பிராண்ட் மிளகாய்த் தூளே
பாவிக்கிறனீங்கள்?' என்று
நான் வினவ.. 'ஓம் தம்பி,
என்ரை அவருக்கு இந்த
தூள் தான் பிடிக்கும்' என்ற
கவிஞை, ஜெயந்தீசனின்
மீது கண்ணகிப்
பார்வையுடன் 'அதை
விடும்.. எனக்கு இப்ப
ஒண்டு தெரிய வேணும்..
நீர் ஒரு போலிப்
பெண்ணிலை வாதி' என்று
சத்தம் போட.. 'காஞ்சி..
ஏன் என்னோட
கோபிக்கிறியள்' 'அதை
என்ரை வாயால
என்னண்டு சொல்றது'
சொல்ல முடியாமல்
காஞ்சனா வெட்கப்பட,
விளங்க முடியாமல்
ஜெயந்தீஸன் முழிக்க...
கொஞ்ச நேரம் சென்றால்
சித்திரத்தில் பெண்ணெழுதி
சீர்படுத்தும் மானிலமே,
ஜீவனுள்ள
பெண்ணினத்தை வாழ விட
மாட்டாயோ என்று பாடி
விடுவாரோ என்ற பயம்
வந்தது.
எனக்கு விசயம்
விளங்கி விட்டது. 'அக்கா,
நீங்கள் நினைக்கிற மாதிரி
இல்லை.. என்ரை பெயர்
பென் சூரியன். நான் ஒரு
காலத்தில பெரிய
எழுத்தாளனாவேன் என்று
நான் பிறந்த நேரத்தில் ஒரு
சாமியார் சொன்னாராம்.
இதால பென் சூரியன்
எண்ட பெயரில
இஸ்ரேலில் ஒரு தலைவர்
இருந்ததாலும் பேனாவைக்
கூர்மையாகப் பாவிப்பவன்
என்பதாலும்,எனக்கு பென்
சூரியன் என்று பெயர்
வைச்சவை. நீங்கள்
நினைக்கிற மாதிரி என்ரை
பெயர் பெண் சூறியன்
இல்லை' என்று கொள்கை
விளக்கம் அளிக்க..
தடால்.. ஜெயந்தீஸன்
மயங்கி விழுந்தார்.

சகல விதமான மீன் வகைகள், இறைச்சி வகைகள், மரக்கறி வகைகள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள...

**Antony Brothers**
**Peoples Market**
1472 Queen St West
Tel:516 3903


**மாபெரும் மலிவு விற்பனை**

| | |
|---|---|
| சிவப்புப் பச்சை அரிசி 1கிலோ | 1.49 |
| முந்திரி வத்தல் 200 கி | .99 |
| சக்கரை 450 கி | 1.49 |
| பயறு 2 றாத் | 1.49 |

**Antony Brothers**
**Fashion House**
1484 Queen St West


| | |
|---|---|
| Ladies Clothes (Front open) | $13.99 |
| Maestro Phones (Call Display) | $99.99 |
| 8 pc நிறைகுடம் செட் | $47.99 |

**WE APOLOGIZE TO ALL OF OUR CUSTOMERS FOR THE SHORTAGE OF VITAMOL**




**VITAMOL by DR. ROBERT**

DUE TO THE OVERWHELMING DEMANDS FOR VITAMOL, WE HAVE EXPERIENCED SEVERE SHORTAGES. HENCE, WE APOLOGIZE TO ALL OUR CUSTOMERS. VITAMOL IS A NOURISHING MALTED FOOD DRINK MIX FORMULATED BY DR. ROBERT. IT IS THE ONLY MALTED NOURISHMENT MIX WITH VITAMINS, IRON, CALCIUM AND HONEY. YOU GET MORE IN EACH BOTTLE OF VITAMOL. COMPARE THE QUALITY, SIZE AND PRICE. DON'T SETTLE FOR ANY INFERIOR MALT BEVERAGE MIX. DEMAND VIATMOL, TODAY'S BEST BUY FOR QUALITY AND VALUE. VITAMOL IS RECOMMENDED FOR CHILDREN AND ADULTS.




**DR. ROBERT GLUCOSE**

GLUCOSE IS FOUND IN NATURE IN FRESH FRUITS AND VEGETABLES. DR. ROBERT GLUCOSE IS MADE WITH THE BEST NATURAL INGREDIENTS AND PURIFIED TO ITS HIGHEST QUALITY. DR. ROBERT GLUCOSE IS GOOD FOR QUICK ENERGY. IDEAL FOOD FOR THE BRAIN, RED BLOOD CELLS, LIVER & MUSCLES. EXCELLENT FOR FEEDING CHILDREN AND ADULTS BECAUSE IT IS USED QUICKLY BY THE BODY.




**NERVOGEN NERVE FOOD**

NERVOGEN NERVE FOOD: EXCELLENT FOR HARD WORKING TISSUES OF THE BODY, SUCH AS THE BRAIN, IMMUNE SYSTEM, KIDNEY, LIVER, GUT AND HEART. FOR GOOD MENTAL AGILITY DON'T SETTLE FOR LESS, DEMAND THE BEST.




**CHATAK CHATAK CHATAK**

CHATAK CHATAK MADRAS CURRY POWDER IS THE BEST CURRY POWDER ON THE MARKET TODAY. MADE WITH 475 YEARS EXPERIENCE. IT IS SUPERB AND SO GOOD, NO OTHER CURRY POWDER CAN COMPARE. DEMAND CHATAK CURRY POWDER TO EXPERIENCE MADRAS AS IT 'S BEST. ALSO AVAILABLE CHATAK MEAT SEASONING, FISH SEASONING, TANDOORI CHICKEN MIX, SALTED SEASONING, UNSALTED SEASONING.

SUPPLIES CAN BE OBTAINED IN USA, CANADA, AND THE WEST INDIES FROM UNIVERSAL FOODS & MERCHANDISE CO. (416) 535-3118 TORONTO, CANADA.
FOR SUPER VALUE, LOW WHOLESALE & RETAIL PRICES ON GIFT, TOYS, SRI LANAKAN GROCERIES & ALL THE ABOVE ITEMS CONTACT BUDGET SUPER SAVINGS DISCOUNT 1349 QUEEN ST. WEST (EAST OF LANSDOWNE) PHONE (416) 537-0394

# கனடிய பொதுத்தேர்தல்: ஒரு நோக்கு

## வே.விவேகானந்தன்

*தொடர்ச்சி*

கனடாவில் பிரதான கட்சிகளுக்கிடையே ஜனநாயக பாரம்பரியம் தொடர்பான அடிப்படைக் கொள்கைகளில் ஒருமைப்பாடு காணப்படுவதனல், கட்சிக் கொள்கை வேறுபாடு காரணமாக மக்கள் வாக்களிப்பதிலும் பார்க்க, அவ்வப்போதுள்ள முற்றிய பிரச்சனைகளுக்கு கட்சிகள் முன்வைக்கும் தீர்வை மையமாகக் கொண்டே மக்கள் வாக்களிப்பதாகக் கூறப்படுகின்றது. குறிப்பாக 1917ம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது, கன்சவேட்டிவ் கட்சி கடல் கடந்த நாடுகளுக்கான இராணுவ சேவைக்கு, கட்டாய ஆட்சேர்ப்பு கொள்கையை முன் வைத்து போட்டியிட்டு, அதில் வெற்றி பெற்றது. இம் முறை நடைபெறும் பொதுத்தேர்தலில் வேலையில்லாப் பிரச்சனை, வழிகள், அமெரிக்காவுடனுன சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், நிதிப் பற்றுக்குறையை (DEFICIT) ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்கள் முக்கிய இடம் பிடித்துள்ளன. இவை தவிர கனடா தொடர்ந்தும் கனடாவாக விளங்க வேண்டுமாயின் குடிவரவுக் கொள்கையில் பாரிய மாற்றங்கள் கொண்டு வழப்படவேண்டும் என்ற கருத்தும், கனடா பல்கலாச்சார நாடாக விளங்க வேண்டுமா? அல்லது தனக்கென விளங்க வேண்டுமா? என்பதனை மக்கள் தீர்ப்புக்கு விட வேண்டும் என்ற கருத்தும் நிலவி வருகின்றது. எனவே கனடாவைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு பொதுத் தேர்தலும் ஏதோ ஒரு வகையில் முக்கியத்துவம் பெற்ற தொன்ருகிவிடுகின்றது.

இம் முறை பொதுத் தேர்தலில் இளைஞர்களின் வாக்குகளைப் பெறுவதிலும் கட்சிகள் தீவிர அக்கறை காட்டி வருகின்றன. வாக்களிக்கத் தகுதியுடைய 18 மில்லியன் வாக்காளர்களில் 3 மில்லியன் வாக்காளர் 18 முதல் 24 வயதுக்கிடைப்பட்ட இளைஞர்களாவர். கன்சவேட்டிவ் கட்சி மாணவர்களுக்கான கல்வி கடன் தொகையை அதிகரிக்கப் போவதாயும் லிபரல் கட்சி தேசிய இளைஞர் கூட்டுத்தாபனத்தை அமைத்து சமுக சுற்றுடல் துறைகளில் வேலைப் பயிற்சி திட்டங்களை (APPRENTICESHIP PROGRAM) உருவாக்கி வேலைவாய்ப்பினை வழங்கப் போவதாயும், புதிய ஜனநாயக் கட்சி, தேசிய சமுக இளைஞர் சேவை திட்டத்தினை அறிமுகம் செய்து அரச ஆதரவுடன் சமுக சுற்றுடல் துறைகளில் வேலை வாய்ப்பினை உருவாக்கப் போவதாயும் கூறி வருகின்றன. இப்பொதுத் தேர்தலில் இளைஞர் சக்தி உணரப்பட்டமையும் ஒரு முக்கிய மாற்றமாகும்.

பொதுத் தேர்தலின் உண்மையான வெற்றி வாக்காளரின் பங்களிப்பிலேயே தங்கியுள்ளது. தேர்தல் முடிவுகள் தெளிவற்ற தன்மை கொண்டதாக காணப்பட தேர்தல் தொகுதி அமைப்பு முறை, அது பங்கீடு செய்யப்பட்டிருக்கும் விதம், பொது சனதொடர்பு சாதனங்களின் செல்வாக்கு போன்ற பல காரணிகள் பின்னணியாக விளங்கிய போதிலும் வாக்காளரின் பங்களிப்பும் ஒரு காரணியாகும். இலங்கை, இந்தியா போன்ற வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும் போது கூட இங்கு வாக்களிக்கும் வீதம் குறைவாகவேயுள்ளது.

வாக்களிக்கத் தகுதியுடைய அனைவரும் வாக்களிக்க வேண்டும். அது எமக்குரிய உரிமை மட்டுமல்ல, ஒரு சமுகக் கடமையும் கூட. வாக்குரிமையை துஷ்பிரயோகம் செய்வது குற்றம். வாக்குரிமையைப் பயன்படுத்தாமல் விடுவதும் ஒரு வகையில் குற்றம்தான். ஜனநாயகத்துக்கும் சுதந்திரத்துக்கும் மதிப்பளிக்கும் நாடு கனடா. இன்ன கட்சிக்குத்தான் வாக்களிக்க வேண்டும், அல்லது வாக்களிக்கக் கூடாது என ஏ.கே.யுடன் மிரட்டி யாரும் யாரையும் கேட்கப் போவதுமில்லை, வற்புறுத்தப் போவதுமில்லை.

தாயகத்தில், தமிழரில் ஒரு சாராருக்கு வாக்குரிமை பறிக்கப்பட்டதற்காக குரல் கொடுத்த நம் இனம் இன்று உண்பதற்கு மட்டும் வாய் திறக்கும் நிலையில் அங்குள்ளது. இலங்கையிலேயே பிறந்து பரம்பரையாக வாழ்ந்தும் வாக்குரிமை மறுக்கப்பட்டு, கனடாவில் வாக்குரிமை பெற்ற தமிழர்களும் உண்டு. இவற்றை பின்னேக்கிப் பார்க்கும்போது இங்கு எமக்கு கிடைத்திருக்கும் வாக்களிக்கும் உரிமையினையும், சுதந்திரத்தினையும் சரியாகப் பயன்படுத்துவதே நாம் அவற்றுக்குக் கொடுக்கும் மரியாதையாகும்.

(சென்ற வாரக் கட்டுரையில் 'கடைசியாக நடைபெற்ற 12 பொதுத் தேர்தல்களில் ஆறு பொதுத்தேர்தல்களில் கனடிய வாக்காளர்கள் சிறுபான்மை அரசாங்கத்தை தெரிவு செய்துள்ளனர்' என்பதில் ஆறு பொதுத்தேர்தல்களில் என்ற சொற்கள் விடுபட்டு விட்டன. திருத்தி வாசிக்கவும்)

## அவள் போன போக்கு...

எண்டெல்லாம் நடத்துரு. அண்டைக்கு நடந்த பரிசளிப்பு விழாவில கல்விப்பணிப்பாளர். நாகம்மா ரீச்சரை புகழந்து தள்ளரார். இவாவ புகழ்ந்தது மற்றவைக்குப் பிடிக்கல. இவளயவளுக்கு ஊர் வம்பு அளக்கத்தானே தெரியும்வேறு என்ன உருப்படியாச் செய்ய தெரியும் ஒரு காரியமும் செய்யவிடாளவ.. ஒரே கதைதான் மிச்சம் இவளவ திருந்தாளவ.

அண்டைக்கு குலசிங்கம் ரீச்சர் சொல்லிரு "மாஸ்ரர் ஒலைக் கொட்டிலுக்க இருக்கேக்க இருந்த நிம்மதி இப்ப இருக்கா? உங்களுக்குத் தெரியுந்தானே! இவா வந்து தான் ஏதோ வெட்டிக் கிளிக்கிருவாம்.. இடிக்கிறதும் கட்டுறதும் ஆக்களைப் பேச வைக்கிறதும் பிள்ளையளின்ர எண்ணிக்கையை கூட்டுகிறதும் தேவையில்லாத வேலை பார்த்தெண்டு என்ன மாஸ்ரர் நான் சொல்லிறன் பேசாம நிக்கிறியள்... யூ அண்டர்ஸ்டேண்ட் சேர்?"

"ஓம் ரீச்சர் உங்கட பாசை விளங்குது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆசை இருக்கும்தானே. இவவுக்கு பள்ளியை முன்னேற்ற வேணும் எண்ட ஆசைபோல.. அதுதான் நடக்குது நம்மட காசா அரசாங்கம் கொடுக்குது இடிக்கிரு கட்டுரு இஞ்ச எத்தனை பள்ளிக்கூடங்கள் நிதி உதவியில்லாமல் அழிஞ்சு போகுதுகள். என்னவோ அவா முயற்சி எடுக்கிரு அது வெற்றியடையுது. அவாவிட காலபலன் நல்ல மாதிரி கிடக்குது போல.. மற்றது ரீச்சர் அவா ஒரு லண்டன் பீ.ஏ. பட்டதாரியல்லே அதோட கல்வி டிப்ளோமாவும் முடிச்சிருக்கிரு படிப்புக்கு ஏத்த திறமை இருக்கத் தானே செய்யும்."

"விடுங்கோ சேர். நீங்க எப்ப பார்த்தாலும் அவாவ உயர்த்தித்தான் பேசுவீங்க அவா படிச்சவ எண்டா நாங்க மாடா மேச்சனுங்க. உங்கட அப்புவோ ரீச்சர் வேலை எங்களுக்கு தந்தவர்."

இல்ல ரீச்சர் அப்படி நான் சொல்லல நீங்கள் பிழையா விளங்கிக் கதைக்கிறியள். நான் சொன்னது அவ பட்டதாரி அதோட இருபந்தைந்து வரியமா கெட் ரீச்சராக யிருக்கிரு. அதுதான் சொன்னனுன். நாங்கள் எல்லோரும் ஒரு குடும்பம் மாதிரி ஒண்டா வேலை செய்யிறம். ஏன் நமக்குள்ள சண்டை.. ரீச்சர் எல்லாத்தையும் விட்டுத் தள்ளுங்கோ.

"விடுங்க சேர் நீங்க, உங்களுக்கு பதவி உயர்வு வருகுதெல்லே பேந்து அவாவை குறைத்த சொல்லுவேங்கயா. "இல்ல ரீச்சர் இந்த வேலை எல்லாம் எனக்கு தேவையில்ல எண்டுதான் முந்தியிருந்தே சொலலிறன். சிவபாக்கியம் ரீச்சர் மாறிப் போகேக்க நான் அற்றிங்கதிபராய் இருந்தனுன் தானே! அப்ப கந்தோரில கேட்டவை தொடர்ந்து அதிபராய் இருமனெண்டு. நான் தான் வேணும் எண்டனுன். பிறகு தான் பிரம்பர் வந்தவர். ஏன் இப்ப கூட நான் உப அதிபரென்ன அதிபராய் கூடவரலாம். காரணம் நாகம்மா ரீச்சர் எஸ்.எல்.ஈ.ஏ.எஸ் பாஸ் பண்ணிப் போட்டா இனி அவா கல்வியதிகாரியாய் போகலாம் அந்த மனிசி இந்தப் பள்ளியை வளர்க்க வேண்டும் என்றல்லவா ஆலாப்பறக்குது. ரீச்சர் அதிபர் வேலை எண்டுறது சும்மா லேசான வேலையில்ல அர்ப்பணிப்பு தேவை ரீச்சர், அண்டைக்கு நாகம்மா ரீச்சர் சொல்லிரு தான் கல்வியதிகாரியா வந்தா இஞ்சவேலை செய்யிற ரீச்சர்மாருக்குத் தான் முதலில படிப்பிக்க வேண்டிவரும் ஆகையால் அந்த வேலை எனக்கு தேவையில்ல எண்டு. நான் தான் சொன்னனுன். திறமையை வீண் அடிக்காதையுங்க நிர்வாக சேவையில பாஸ் பண்ணிப்போட்டேங்க கல்வியதிகாரியாய் போங்க என்று.

"என்ன சேர் கதை. படிப்பிக்கிறதெண்டா எங்களுக்கு பிரச்சனை தாற மாதிரியெல்லா அவாவிட கதை போகுது நாங்களும் அவவுக்குப் பழக்குவம். அவா கல்வியதிகாரியாய் வந்தா ஒழுங்கா வேலை செய்ய விடுவோமா? அவா எங்களுக்கு படிப்பிச்சு காட்டப் போருவா? நாங்க அவாக்கு முதலில பழக்கி காட்டுவம்சேர்.

சரி விடுங்க ரீச்சர் கதையை அவா தன்ர பதவியுர்வு சம்பந்தமா கல்விக் கந்தோருக்கு கதைக்கப் போயிட்டா எனக்கும் நாளையில இருந்து அதிபர் வேலையோ தெரியா பள்ளிக் கூடமும் விடுற நேரம் வகுப்புக்கு போங்க பிறகு கதைப்பம்.

டாங்....டாங்.....டாங்...... "பள்ளி விட்டுட்டடா டேய்"

பிள்ளையள் எல்லோரும் எழுந்து கல்லூரிக் கீதத்தை பாடுங்க

வாழிய செந்தமிழ் வாழிய மிசன்
கல்லூரியாய் ஓங்கி வாழி!
சூழ்கலி நீங்க சுதந்திரம் வர
அல்லல் தீர்க்க வாழி! வாழி!
அமரிக்கன் மிசன் அடுக்காய் வாழி
எல்லோரும் படிப்போம் வாழி! நல்லா
கல்வி தழைக்க வாழி! வாழி! வாழி!

"பிள்ளையள் ஒழுங்காய் போங்க இடிபடாமல் போங்க. டேய் அப்பன் வரிசையாய் போ டேய் சிவா நேற்று மாதிரி புளியங்காய் பிடுங்காம் ஒழுங்கா நேரத்துக்கு வீட்ட போ. குலசிங்கம் ரீச்சர் பிள்ளையளை முதலில விட்டிற்று பேந்து போங்களன்.. ரீச்சர்மார் முந்தி வந்து பிந்திப் போறதுதான் அழகு. நில்லுங்க இடிச்செண்டு போறேங்க. ஒரு அதிபர் சொலலிறன் எண்டு ஒருமரியாதை கொஞ்சம் கூட இல்லாம போறேங்க நாளைக்கு இந்த பிள்ளையள் நான் என்னவேன் சொன்னு கேக்குங்களா?"

"எடியே எனக்கு நீ முதலாளியாய் வந்து கதைக்கிறையாடி. கல்வி கந்தோரில் சிவலிங்கம் E.O வை வைச்சிருக்கிற துணிவு தானேயடி உனக்கு. கொழுப்பு கூடிட்ரடி. அமரில திரியிறயடி, இண்டைக்கு E.O வோட இருந்துட்டு வந்து சுதிதானயடி என்னை நிற்க சொலலிருய். பத்தாததுக்கு வித்துவானையும் தானயடி வைத்திருக்கிற.. உன்ர கொழுப்பு கரைக்கிறன் பாரடி. நீ எத்தனையேரோட ஆடினி எண்டு எனக்கு தெரியுமடி எடியே உனக்கு செய்வேன்ரி வேலை இருந்து பாரடி என்ன யாரெண்டு பாரடி கனக்கப் படிச்சதெண்டு குலுக்கிருயாடி என்னத்தையடி நீ படிச்சனி நீ படிச்சாடி பட்டம்வாங்கினி. என்ன நிண்டு போகச் சொலலிறயாடி எடியே என்னடி சொன்னனீ....

அடுத்த நாள் அதிபர் மு. இராமலிங்கம் மண்டபத்தில் முன்னுன் அதிபரும் கல்வியதிகாரியுமான திருமதி நாகம்மா அவர்களின் பூத உடல் பொது மக்களின் பார்வைக்காகவும் அஞ்சலிக்காகவும பேழையில் வைக்கப் பட்டிருக்கிறது. பலர் பேசுகிருர்கள்.. புகழ்கிருர்கள் நினைவு அஞ்சலி மலர் வளையம்.

புதிய அதிபர் வித்துவான் சரவணனுர் கண்ணுடன் தழுதழுத்த குரலில் " எங்கள் புகழ் பூத்த அதிபரை சுட்ட இழிவுச்சாதி என் தமிழ் சாதி. அதுவும், பழைய சாதி மூத்தசாதி ஓ!ஓ! ! " கத்திருர். உண்மை ஒன்றிருந்தும் பலர் பலவாறு பேசுகிருர்கள்.

(முழுதும் கற்பனையே)

## ஞானம்

வீடு தேடி வந்து
அழைப்பு தந்தீர்கள்
நன்றி!

அன்றொரு நாள்
நானும் அழைத்திருந்தேன்.
நீங்கள் வரவேயில்லையே!

துருவி
காரணம் எடுத்திருப்பீர்கள்.
இப்போது
எனக்கும் கிட்டும்.
ஆனால்
செய்யப்போவதில்லை'
அழைப்பை மதிப்பதால்

கோபதாபங்களை
'பதிவுதபாலில்'
அனுப்பிவிட்டா
போகப்போகிறோம்?
சாகும் போது!

இப்பிறப்பில் திருத்திக்கொள்ள
போன பிறப்பு வினையே
மனச்சுவட்டில் இல்லாத போது
இந்த
கோபதாபங்களை சேமித்து.....
போங்கப்பா!
ஆரும் அறிவை வைத்துக்கொண்டு....

அருண்



## என் தேசம்

என் இனிய யாழ் நகரே
உன் எழில் கொஞ்சும் அழகை
என் கண்கள் மீண்டும் காணாதோ?
உன் வீதி யெங்கும் சிதறிக்கிடக்குமே
பூக்கள்.....
இன்றும் தான் சிதறிக்கிடக்கின்றன
அவை பூக்கள் அல்ல பிணங்கள்

கே. சுதன் ,மொன்றியால்

### இவ்வாரச் சிந்தனைக்கு

விளையாட்டாண்மை மிகுந்தவர் தோற்பினும்
விளையாட்டன்பர் மனம் வீற்றிருப்பர்

கவிஞர் வி.கந்தவனம்

## ஆசை! ஆசை! ஆசை!!!

கனவினில் ஏனும் எனது ஊரின்
புழுதி மணலில் புதைந்திட ஆசை
புதைந்து புதைந்து புழுதி மணலில்
தகிக்கும் வெயிலில் நடந்திட ஆசை
நடந்து நடந்து நிலவின் ஒளியில்
அலைகள் உரச அமர்ந்திட ஆசை
அமர்ந்து அமர்ந்து இரவின் மதகினில்
அரட்டை அடித்து சிரித்திட ஆசை
சிரித்து சிரித்து சிறகு முளைத்து
பரந்த வானில் பறந்திட ஆசை
பறந்து பறந்து உயரம் பறந்து
பட்டத் துயர்களை மறந்திட ஆசை
மறந்து மறந்து துறந்த துயர்களை
மறுபடி மனதில் நினைத்திட ஆசை
நினைத்து நினைத்து நெஞ்சம் விம்ம
நித்திரை மறந்து அழுதிட ஆசை
அழுது அழுது கழித்த நாட்களின்
அவலத்தை எதிர்த்து எழுந்திட ஆசை
எழுந்து எழுந்து உயிரை வெறுத்து
மண்ணில் மனிதத்தை மதித்திட ஆசை

நிலா குகதாசன்

## இரவல் வாழ்வு

சி.கிருஷ்ணராஜா

அமைதியும் சமாதானமும்
அழகான வார்த்தைகள்
மொஸ்கோவில் இருந்து
முல்லைத்தீவையும் கடந்து
அதன்
கொச்சைப்படுத்தப்பட்ட
பாதிப்புகள் அசலாய் ஆயின

அதிகாரச் சிறகுகளை
அழிக்கத் தூக்கிய கோடரி
அதிகாரத்தின் அங்கங்களில்
இலயித்துப் போய்
ஆறறிவும் கெட்டு
ஐக்கியமாய் போயின

மனிதமும் மரணமும்
நாலெழுத்து
அவை
அண்ணளவாகச் சமனாக
புதிய 'கீதை'யில்
'கர்ம'யோகங்கள்
காலக்கணக்காய்
வரையப்பட்டன

பயிர்களுக்கு பாத்திகட்டி
பொழியோ பொழியுமென்று
காத்திருக்க
போர்மேகப் புணர்வுகளில்
தாரைகள் தடாகங்களாகி
தடாகங்கள் சமுத்திரங்களாயின

தெய்வத்தின் குரலுக்காய்
சேவித்தோம்
தீயிலே சிதைந்தும்
அடிபட்டும் இடிபட்டும்
தெய்வங்களே
'தெய்வத்தின்' குரலுக்காய்
சேவித்து நின்றன

பிறப்புக்கும் இறப்புக்கும்
இடையில்
வாழ்தல் என்பது
அளிக்கப்படாத சுதந்திரமாய்
எத்தனையோ சக்திகளின் இரவலில்
'பெறுதற்கு அரிய மானுட வாழ்வு'
பிழைத்துக் கொள்ளுமா?

## புதுக்க விதை

# ரஷ்யாவில் கம்யூனிசம் மீண்டும் வரும்

## தி. உமாகரந்தன்

அக்டோபர் மாத ஆரம்ப நாட்களில் ரஷ்ய பாராளுமன்றத்தின் மீது ரஷ்ய ஜனாதிபதி போறிஸ் யெல்ஸ்ரின் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் மூலம் கம்யூனிச சவப்பெட்டிக்கான இறுதி ஆணி அடிக்கப்பட்டுவிட்டது என்ற வகையிலான செய்திப்பிரச்சாரத்தை மேற்குலகச் செய்திச் சாதனங்கள் கட்டவிழ்த்து விட்டுள்ளன. இதனை வலுப்படுத்தும் வகையில் யெல்ஸ்ரினும் பாராளுமன்றத்துக்கெதிரான தனது இராணுவ நடவடிக்கையில் வெற்றியடைந்ததை தொடர்ந்து ரஷ்யாவிலுள்ள நாலு கம்யூனிஸ்டு அமைப்புக்களையும் 12 தேசிய மற்றும் தீவிரவாத அமைப்புக்களையும் எதிர்க்கருத்துக்களை வெளிப்படுத்தி வந்த பிராவ்தா உட்பட 13 பத்திரிகைகளையும் தடை செய்துள்ளனர். பல கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் விசாரணைச் சம்பிரதாயங்களின் பின்னர் நீண்டகாலம் சிறைகளில் தள்ளப்படலாம். அத்துடன் யெல்ஸ்ரினுக்கு ஆதரவான தேசிய தொலைக்காட்சிச் சேவையும், பத்திரிகைகளும் கம்யூனிஸ்டுகள் பற்றிய எண்ணங்களைச் சீரழிக்கும் பிரச்சாரங்களில் மிகுந்த முனைப்புடன் இறங்கியுள்ளன. கம்யூனிஸ்டுகள் சதிக்காரர்கள், குண்டர்கள், பாசிஸ்டுகள் என்னும் வகையிலான பிரச்சாரங்கள் வெகுதீவிரமாக மக்களிடையே கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இந்த முயற்சிகளின் மூலம் ஒரு குறிப்பிட்ட சில காலத்துக்கு கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளை ரஷ்யாவில் கட்டுப்படுத்த முடியுமே ஒழிய முற்றாக ஒடுக்குவதோ அல்லது முறியடிப்பதோ முடியாத காரியம். கம்யூனிசம் என்பது ரஷ்யாவில் நீண்ட காலத்துக்கு முன்னரே மிக ஆழமாக விதைக்கப்பட்டது. அதனை இரண்டு வருடங்களுக்குள் இல்லாமல் செய்வது என்பது இயலாத காரியமே ஏனெனில் இத்தனை எதிர்முயற்சிகளின் பின்னரும் இன்னமும் ரஷ்யாவில் கணிசமான ஆதரவு இருந்து கொண்டே இருக்கிறது. உதாரணமாக சமீபத்திய பிரச்சனைகளின் போது யெல்ஸ்ரின் பாராளுமன்றத்தை கலைக்க உத்தர விட்டபோது மொஸ்கோவிலுள்ள 23% மக்கள் பாராளுமன்றத்துக்கும் அதன் தலைவர்களுக்குமே தமது ஆதரவை தெரிவித்தனர். ரஷ்யப் பாராளுமன்றம் கம்யூனிஸ்டுகளின் சின்னமாகவே யெல்ஸ்ரின் தரப்பால் பிரச்சாரம் செய்யப்பட்டது.

பதவியிலிருந்து அகற்றப்பட்ட முதல் ஒரு வருடத்தில் ரஷ்ய சமூகத்தில் கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகள் மிகக் கணிசமாகவே குறைந்திருந்தன. ஆனால் எதிர்பார்த்ததை விட வேகமாகவும் தீவிரமாகவும் ரஷ்யாவில் கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகள் மீள்பிரவேசமெடுத்தன. பொருளாதார சீர்த்திருத்தம் என்ற பெயரில் யெல்ஸ்ரினின் பொருளாதாரக் குழப்ப நடவடிக்கைகள் தொடங்கியபோது பொருட்களின் விலையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டது. முதியவர்களின் சேமிப்புக்கள் முடிந்தன. குற்றச் செயல்கள் சமூகத்தில் பெருகின. இலஞ்சம் இல்லாமல் அதிகாரிகளை அசைக்க முடியாமல் இருந்தது. விளைவு மக்கள் கம்யூனிஸ்டுகளை நோக்கித் திரும்பினார்கள். ஆதரவு அதிகரித்தது.

அதுமட்டுமல்ல யெல்ஸ்ரினுக்கு எதிரானதும், பாராளுமன்றத்தில் சக்தி வாய்ந்ததுமாக விளங்கிய தேசிய இரட்சண்ய முன்னணியின் ஆதரவும் கம்யூனிஸ்டுகளுக்கும் கிடைத்தது. இதனைக் கொண்டு தமது அரசியல் பின்பலத்தை கம்யூனிஸ்டுகள் அதிகரித்தார்கள் இதன் மூலம் கம்யூனிஸ்டுகளுக்கும் பாராளுமன்ற சபாநாயகர் றுஸ்லன் காஸ்புலற்ரோவ், துணை ஜனாதிபதி றுற்ஸ்கோட் ஆகியோருக்கும் நெருக்கமான உறவு ஏற்பட்டது. செப்ரெம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றில் சென் பீற்றர்ஸ்பேர்க்கிலுள்ள 20% மக்களும் வொலகா நதிக்கரை நகரான சமாராவிலுள்ள 16% மக்களும் கம்யூனிஸ்டுகள் மீண்டும் பதவிக்கு வருவதை விரும்பினார்கள்.

ஆனால் தற்போதைய சூழலில் புதிய அடக்குமுறைச்சட்டங்களின் கீழ் கம்யூனிஸ்டுகள் தமது நடவடிக்கைகளை மேற் கொள்ளுவது இலகுவான காரியமல்ல, இன்றைய சூழலில் கம்யூனிஸ்டுக்களின் எந்த பகிரங்க நடவடிக்கையுமே இயலாத காரியம். ஆனால் எதிர்வரும் நாட்கள் அப்படியல்ல. கம்யூனிஸ்டுகளின் மீள்பிறப்புக்கு அல்லது மறு பிரவேசத்துக்கான காரணங்கள் இன்னமும் நிறையவே இருக்கின்றன. இதற்கான காரணங்களுள் ஒன்று ரஷ்ய சமூகத்தில் ஒரு பலமான யெல்ஸ்ரின் எதிர்ப்பு எண்ணம் உள்ளது. யெல்ஸ்ரினின் மீதான தனிப்பட்ட வெறுப்பு, அவரது கொள்கைகளின் மீது ஏற்பட்ட வெறுப்பு, சமீபத்தில் பாராளுமன்றத்தின் மீது மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளினால் ஏற்பட்ட வெறுப்பு, எதிர்க்கட்சிகளை தடை செய்யவதில் யெல்ஸ்ரின் காட்டிய ஆர்வமும, அவசரமும் ஏற்படுத்திய வெறுப்பு அனைத்துமே விரைவில் கம்யூனிஸ்டுகளைப் பலப்படுத்தும். இதற்கு முன்னுதாரணமாக அக்டோபர் 4ம் திகதி மொஸ்கோவில் நடந்த

### சுழலும் உலகம்



கருத்துக் கணிப்பெடுப்பில் 15 வீதமானோர் சமீபத்திய பிரச்சனைகளில் சிதறிய இரத்தத்துக்கு யெல்ஸ்ரினே பொறுப்பு எனத் தெரிவித்துள்ளனர்.
இதற்கான அடுத்த காரணம் கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகள் இப்போது யெல்ஸ்ரினால் தடை செய்யப்பட்டுள்ளன. கம்யூனிஸ்டுகள் தமது கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை பாராளுமன்ற கிளர்ச்சிகளின் போது மொஸ்கோவில் பொலிசாரையும் ராணுவத்தினரையும் தாக்கிய தீவிரவாதி இளைஞர்களையும், எதிர்ப்பாளர்களையும் கம்யூனிஸ்டுக்குக் கட்சியின் பால் ஈர்க்கும் நிலைதான் ஏற்பட்டுள்ளது.
இவைமாத்திரமல்ல ஆயுதங்கள் மூலம் ஜனநாயகத்தை நிலைநிறுத்த முற்பட்ட யெல்ஸ்ரின் புதிய கம்யூனிஸ்ட் தியாகிகளை தனது அடக்குமுறைகளின் மூலம் உருவாக்கியுள்ளார். இதுவும் தியாகிகளுக்கு எப்போதுமே பெருமதிப்புக் கொடுக்கும் ரஷ்ய சமூகத்தில் கம்யூனிஸ்ட்டு தியாகிகளுக்கு பெருமதிப்பு வருவது தவிர்க்க முடியாதது. பாராளுமன்றத்தின் மீதான யெல்ஸ்ரினின் தாக்குதல் ஏற்படுத்திய தியாகிகள் பட்டியலில் காஸ்புலற்ரோவ், ருற்கோய் ஆகியோரும் கூட இடம் பெறும் நிலையையே யெல்ஸ்ரின் தோற்றுவித்துள்ளார். இவர்கள் மாத்திரமல்ல 1991 ம் ஆண்டு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டவர்களே தியாகிகள் என்று மக்கள் நினைக்கும் நிலையே ஏற்பட்டுள்ளது.
இதுமட்டுமல்ல கம்யூனிஸ்டுகளின் மீது அடக்குமுறையை திணித்ததன் மூலம் யெல்ஸ்ரின் அவர்களை தலை மறைவாக்கியுள்ளது கூட எதிரானதே ஏனென்றால் பாராளுமன்றத்துக்குள் இருக்கும்போது இவர்களது நடவடிக்கைகள் கட்டுப்பாடானதாக இருந்தது ஆனால் தலைமறைவானபோது நிச்சயமானதாக அதிதீவிரமானதாகவே இருக்கும். இது தீவிரமானதாக மாத்திரமல்ல பயங்கரவாதமானதாக மாறுவது கூட தவிர்க்க முடியாதது.

கம்யூனிஸ்டுகளின் மீள் பிறப்பு தவிர்க்க முடியாதது. ஏனென்றால் 1905 முதல் 1907 ரஷ்யப்புரட்சியில் அடக்கப்பட்ட பின்னர் அதிகாரத்துக்கு வர பொலஸ்விக்குகளுக்கு 12 வருடங்கள் எடுத்தன இந்த வரலாறு மீளவும் வராது என்பதற்கு என்ன நிச்சயம் இருக்கிறது. கம்யூனிஸ்டுகள் என்ற பெயரில் இல்லாவிட்டாலும் சமூக ஜனநாயகவாதிகள் என்ற பெயரிலோ அல்லது தொழிலாளர்கள் அமைப்பு என்ற பெயரிலோ அதுவும் இல்லை என்றால் புதிய ரஷ்ய ஜனநாயகத்தினுள் என்ற பெயரிலோ மீள் பிறப்பு அல்லது மீள் பிரவேசம் நடப்பதற்கான சந்தர்ப்பங்கள் இன்னும் நிறையவே இருக்கின்றன.

எனவே கம்யூனிசம் ரஷ்யாவில் அழிக்கப்பட்டது என்பது பொய். கம்யூனிசத்தின் முதுகெலும்பு ரஷ்யாவில் முறிக்கப்பட்டது என்பது பொய். அதனை எதிர் வரும் நாட்களே நிச்சயிக்கும் ரஷ்யாவில் மாத்திரமல்ல இதர உலக நாடுகளிலுமே கம்யூனிஸ்டுகள் மீண்டு வரும் நாட்களை புதிய அரசுகளே ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாகிறது அடக்குமுறையின் மூலம் ஜனநாயகத்தைக் காப்பாற்ற முயலும் யெல்ஸ்ரின், யெல்ஸ்ரினின் மூலம் உலக ஜனநாயகத்தை பாதுகாக்க முயலும் கிளின்ரன் போன்றோர் கம்யூனிசத்துக்கு உரமளிக்கின்றார்கள். கம்யூனிஸ்டுகளின் மீள் பிறப்புக்கு மாத்திரமல்ல மீள் பிரவேசத்துக்குமே வழியமைக்கின்றார்கள்

## இப்படியும் சேதிகள்...

சிங்கள சிப்பாய் புலியின் அருகில் உட்கார்ந்து தனது பைக்குள் இருந்த பாண்துண்டுகளையும் சாடின் மீன் டின்னையும் வெளியில் எடுத்தான்.
"நண்பனே இந்தக் கொலைகளின் அர்த்தம் தான் என்ன?"
எனக் கேட்டபுலி தனது பையுள் இருந்த கடலை முடிச்சையும் தண்ணிப் போத்தலையும் வெளியில் எடுத்தது.
சிறிது நேரத்தில் இருவரும் தமது உணவுகளைப் பங்கிட்டுச் சாப்பிட்டனர்.
"எங்களைப் பீல்ட்டுக்கு அனுப்பி தான் ஆட்சி செலுத்த வேண்டும் என்பது தான் பிரபாவின் தேவை. எங்களுடைய குடும்பத்தை பற்றி அக்கறை இல்லை" புலி பாண் துண்டைக் கடித்துக் கொண்டே கூறியது.
"எங்களுடைய ஐயாமாரும் குறைஞ்ச ஆட்கள் இல்லை. யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போதே காசும் அச்சடிக்கிறானுகள், நாம் செய்த பழைய பாவங்களுக்காக இப்ப அனுபவிக்கிறோம்!"
எனக் கூறிய சிங்கள சிப்பாய் அண்ணாந்து கடலை கொஞ்சத்தை வாய்க்குள் போட்டு தண்ணீர் குடித்தான்.
நான் டக் என்று எழுந்து உட்கார்ந்தேன்.
"யாரடா இது?" எனக் கேட்டுக்கொண்டே தனது றைபிளை கையிலெடுத்தான் சிப்பாய்
"அவன் அப்பாவிப் பத்திரிகைக்காரன், அவன் பொய்க்கு செத்ததைப் போல் நிலத்தில் விழுந்ததை நான் கண்டேன். இவனுடைய பெரியவனுகள் எல்லாரும் இவனை விட்டிற்று மாறிட்டானுகள்"
எனக் கூறிய புலி எனது முதுகில் தட்டி "எதையாவது எடுத்து சாப்பிடு மச்சான்" என்றான்.
நானும் பேச்சு மூச்சு எதுவுமில்லாமல் பாணும் கடலையும் சாப்பிட்டு தண்ணீரைக் குடித்தேன்.
"நான் கொழும்புக்கு வெடி வைக்கிறன், நீ போய் யாழ்ப்பாணத்தில் வெடி வை, இதைத் தான் நாம் இப்ப செய்ய வேண்டியுள்ளது"
எனக் கூறிய சிங்கள சிப்பாய் எனது வயிற்றில் குத்தியதோடு அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.
"இப்படியே போனால் அதைத்தான் செய்யவேண்டி வரும்" எனக் கூறிய புலி வீரன் புலித் தோலைப் போர்த்துக் கொண்டே என்னைப் பார்த்து "ஏய் பத்திரிகை நண்பனே, தெரிகிற பொய்யை அல்ல மறைந்துள்ள உண்மைகளைத் தேடி எழுது" எனக் கூறிக்கொண்டே காட்டுக்குள் நுழைந்தான்.
நான் மரத்தில் ஏறிய இருவரும் இறங்கும் வரை பார்த்துக் கொண்டிருந்தேன்.

# சுகன்; வாழ்வியல் ஏக்கங்களின் அபூர்வமான பதிவுகள்.

## இருத்தலியல் விசாரணைகள்

எஸ்.கௌந்தி

புகலிடத்திற்கு வந்தபின்னர், ஒரு குறுகிய காலகட்டத்தில் தரமான கவிஞராகத் தன்னை இனங்காட்டியுள்ள சுகனும், இரா.ரஜீன்குமார் போல இயக்கவாதியாக இருந்தவரே. சிறுகதை, விமர்சனம் போன்ற துறைகளுள் இவர் தனது பேனாவைத் தோய்த்தபோதும், கவிதைத் துறையிலேயே இவர் குறிப்பிடத்தக்க ஒரு வெற்றியைப் பெற்றுள்ளார். அகதிவாழ்வின் பிரதான அமிசமாக இருப்பது பிரிவாற்றாமை. புகலிடப் படைப்பாளிகள் பலரது எழுத்து எத்தனங்களுக்குள் இது விரவிக் கிடப்பதைக் காணலாம் எனில், சுகன் கவிதைகள் இதற்கு விதிவிலக்கானவையயல்ல. ஆனால், சுகனது படிமத்தேர்வு விதிவிலக்கானதும், காரமானதுமாகும். இந்தவிதிவிலக்கான தேர்வே, இவரது கவிதைகள் பலவற்றை எமக்கு பரிசோதனைக் கவிதைகளாக இனம் காட்டுகின்றன. வாழ்வு, மனித இருத்தல் மீதான சுகனது விசாரணைகளில் ஒரு தத்துவக் கலாசாரம் உண்டு. இந்தத் தத்துவக்கலாசாரம் இருத்தல் படும் நெருக்கடிகளையொட்டிய இவரது ஏக்கங்களுடனும், பூரண அராஜக எதிர்ப்புடனும் சம்பந்தப்பட்டது. ஏக்கங்களைத் தனிமனித விரக்தியென அர்த்தப்படுத்திவிடலாமா? இவ்வாறு அர்த்தப்படுத்தும் விகாரமான விமர்சன மோசடிகள் தமிழில் நிறையவே உண்டு. தனிமனித ஏக்கங்களின் பின்னணிகள் மீதான ஆழமான பார்வைகளுக்கு நாம் அந்நியப்பட்டு இருக்கும் வரை சிருஷ்டியின் பின்னணிகள் மீதான உண்மையான அர்த்தங்களுக்கும் நாம் அந்நியமானவர்களாகவே இருப்போம். இருத்தலின் நெருக்கடிக்குள் மனிதன் தன் அடையாளத்தை எப்படி இழந்து போகின்றான் என்பதை கவிஞர் "இல்லை ஆனால் இருக்கு" (தாயகம் 21.05. 1993) என்ற கவிதையில் அழகாகச் சித்தரித்துள்ளார். கவிதையின் கடைசி வரிகள்:

*"நான் நீங்களுமில்லை*
*நீங்கள் நானுமில்லை*
*யாராகவுமில்லாத நீங்களுக்குள்*
*நான் நானாக இல்லை*
*இல்லாமலுமில்லை*

* * *

"விளங்காத கவிதைகளையே எழுதுபவர்" எனப் புகலிடத்தில் சுகன் கவிதைகள் பற்றிப் பொதுவாகச் சொல்லப்படுவதுண்டு. இந்த விளங்காதிருத்தல் கவிஞரிடம் உண்டெனினும், அதற்காக அவரிடம் தெளிவாக எழுதும் எனச் சொல்லுதல் அபத்தம். அவர் ஏதோ ஒன்றை விளங்கித்தான் எழுதுகின்றார். அது நமக்கு விளங்கவில்லையென்பதால், அவை கவிதைகள் அல்ல எனச் சொல்ல முடியாது. தூஷகமான எழுத்து வெளிப்பாடுகள் அகதி வாழ்வியலின் பிரிக்க முடியாத அமிசம். இதனை அரசியல் பின்னணிகளுடனேயே பொருத்திப் பார்க்கவேண்டும்.

*"சூடு பற்றிக் கதைப்பது*
*தவிர்க்கப் பட்டுள்ளதால்*
*குளிர் பற்றிக் கதைத்தலும்*
*சூட்டைக் குறிப்பதாகவே*
*கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்"*

என "காலநிலை பற்றிய குறிப்புகள்" (தூண்டில், ஜேர்மனி ஜூலை 1990) என்ற கவிதைக்குள் கவிஞர் செதுக்கியுள்ள வரிகள் பேச்சுச்சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ள வேளையில் தூஷகமாகவே நாம் சில விஷயங்களைத் தெரியப்படுத்துமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம் என்பதையே குறிப்பிடுகின்றது. 1944 களில் "பிராங்பேட் சிந்தனைப் பள்ளியின்" யூத தத்துவஞானிகளும்; நாஸி எதிர்ப்பு வாதிகளும் எவ்வாறு தமது சிந்தனை விநியோகத்தைக் கொண்டு செலுத்தினர் என்பது தொடர்பாக எனது நண்பர் பேராசிரியர் மக்ஸிமில்லியன் நூபெல்(பிரான்ஸ்) ஒரு ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார். அவகாசம் கிடைக்கும் போது அதனை மொழிபெயர்ப்பேன், அரசியல் நெருக்கடிகளுக்கேற்ப மொழித்தேர்வு எவ்வாறு உருமாற்றம் பெறுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக அராஜக வாதிகளின் எலும்புத் துண்டுக்காகக் காத்திருக்கும் போலிப்புத்திஜீவிகளுக்கு இந்த மொழித்தேர்வெல்லாம் அவசியமில்லாத விஷயங்கள்.

* * *

*"யாழ்ப்பாணம் கோட்டையிலிருந்த*
*சோழர்காலத்தை*
*மீட்க முயன்றதில்*
*மன்னர்கள் பிழைக்க*
*மனிதர்கள் இறந்து போயினர்"*

தேசத்தின் மீட்சி எனும் பெயரால் அராஜகக் குழுக்கள் நடத்தும் வெறியாட்டத்தின் கைதிகளாகிய மனிதர்களினது இருத்தல் மீது "தமிழில் Historiography (தூண்டில் நவம்பர் 1990) எனும் கவிதைக்கூடாக சுகன் எமக்கு இன்றைய யாழ்ப்பாணம் எது என்பதைக் காட்டுகின்றார். மன்னர்களும் மக்களும் ஒன்றல்ல. மன்னர்கள் மகுடம் சூடாது விட்டாலும், தலைதப்ப பங்கர்கள் உண்டு, மக்களுக்குள்ளதோ அகதி முகாம்கள். நாம் ஏன் அகதிகளானோம் என்பதை மறுதலித்து இருப்போமாயின் புகலிட இலக்கியம் என்ற அலகு தமிழிற்குக் கிடைத்திருக்கவே முடியாது. "நான் அகதி" என்ற பிரக்ஞையுடன் எழுதும் ஒரு சிலருள் சுகனும் அடங்குகின்றார். புகலிடவாழ்விற்குள் தன்னைத் திணித்தபின்னர் சுகன் எழுதிய முதலாவது கவிதை "காணிக்கை" (தேடல் பிரான்ஸ், ஜனவரி 1989).

*"உருச்சிதைந்துபோன எனது*
*சமூகத்தை*
*எப்படி எனது சந்ததிக்குக்*
*கையளிக்கமுடியும்?*

என இவர் கேட்கும் கேள்வி அர்த்தம் கொண்டது.

* * *

சுகன், இவர் ஓர் புடம் போடப்பட்ட இருத்தலியல் கவிஞர். "பிராணிகள்

வளர்ப்பு/வதைச் சட்டத்தின் கீழான தடை அறிவித்தல். பின் இணைப்பு: நினைத்தல்" (தாயகம் 08.11.1991) என்ற நீண்ட கவிதை நான் வாசித்த மிகவும் தரமான இருத்தலியல் கவிதை. இதனை முழுமையாக வாசித்தலே பொருத்தமானது என்பதால் வாசகர்களின் தேடலிற்கு இதனை விட்டு விடுகின்றேன்.

புகலிடவாழ்வியல் பலவித நெருக்கடிகளை அகதிகளுக்குச் சுமத்துவது. இதற்குள் பாலியல் நெருக்கடி பிரதானமானது. இந்த நெருக்கடியின் வெளிப்பாடுகளாக சுகனது அண்மைக்காலக் கவிதைகள் பல அமைந்துள்ளன. இவர் இந்தக் கவிதைகளுக்கூடாகத் தன்னை ஓர் தேர்ச்சி பெற்ற காதல் கவிஞராகவும் இனங்காட்டுகின்றார். பெண்கள் இறக்குமதிப் பண்டங்களான கொடுமையை பல கவிதைகள் சுட்டிக்காட்டுகின்றன. இதே வேளையில் ஆண்கள் படும் பாலியல் அவஸ்தைகளையும் இவர் சீரியஸ் கண்கொண்டு பார்க்கின்றார்.

"எனக்கு பிரச்சனைகளுக்குமேல்
பிரச்சனைகளும்
கனவுகளுக்கு மேல் கனவுகளும்
அதிகம்"
"என் யௌவனம் அழிகின்றது
என் கண்களில் ஒளி இழந்தேன்
உடல் கூனி சருமம் வரண்டு
கோவணத் திறக்கக் கூட
அழகில்லாதவனாய் அழிகின்றேன்"
(முத்துமாரி அம்மனுக்கூடாக BNP வங்கி முகாமையாளருக்கு" தாயகம் 17. 09.1993)

* * *

சுகன் கவிதைகள் "நுகத்தடி நாட்கள்" என்ற தலைப்பில் தொகுப்பாக வரவுள்ளதாக அறியப்படுகின்றது. இந்தத் தொகுப்பின் மீதான விமர்சனத்தில், இவர் கவிதைகள் மீது விரிவான பார்வையொன்று வைக்கப்படும்.



# வசந்தமேன் நழுவுது

**சுகன்**

'மிசெல் பூக்கோ'வின் கருத்திலொன்றை கடைசிக்கு முதலுக்கு முதல் அம்பாக எடுத்தேன். எப்படிச் சுற்றிச் சுற்றி வந்தாலும் இந்த 'சம்மனசுகள்' மிகவும் ஜாக்கிரதையான தோரணையோடுதான் இருக்கின்றார்கள்.

ஒரு பெண்ணுக்காக அலைபவனிடம் வந்து மாட்டுப்பட்டதாக விளங்கிக் கொண்டதாகவும் தெரியவில்லை. இல்லாவிடில் விடிய ஐந்து மணிவரை விவாதத்தை சுவாரசியமாக இழுத்திருக்க முடியாது.

பாவமன்னிப்பு கேட்கும்போது குருவானவருக்கு பாலியல் விவகாரங்களில் சுவாரசியம் பிடிபட விடுத்து விடுத்துக் கேட்டு அதன் உச்சிக் கொப்புக்கு ஏறி சுவை தணிந்து திருப்தியுற்றவராய் "என்னையும் மன்னித்தருளும்" என்று இறைவனிடம் இரங்கும்போது, பாவியானவன் மனதுக்குள் குமைந்து நெரிந்து கொண்டிருந்த எண்ணங்களை இன்னொருவருக்குச் சொன்ன ஆறுதலுடன் அவனது முதலாவது விடுதலை தொடங்குகிறது.

"தமிழ் ஆட்கள் எங்களை காமக்கிழத்திகளாகவே எப்போதும் கருதி அதற்காக முயல்கின்றனர்."

'தமிழ் ஆட்கள் என்பது ஆண்கள் தானே' என்று குறுக்கிட்டேன்.

கொஞ்ச நேரத்திலேயே வார்த்தைகளில் இலக்கை உணர்த்தி விடுகின்றனர்.

நீங்கள் உங்களுடைய நண்பர்களுடன் தனித்திருக்கும்போது பெண்களைக் கீழ்த்தரமாகக் கதைப்பதில்லையா?" உஷா கேட்கிறாள்.

ஜேர்மன் சூழலுக்குள் வந்திறங்கிய சௌந்தர்யசொருபி,

மிகவும் சிக்கலுக்குள் வந்து மாட்டிக் கொண்டேன்.

என்னத்தைச் சொல்ல?

எப்டிச் சொல்ல?

முதலில் எந்தப் பக்கத்தைச் சொல்லுவது?

நற்சிந்தனைகளைச் சொல்லு என்று எனது விருப்பமும், விவாதப் பொருள் என் விருப்பமின்றி அதை மேவியும் விடுகின்றது. என் விருப்பமென்பது கொஞ்சிப் பேசும் நல்ல நண்பியைத் தேடுவது.

தெய்வீகமும் மானிடப்பிறப்பும் இணைந்த நிலைக்கு பெண்ணைத் தள்ளினேன் முதலில்.

ஆனாலும் எதிர்காலத்திற்கு இது உதவப் போவதில்லை. உலகத்தைப் பார்க்க உதவாது. மனித உணர்ச்சிகளை மதிக்கத் தெரியாத வறட்டு நிலைக்கு இது வந்து விடுகிறது.

இதன் மறு அந்தலை வரை போன பத்திரகிரியாரைப் படித்திருக் கின்றீர்களா?

கையில் ஓட்டுடன் கோவணாண்டியாக ஓர் மடத்தில் இளைப்பாறப் போயிருந்தபோது அவருடன் வந்த நாய் அவர் அருகில் வந்து சுருண்டு விடுகிறது. பத்திரகிரியாருக்குப் பக்கத்தில் இருந்தவருக்கோ கையில் ஓடுமில்லை. அவர் ஞான திருஷ்டியால் நாய் பத்திரகிரியாரின் மனைவி தான் என்றுணர்ந்து, பத்திரகிரியாருக்கு ஞானோபதேசம் வழங்க எண்ணி "உமக்காவது நாய் இருக்கிறது" என்று

ம.ப.பார்க்க..

## வசந்தம்...

கூற பத்திரகிரியார் தமது ஒட்டால் நாய்க்கு எறியவே நாய் இறந்து விடுகிறது.

நான் வேலை முடிந்து போகும் போது ஒரு பிரஞ்சுத் தேவதை "என்னுடைய வீட்டுக்கு வருகிறீர்களா"? என்று கேட்ட போது நான் மறுத்து விட்டதாகச் சொன்னேன். இதில் இரண்டு மறை பொருட்கள் உண்டென்று நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

ஒன்று.... ஒரு பெண்ணுடன் போவதற்கான எனது விருப்பம்.

இரண்டு... நான் கன்னி கழியாத தூய ஆண்.

விடாமல் இன்னொரு சம்பவத்தையும் சொன்னேன். பால பாஸ்கரன் மெட்ரோவில் போய்க்கொண்டிருந்த போது ஒரு பிரஞ்சுத் தேவதை "என்னுடன் வீட்டுக்கு வருகிறீர்களா?" என்றுகேட்ட போது இருவரும் சம்மதித்து அவளின் வீட்டுக்கு போன பின் அவள் அறைக்குள் போனதும் இவர் கதிரையில் அவளை எதிர் பார்த்தபடியே இருந்திருக்கிறார். அவள் ஒன்றுமில்லாமல் வந்து "நீங்கள் இன்னும் உடுப்புகளைக் கழற்றவில்லையா"? என்றுகேட்ட போது தனக்கு இருந்த உணர்ச்சிகளும் பறந்து போனதாகச் சொன்னதைச் சொன்னேன்.

"ஆகவே பாலியல் விருப்பங்களை உடனேயோ காலம் தாழ்த்தியோ தெரிவிப்பதால் நீங்கள் பதற்றமும் எரிச்சலும் அடையக் கூடாது. ஆணுக்கும் சரி பெண்ணுக்கும் சரி உலகம் இப்படித்தான் இருக்கிறது" என்றேன். உஷா இப்போதும் மிகவும் ஜாக்கிரதையாகத்தான் இருக்கின்ருள்.

"நீங்கள் இன்னும் சண்டிலிப்பாயில்தான் இருக்கின்றீர்கள்" என்றேன். விடக் கூடாது. மனிதனின் விருப்பங்களை இன்னொரு மனிதன் தெரிந்து கொள்ள வேண்டும். முன் கையை யார் எடுப்பது?

அம்மாவுடன் படுக்க வேண்டும் என்று பிஞ்சுப் பிராயத்தில் நான் விரும்பியதைச் சொன்னேன். என்னுடன் பந்தயம் பிடித்து எனது பால்ய நண்பன் பால்ய வயதில் உரிஞ்சாங்குண்டியுடன் தனது தாயைக் கட்டிப் பிடித்ததைச் சொல்லிச் சிரித்தோம்.

"நீங்கள் காதல் கடிதம் எழுதியிருக்கின்றீர்களா?" இன்னொரு வருக்காக நான் எழுதி, சேரவேண்டிய பெட்டையிடம் கொடுத்த போது பெட்டையின் தேப்பன் தெருவில் பெட்டையோடு வந்து (பெட்டை பள்ளி முடிந்து வீடு போய் திரும்பவும் ரியூசனுக்கு வரவேண்டும்).

"கொண்டு போய் அம்மியில, குழவியால குத்துங்கோவன்ரா! அல்லது சுவரில கொண்டு போய்த் தேயுங்கோவன்ரா! என்ர பெட்டை யிட்ட ஏன்ரா வாறியள்?" என்று பேசவே தப்பித்து வீடு திரும்பும் போது அவளின் காதலுக்காக ஏங்கியவர் 'நிசல்ற்' அறிய என்னை எதிர்பார்த்து வழியில் எதிர்ப்படவே எனக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. காரணம் அம்மியில் குத்துப்பட்டு சிதைந்துபோய் இருந்தால் எப்படி இருப்பார் இவர் என நான் நினைத்தது.

எந்த விடயத்தைப் பற்றியும் சுவாரசியமாக ஓரிரு மணித்தியாலங்களுக்கு மேல் கதைக்க முடியாமல் போய் விடுகிறது. ஓரிருமணித்தியாலங்கள் நித்திரை கொண்டு எழும்பி எல்லோரும் தேனீர் குடிக்கும் போது இரவில் கதைத்ததை மீண்டும் தனியனாக நினைவிற்கு கொண்டுவந்து கொண்டிருந்தேன். அவள் என்னை எப்படி விளங்கிக் கொண்டாள் என்ற அறிவதற்கு நான் மிகவும் விரும்பினேன். விடுமுறை முடிந்து மறுபடியும் வேலைக்குப் போய் மாளவேண்டியதுதான். இன்னும் ஒருவருடத்திற்கு வசந்தகாலம் தள்ளிப் போயிற்று.

## கட்...

பண்ணிறன். அவர் இங்கே வரேல்லை."

"அவற்றை போக்குச் சரியில்லை. வர வர மோசமாப் போகுது. கிட்டடியில நான் டிவோஸ் தான் எடுப்பன்... அவரை விடும்... "தாயகம்" பாத்தனுன். ... அவளின்ரை புரட்சிக் கவிதையளை வாசிச்சனுன்..."

"எவளின்ரை?"

"எவளின்ரையோ? அந்த ஆட்டக்காறி அனிஷாவின்ரையைத் தான். மனதைத் திறந்து சொல்லும் ஜெயந்தீஸன், நீர் செய்யிறது உமக்கே சரியாப் படுகுதோ?"

"நந்தினி! உமக்கெதிரா நான் ஏதும் சதி செய்தனுனே?"

"வலிய வந்து என்ரை கவிதையளைப் புத்தகம் போட்டுத்தாறன் எண்டீர், போடேல்லை. பிறகு "தாயகத்"திலை போட்டுத்தாறன் எண்டீர், பார்த்தா, இப்ப அவளின்ரை கவிதை கவிதையாப் போட்டுத் தள்ளிறீர். என்ர கவிதையள்தான் கவிதையள் எண்டு சொல்லீட்டு இப்ப மட்டும் அவளின்ரை கவிதையளைப் போட உமக்கு என்னெண்டுதான் உமக்கு மனம் வந்தது? போன் அடிக்கிறன் அடிக்கிறன் எண்டீர். எப்ப அடிச்சனீர்? நீ எனக்கு இருட்டடிப்புச் செய்யிறீர்..." நந்தினி அழுவது என் காதில் கேட்டது.

"உமக்கு இருட்டடிப்புச் செய்ய வேணுமெண்டு நான் கனவிலையும் நினைக்கேல்லை நந்தினி. உம்மடை கவிதையளை நான் எப்பவோ "தாயகத்"துக்கு அனுப்பீட்டன். கட்டாயம் உம்மடை கவிதையளைப் போடுறதெண்டு சொன்னவை. வேணுமெண்டா நீரே கனடாவுக்கு அடிச்சுக் கேளும்."

"உம்மை நம்பிறதுக்கு நான் தயாரில்லை. புத்தகம் போட்டுத்தாறனெண்டு நீர் சொன்னதாலை ஏற்பட்ட தாக்கத்தாலை, இரண்டாம் தொகுதிக்கு 28 கவிதையளை எழுதிவைச்சிருக்கிறன். அதுகளை நான் கொழுத்தப் போறன்."

"வேணுமெண்டா, என்னைப் பெற்றோல் ஊத்தி உயிரோடை கொழுத்தும். உம்மடை கவிதையளை மட்டும் கொழுத்தாதையும்.. ஆணாதிக்கத்தைக் கொழுத்திச் சாம்பலாக்கும் பலம் உம்மடை கவிதையளுக்கு இருக்கு..."

"ஜெயந்தீஸன், கதவிலை தட்டிக் கேட்டுது. அவர் வந்திட்டார்போல. உமக்கு நான் பிறகு எடுக்கிறன்."

கட்.

(இந்த சித்திரத்தை அனுப்பிய தினம் 'நந்தினியின் கவிதைகளை தாமதிக்காமல் போடவும்' என்ற ஒரே ஒரு வரியை ஃபாக்ஸில் தாயகத்திற்கு அனுப்பியுள்ளேன்)

## சோவே விளையாட்டு கழகத்தின் கலைவிழா

**ப.காங்கேயசர்மா**

உடலின் திறனை காட்டுவது விளையாட்டு போட்டி, நாவின் ஆற்றலை வெளிப்படுத்துவது கலைவிழா" இதற்கமைய சோவே விளையாட்டு கழகம் கலைவிழாவையும் நடத்தியது. அன்று நடந்த கலைவிழாவில் ஒரு வித்தியாசம்.. வழமையில் விழா குழுவினரின் தாமதங்களினால் தான் நேரமாற்றம் ஏற்படும்.. ஆனால் இவ்விழாவில் குழுவினர் தயார் நிலையில் இருந்தும் திடீர் காலநிலை கோளாறால் இரசிகர்களினதும் வரவில் தாமதம் ஏற்பட்டதேயாகும். இந்துகலாச்சாரப்படி மங்கள தீபம் ஏற்றியவுடன் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியது. வைத்தியகலாநிதி மீனா ராஜகேசரி வரவேற்புரை இரசிகர்களுக்கு சலிப்பு ஏற்படாதவகையில் கழகத்தின் வளர்ச்சியையும் சிறப்பையும் எடுத்து கூறி தனது சிற்றுரையை முடித்துக் கொண்டார். திரு க.திருலோகநாதன் கழக உப தலைவரின் வாழ்த்து செய்தியில் கலைத்துறைக்கும் விளையாட்டு துறைக்கும் உள்ள ஒற்றுமையையும் கழகமாக சேர்ந்து செய்யக் கூடிய சேவைகளையும் கூறினார். அடுத்து கலை நிகழ்ச்சியை பார்ப்பதற்கான ஒரு ஆவலுடன் இரசிகர்களிடத்தில் ஒரு கலகலப்பு தோன்றியது காணமுடிந்தது. நிகழ்ச்சி ஒழுங்கின்படி சிறுமி சிந்துஜா புவனேந்திரனின் பாடலுக்கு (அபிநயம்) விழாவை சிறப்புற செய்தது. அடுத்த நிகழ்ச்சியாக சண்ணிகா முருகானந்தராஜாவின் பரதநாட்டியம். . கலை அம்சம் தவறாது தனது திறமையை காட்டி சபையோரின் கரகோஷத்தை பெற்றுகொண்டார். நகைச்சுவை நிகழ்ச்சியில் ரொரன்ரோ கலைஞர் ரேஜன் சண்முகம் நிரஞ்சன் சிங்கராஜா அவர்களுடன் சோவே சிறிதரனும் சேர்ந்து இக்கால வாழ்க்கையுடன் இணைந்ததான நகைச்சுவை நிகழ்ச்சியில் குளிர் நிலை மாறி ரசிகர் உஷார் நிலை அடைந்தனர். புன்னகை மன்னன் சிறிதரன் சோவே ஆண்மைக்குரிய இலட்சணமாகிய மீசையயும் எடுத்து பாக்கியா என்னும் புதுமை பெண்ணாக சேலை தாவணியையும் மாறி வேஷம் போட்டு பார்வையாளரை கவர்ந்தார். எல்லா விழாக்களிலும் நன்றி உரைக்கு இரசிகர்கள் நிற்பதில்லை அதனால் நிகழ்ச்சி மற்ற இடை நேரத்தில் கூறுவது வழக்கம் இதற்கமைய இ. ரவீந்திரனால் மிக குறுகிய நேரத்தில் நன்றி உரை வழங்கப்பட்டது. விழா முடிவு நிகழ்சியாக இளையோர் முதியோர் இருபிராயத்தினரினாலும் வரவேற்கப்படும் சினிமா பொன் மாலைப்பொழுது சைனஸ் குழுவினரின் கலாதேவியின் இசை மழைபொழிய ஆரம்பித்தது தொடர்ந்து ஈழத்து பொப்பாடல்கள் சிறிது நேரம் ஈழத்திற்கே இழுத்து சென்றது போல இருந்தது. நல்லதொரு நிகழ்ச்சியை தந்த சோவே குழுவினருக்குப் பாராட்டுக்கள்.

## விண்ணக வாழ்வின் முதலாவது ஆண்டு நினைவு

**திருமதி கணபதிப்பிள்ளை இராசலெட்சுமி** — **திதி 24-10-1993**

திக்கம் அல்வாய்

மண்ணுலகம் 16.06.1938 — விண்ணுலகம் 6.10.1992



*அன்பான அம்மாவே! ஆருயிர் தாயே!*
*கூடி வாழ்ந்த குடும்பத்தில் குதூகலித் திருந்தீரே!*
*ஈராறு மாதங்கள் இங்கு நீங்கள் இல்லையென்று*
*கூறமுடியவில்லை குமுறுதெங்கள் இதயமெல்லாம்*
*பாசமுள்ள தாயாய் இருந்து*
*கடமைகள் பல புரிந்து*
*பண்பான பழக்கங்கள் தந்து*
*பாரினிலே சிறப்பாக மிதக்கவிட்டீர்*
*மேலும் எங்கள் சிறப்பை காணாது*
*எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு*
*மீளாத்துயில் கொண்ட எங்கள் அம்மா!*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல*
*நீர்வளைப்பிள்ளையாரை என்றென்றும் வணங்குகின்றோம்*

உங்கள் நினைவால் வாடும்
அன்புக் கணவர்
பிள்ளைகள்:அம்பிகைபாதர் (கனடா) கனகாம்பிகை (கனடா) நிர்மலா தேவி (இலங்கை ) சிவலிங்கம்(கனடா) பராசக்தி(கனடா) விமலா(கனடா) மகேந்திரராசா (கனடா) திருச்செல்வம்(இலங்கை)
மருமக்கள்:சிறீதரன், கனகேஸ்வரன், சிவலிங்கம் , சசிகலா, சாந்தினி
பேரப்பிள்ளைமயூரன், லக்ஸ்மணன், சிந்துஜா, டினேஜா, மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள்

S.KANAPATHIPPILLAI
3000 VICTORIA PARK AVE#407
WILLOW DALE, ONT M2J 4Y2
Tel:496–2931

லக்ஷமி வாசம்
நீர்வளைப்பிள்ளையார் கோவிலடி
திக்கம்,அல்வாய், இலங்கை

# குறுநாவல்

# வன்னி மண்



வ.ந. கிரிதரன்

நகுலேஸ்வரன்...
இவன் என் பாடசாலை நண்பர்களில் முக்கியமானவன். இவனது வீடு எங்களது பாடசாலை செல்லும் வழியில், ஸ்டேசனிற்கு அண்மையில் அமைந்திருந்தது. இவனது வீட்டிற்கு அருகில் தான் எங்களது தமிழ் டீச்சர் கார்த்தியாயினி டீச்சரின் வீடுமிருந்தது. கார்த்தியாயினி டீச்சர் என்றதும் உடனடியாக எனக்கு ஞாபகத்திற்கு வருவது நளவெண்பா தான். தமயந்தி அன்னத்தைத் தூது விடுவதையும், சுயம்வரத்திற்கு தேவர்கள் நளனுருவில் வருவதையும் விளக்கும் பாடல்களை உள்ளடக்கியிருந்தது எங்கள் பாடத்திட்டம். ஒருமாதமாக கார்த்தியாயினி டீச்சர். ஒவ்வொரு வெண்பாவாக எங்களிற்கு விபரித்துக் கொண்டு வந்த விதம், எங்களை ஒவ்வொரு நாளும் தமிழ் வகுப்பை ஆவலுடன் எதிர்பார்க்க வைத்தது. ஒரு பாடத்தை மாணவர்களிற்கு எப்படிக் கற்பிக்க வேண்டுமென்பதை நன்றாகவே விளங்கி வைத்திருந்தா கார்த்தியாயினி டீச்சர். வெண்பாவிற்கொரு புகழேந்தியென்று சும்மாவா சொன்னார்கள். அந்த ஒவ்வொரு வெண்பாவையும் அழகாகச், சுவையாக, எளிமையாக, மாணவர்க்குப் புரியும்படி சொல்ல அவவால் எப்படி முடிந்தது. இத்தனைக்கும் கார்த்தியாயினி டீச்சர் ஒரு தமிழ்ப்பண்டிதை கூட அல்ல. ஆனால் ஆறும் வகுப்பு மாணவர்களான எங்களை உயர்தர வகுப்பு மாணவர்களைப் போல வைத்துக் கொண்டு, பாடத்தில் மனமொன்றி அவ படிப்பிப்பதைப் போல், எத்தனையோ கலாநிதிகள் கூடப் படிப்பிப்பதில்லை. இன்று கூட இதனை அடிக்கடி நினைத்து நான் ஆச்சர்யப்படுவதுண்டு. தமயந்தியின் சுயம்வர நிகழ்வை விளக்கும் நளவெண்பாவை உள்ளமொன்றி உணர்ச்சி பூர்வமாகக் கற்பித்ததிற்கு கார்த்தியாயினி டீச்சரின் இயல்பான திறமையுடன் சேர்ந்து இன்னுமொரு காரணமும் இருப்பது போல்சில சமயம் நான் உணர்வதுண்டு. கார்த்தியாயினி டீச்சரிற்கு அப்பொழுது தான் திருமணம் நிச்சயமாகியிருந்தது. இளமைக்குரிய உணர்வுகள், கனவுகள் அவ மனமொன்றி நளதமயந்தி காதல் கதையை விளக்கியதற்குரிய காரணங்களிலொன்றாக இருந்திருக்கலாம். குணத்தைப் போல கார்த்தியாயினி டீச்சரும்சரியான வடிவு தான். சிவந்து உயர்ந்து கோவிற் சிலை வடிவு. சில சமயங்களில் நாங்கள் பள்ளிக்கூடம் செல்லும் சமயங்களில் அவ செல்வதைக் கண்டிருக்கின்றேன். ஆடி, அசைந்து, புத்தகங்களை மார்பபோடணைத்தபடி அவ செல்லும்போது அந்தக் காலைப்பொழுது கூட வழக்கத்திற்கு மாறாக சிறிது எழில் கூடியிருப்பது போல் எனக்குப் படும். ஆனால் அதே கார்த்தியாயினி டீச்சரை எனது நண்பனொருவன் அண்மையில் தமிழக அகதி முகாமொன்றில் சந்தித்ததாகக் கூறியபோது மனம் பெரிதும் வேதனைப்பட்டது. கணவன் மோதலொன்றிலகப்பட்டு உயிரிழந்த நிலையில், பிள்ளைகளிருவருடன், பெரிதும் கஷ்டமான நிலையில் கண்டதாகக் கூறியபோது வருத்தமாகத் தானிருந்தது. கற்பனைகளுடன், கனவுகளுடன், உணர்வுகளுடன், மனமொன்றி அவ தமயந்தியின் காதல் கதையைக் கூறியது தான் உடனடியாக ஞாபகத்திற்கு வந்தது. சூழல்கள் எவ்விதம் கனவுகளைக் கற்பனைகளைச் சிதைத்து விடுகின்றன. மனிதர்களை எவ்விதம் அலைக்கழித்து விடுகின்றன. கார்த்தியாயினி டீச்சரிற்கு ஏற்பட்ட நிலைமை, இன்று நகுலேஸ்வரனிற்கு ஏற்பட்ட நிலைமை....

நகுலேஸ்வரன்... இவனுடன் பாடசாலையிலிருந்து வீடு செல்லும் போது வவுனியா புகையிரத நிலையத்திற்கு முன்பாக இருந்த, பழைய இராணுவக் கட்டட இடிபாடுகளை ஊடறுத்துச் செல்லும் பாதை வழியாகத் தான் செல்வது வழக்கம். உலகப்போரின் போது பாவிக்கப்பட்ட இராணுவக் கட்டடங்களின் இடிபாடுகளென்று அவற்றைப் பற்றிக் கூறக் கேட்டிருக்கின்றேன். உண்மை பொய் தெரியாது. செடி கொடிகள் மண்டிக் காணப்படும் கட்டடச் சிதைவுகள்.. இதே மாதிரியான ஆனால் சிறிய அளவிலான கட்டடச் சிதைவுகளை எங்கள் வீட்டிற் கண்மையிலுள்ள மன்னார் ரோட் சந்திக்கண்மையிலும் காடழிக்கும் நேரமொன்றில் கண்டிருக்கின்றேன். இந்தச் சின்னங்கள் என் நெஞ்சில் பலவிதமான கற்பனைகளை எழுப்புவது வழக்கம். பொதுவாகப் பழமையின் சின்னங்கள் ஒரு காலகட்ட வரலாற்றை கூறிவைக்கும் சின்னங்கள்.. பாதுகாத்து வைக்கப்பட வேண்டிய சின்னங்கள். பழமை பழமையென்று வாய்க்கு வாய் பேசும் நம்மவர்கள் இந்த விடயத்தில் சொல்வதென்று செய்வதொன்றாகத் தானிருந்து வருகின்றார்கள்.

சங்கிலியன் சிலை, பண்டாரவன்னியன் சிலையென்று சிலைகள் வைப்பதுடன் மட்டும் திருப்தியடைவதால் பயனில்லை. சரித்திரச் சின்னங்கள் பாதுகாக்கப் படவேண்டும். இந்தச் சரித்திரச் சின்னங்களிற்கண்மையில் நிற்கும் போது ஒரு காலத்தில் அப்பகுதியில் நிகழ்ந்திருக்கக் கூடிய நிகழ்வுகளை நினைத்துப் பார்க்கும் போது நெஞ்சில் ஒருவித நெகிழ்வு தோன்றுவது வழக்கம். வவுனியாப் புகையிரத நிலையத்திற்கு

முன்பாக அமைந்திருந்த அந்த இடிபாடுகளை அண்டியிருந்த பகுதி, செடிகொடிகளால் சூழப்பட்டிருந்த பகுதி இன்னுமொரு விதத்திலும் எனக்குப் பிடிக்கும். எனக்கு அதிகம் பிடித்த குருவிகளிலொன்றான இரட்டை வாற் குருவிகளை அதிகம் அங்கு கண்டிருக்கின்றேன். குறிப்பாக மார்புப் பகுதியில் சிவப்பும், முதுகுப்பகுதியில் கறுப்பும் கலந்த இரட்டை வாற் குருவிகள் என்னை அதிகம் கவர்ந்தவை. இவற்றின் நீண்ட இரட்டைவாற் பகுதி அசையும்போது பார்ப்பதற்கு அழகாகயிருக்கும். நகுலேஸ்வரனிற்கும் இந்தப் பகுதி பிடித்த பிரதேசம். இதனால் வீடு செல்லும் சமயங்களில் சிறிது நேரம் அப்பகுதியில் விளையாடித் திரிந்து விட்டுத் தான் செல்வது வழக்கம்.

அந்த வயதில் போர்க்காலம் சூழலை ஞாபகப்படுத்தும் இத்தகைய இடிபாடுகளை நெஞ்சில் வியப்பினை ஏற்படுத்தின. இந்த மண்ணிலும் ஒரு காலத்தில் யுத்தமொன்று நடந்ததா என்று ஆச்சர்யப்பட்டுப் போனோம். கவசவாகனங்களில் தண்ணீர் அள்ள வரும் இராணுவத்தினரைப் பார்த்து சிரித்துக் கொண்டோம். அமைதி தவழ்ந்து கொண்டிருந்த மண்ணின் முதல் மாற்றத்தை ரோகண விஜேவீராவின் இயக்கத்தினரின் முதற் புரட்சியின்போது கண்டோம். முதன் முதலாக ஹெலிகொப்டர்களைக் கண்டது அப்போதுதான். நாடு முழுவதும் அவசரகாலச் சட்ட நிலை பிறப்பிக்கப்பட்டு, பாடசாலைகளிற கெல்லாம் விடுமுறை விடப்பட்டு, சிங்கள இளைஞரின் புரட்சியை சிறிமாவின் அரசாங்கம் முழுமூச்சாக நசுக்கிக் கொண்டிருந்த காலகட்டம். பாடசாலை விடுமுறையென்றால் எங்களிற்குச் சொல்லவா வேண்டும். ஒரே குதியங் கூத்துத்தான். கும்மாளம் தான். காடு குளம் விளையாட்டென்று நேரம் போவதே தெரியாமல் ... நகுலேஸ்வரன் பெரும்பாலும் எங்கள் வீட்டோடுதான். எங்களிருவரிற்கும் பிடித்த பொழுது போக்குகளில் முக்கியமான பொழுது போக்கு என்ன தெரியுமா?

சிறிலங்கா விமானப்படையினர் ஹெலிகொப்டர்களிலிருந்து போடும் குண்டுகளை எண்ணுவதுதான். வவுனியா நகரின் பிரதான ஆஸ்பத்திரிக்கண்மையிலிருந்து பெரிய குளத்திற்கும் அப்பால் ஒரு மலைத்தொடரொன்றிருந்தது. சிறிய மலைத் தொடர். ஒரு நாளும் நான் அப்பகுதிக்குப் போயிருக்கவில்லை. தொலைவிலிருந்து தான் பார்த்திருக்கின்றேன். மடுக்கந்தை என்று ஏதோவொரு பெயர். இப்பகுதி வழியாக, லக்சபானவிலிருந்து மின்சாரத்தைக் கொண்டு வருவதற்காகப் போடப்பட்ட பிரமாண்டமான மின்சாரக் கம்பங்களிற்காகக் காட்டினூடு வெட்டப்பட்ட பாதை வழியாக 'சேகுவோரா' இளைஞர்கள் வவுனியாப் பகுதிக்கு வந்து விட்டதாகப் பேசிக்கொண்டார்கள். அவர்களது இருப்பிடங்களின் மீதுதான் சிங்களப்படையினர் குண்டுகளை வீசிக் கொண்டிருந்தார்கள். தொலைவில் இம் மலைப்பகுதியை அண்மித்து ஹெலிகொப்டர்கள் பறப்பதை எங்கள் வீட்டு வளவிலிருந்து பார்க்கக் கூடியதாகவிருந்தது. தொடர்ந்து விட்டு விட்டு குண்டுச் சத்தம் கேட்கத் தொடங்கும் போது அப்பா கூறுவார் "சேகுவோராப் பொடியன் மீது குண்டு போடுறான்கள்". அப்பொழுதுதான் நாங்கள் எண்ணத் தொடங்குவோம். சிலசமயங்களில் நாற்பதுவரையில் கூட எண்ணியிருக்கின்றோம். இன்று கூட எனக்கொரு சந்தேகமிருக்கின்றது. உண்மையில் அன்று நாங்கள் கேட்டது குண்டுச் சத்தங்கள் தானா என்று. அப்பா அடித்துச் சொன்னதால் அவை உண்மையில் குண்டுகள் தானென்று நம்பினோம். இன்றும் நம்புகிறேன். ஏனெனில் அந்த நம்பிக்கையைப் பொய்யாக்க விரும்பவில்லை. அந்தச்சமயத்தில் அவ்விதம் ஒருவித திகில் கலந்த வியப்புடன் எண்ணிக் கொண்டிருந்த அந்த அனுபவத்தை என் நெஞ்சுக்கூட்டின் ஆழத்தில் பாதுகாத்து வைக்க வேண்டியதொரு பொக்கிஷமாகத் தான் இன்றுவரை பாதுகாத்து வருகின்றேன். அதனை இழந்துவிட நான் விரும்பவில்லை. அந்த அனுபவம் ஏற்படுத்தி விடும் இன்பகரமான, பசுமையான நினைவுகளைப் பொசுக்கிவிட என்னால் முடியாது.

இந்தச் சமயத்தில் நகரில் ஒரு கதை உலவிக்கொண்டிருந்தது.. 'சேகுவோரா' பற்றிய கதை சேகுவோரா இளைஞர்கள் மாகோவைப் பிடித்து விட்டார்கள், அநுராதபுரத்தையும் பிடித்து விட்டார்கள். சிறிமாவை நடுக்கடலில் பாதுகாப்பாக கொண்டு போய் வைத்திருக்கிறார்கள்.. இதே சமயம் வவுனியா நகரிற்குள்ளும் இரவோடிரவாக கட்டாக்காலி மாடுகளோடு மாடுகளாக மறைந்தபடி புரட்சிக்காரர்கள் வந்து விட்டார்கள். இப்படி பலவிதமான கதைகள், யூகங்கள்.. வேடிக்கையான இன்னொரு விசயம் என்னவென்றால்.. படையினரின் சந்தேகத்திலிருந்து தப்புவதற்காக சிங்கள இளைஞர்கள் கூட தங்களை தமிழர்கள் என்று சொல்லிக் கொண்டது தான்.. ஆனால் இன்று..? காலச் சக்கரம் மீண்டும் சுழல்கின்றது என்பது இதுதான்.

## பாலையிலும்...

ஒழுக்கலும் விடுதலை போராட்டமும் பற்றிய ஒரு விவரணச் சித்திரமாக, 'எரிகின்ற எங்கள் தேசம்' என்ற தலைப்பில் மேடையேறியது. அதில் ஈழத்துக் கவிஞர்கள் பலரது மேடையில் அபிநயிப்புக்கு ஆதாரமாகப் பின் திரையில் ஓவியர் கிருஷ்ணராஜா (அவைக்காற்றுக் கலைக் கழகத்தின் முக்கிய நடிகருங் கூட) வரைந்த படங்களின் ஸ்லைடுகள் காட்டப்பட்டன. இந்த நிகழ்ச்சி மிகுந்த வரவேற்பைப் பெற்றமைக்கு அதன் அரசியல் உள்ளடக்கம் ஒரு முக்கிய காரணம். விடுதலை இயக்கங்களின் தவறுகளை விமர்சித்த ஒரு கவிதை சிலரது மனதை உறுத்தியது. அவர்கள் தம் எரிச்சலை மிரட்டல் வடிவிற் காட்டத் தயங்கவுமில்லை.

இதே இசை அபிநயிப்பும் பாணியிற் பெண்களின் பிரச்சனை தொடர்பாகத் 'துன்பக் கேணியிலே' என்ற கவிதா நிகழ்வு சென்ற ஆண்டு மேடையேறியது. போதியளவிற் பெண்கள் பங்குபற்றாமையாலும் கவிதைகளின் பரப்பின் போதாமை காரணமாகவும் இந்த நிகழ்ச்சி குறைபாடுடையதாகவே அமைந்தது. இதைச் சீர்த்திருத்தி மீண்டும் மேடையேற்றும் எண்ணம் விரைவிற் கைகூடுமென நம்புகின்றேன்.

*மீதி அடுத்த வாரம்..*

# பாலையிலும் பயிர் வளர்ப்பர்

## சி.சிவசேகரம்

தொடர்ச்சி

புதிய நடிகர்களும் இசைக்கலைஞர்களும் தேவைப்பட்டனர். லண்டனிற் தம்மை நிலைநிறுத்திக்கொண்டு, பரதம் கர்நாடக இசை என்று பம்மாத்துக் காட்டும் வட்டங்கட்கு வெளியிலேயே இவ்வாருன புதுமுகங்கள் கிடைத்தன. வாரத்தில் ஐந்து அல்லது ஆறு நாட்கள் கடுமையாக உழைத்துக் கிடைக்கின்ற ஒய்வு நேரத்தை லாபமில்லாத ஒரு கலைப்பணியில், அதற்கான அங்கீகாரம் கிடைக்குமோ என்ற உத்தரவாதமேதுமின்றிக், கடுமையாக உழைத்தார்கள். ஒரிரு சமயம் நாடக நிகழ்ச்சிகள் விரல் விட்டெண்ணக் கூடியோர் முன்னமே மேடையேறின. ரசிகர்களைக் கவர்வதாக வேறு நிகழ்ச்சிகளுடன் சேர்த்து நாடகங்களை மேடையேற்ற நேர்ந்தது. ஆயினும் படிப்படியாக ஒரு ரசிகர் வட்டம் வளரத் தொடங்கியது. எனினும் ஒரு நாடக இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதற்குத் தேவையான வளர்ச்சி இனிமேற்தான் ஏற்பட வேண்டும்.

அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் நாடக முயற்சிகள் லண்டனின் சூழ்நிலை காரணமாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டவற்றினின்றும் வேறுபட்ட முனைப்புக்களையும் உள்ளடக்கின. ஒருபுறம், இலங்கையிற் தயாரித்துப் பரவலான வரவேற்பைப் பெற்ற பின்வரும் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன:

இந்திரா பார்த்தசாரதியின் மழை, பசி: பேர்ட்டோல்ற் ப்ரெஷ்ற் எழுதிய The exception and the rule இன் தமிழாக்கமான யுத தர்மம்: பதல் சர்க்கார் எழுதிய "பன் இந்ரஜித்" இன் தமிழாக்கமான முகமில்லாத மனிதர்கள்: இயனெஸ்கு எழுதிய The Gap இன் தமிழாக்கமான இடைவெளி: அன்டன் செகவ் நாடகமான The proposal இன் தழுவலான சம்பந்தம் செகவ் சிறுகதையொன்றின் தழுவலான இரு துயரங்கள்.

இவற்றுள் மழையை இலங்கையில் ரசித்தளவு லண்டனில் ரசிக்க கூடிய பார்வையாளர்கள் இருக்கவில்லை. மழையின் ஒரு முக்கிய குறைபாடு அது கொஞ்சம் 'அதி புத்திஜீவித்தனமானதும்' மிகையான ஆங்கிலச் சொற் கலப்புள்ள ஒரு மொழியில் எழுதப்பட்டதுமாகும். அதன் உள்ளடகத்தைப் புரிந்து கொள்ளவும் பாலுணர்வு தொடர்பான பிரச்சனைகளை அது கையாளும் முறையை ஏற்றுக்கொள்ளவும் இலங்கை வாழ் தமிழரிடையே இருந்த மனப்பக்குவம் புலம் பெயர்ந்த தமிழர் மத்தியில் இல்லையோ என்ற சந்தேகம் நாடகத்தை லண்டனில் முதல்மேடையேற்றத்திற் பார்த்தவர்கள் சிலர் அலுத்து கொண்ட போது எழுந்தது. இரண்டாவது மேடையேற்றம் அண்மையில் நிகழ்ந்தது. இந்த வகையில் தர்மு சிவராமு எழுதிய நடசத்திரவாசியையும் அலெக்ஸி அர்பஸொவின் நாடகமொன்றின் தமிழாக்கமான 'புதிய உலகம் பழைய இருவர்' நாடகத்தையும் லண்டனில் மேடையேற்ருமை விளங்கிக் கொள்ளக் கூடியது தான். டென்னஸி வில்லியம்ஸ் எழுதிய The glass menagerie யின் தமிழாக்கமான கண்ணுடி வார்ப்புக்கள் எளிதாகவே இங்கு ஏற்கப்பட்டிருக்கக் கூடிய நாடகமாயினும், தயாரிப்பின் பிரச்சனைகளே தடையாக இருந்தன என நினைக்கின்றேன்.

யுக தர்மம், மற்ற நாடகங்கள் அனைத்தையும் விடக் கடுமையான உழைப்பையும் பலரது பங்குபற்றலையும் வேண்டி நின்ற ஒரு நாடகம். அது ஒரு மொழிபெயர்ப்பேயாயினும், அதன் உள்ளடக்கம் மிகவும் தெளிவாகவே பார்வையாளருடன் தன்னை உறவுபடுத்திக் கொண்டது. அதன் இசையமைப்பும் பாடல்களும் இலங்கையில் அதன் வெற்றிக்குப் பொருள் பங்களித்தன. லண்டனிலும் பல பார்வையாளர்கட்கு மனநிறைவைக் கொடுத்தாலும். அதன் நீளம் பற்றி லண்டன் வாழ் தமிழ் இலக்கியவாதி ஒருவர் என்னிடம் முறையிட்ட போது "விதியே விதியே தமிழச்சாதியை...." என்று மனதுள் நொந்து கொண்டேன்.

லண்டன் தமிழர்கள் அதிகம் ரசித்த நாடகம் சம்பந்தம்.. செகவ் எழுதியதை யாழ்ப்பாணச் சூழலில் வைத்துத் தழுவியதால் அதன் நகைச்சுவை எளிதாகவே பார்த்தவர்களைத் தொற்றிக் கொண்டது. அது மட்டுமில்லாமல், நாடக உலகின் மனநோயாளிகளையும் அது தொற்றிக் கொண்டது. அந்த நாடகத்தின் சுவடிகளைக் களவாகப் பெற்று அதில் ஆபாசத் தொனியுடைய இரட்டை அர்த்தந் தரும் வசனங்களை புகுத்தித் தனது சொந்த நாடகம் என்று ஒருவர் (அவர் இலங்கையின் மசாலா நாடகக்காரர் தான்) மேடையேற்றிஞர். அந்தக் கதை அம்பலமான பின்பு, அந்த ஆபாசம் மீண்டும் மேடையேறவில்லை என்று அறிகிறேன்.

லோர்கா எழுதிய The house of Bernarda Alba வின் தமிழாக்கமான ஒரு பால வீடு, பல வழிகளிலும் யாழ்ப்பாண உயர்சாதித் தமிழரின் கட்டுப்பெட்டித்தனமான சிந்தனையையும் பம்மாத்துக்களையும் நினைவூட்டுவன. அது தழுவலாக வந்திருந்தால் மேலும் பெரிய வெற்றி பெற்றிருக்கும். தயாரிப்பின் பிரச்சனைகள் காரணமாக, முக்கியமாக அதில் வரும் பெண் பாத்திரங்களின் தொகை காரணமாக இதுவரை அது லண்டனில் மேடையேறவில்லை பெண்ணுரிமை தொடர்பான சில அடிப்படைப் பிரச்சனைகளை எழுப்பும் இந்த நாடகம் லண்டன் தமிழர்களை எட்ட நீண்ட காலம் எடுக்கும்.

அவைக்காற்றுக் கலைக்கழகம் லண்டனிற் தயாரித்தளித்தவற்றில் இலங்கையிற் தயாரித்தனவற்றை விடத் தெளிவாகவே சமூகப் பிரக்ஞை வெளிப்பட்டது. 1986 இல பரீட்சார்த்தமாச் செய்யப்பட்ட கவிதா நிகழ்வு எனும் இசை அபிநய மேடை நிகழ்ச்சி, இலங்கைத் தமிழரின் இன

25ம் பக்கம் பார்க்க..

# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**

**755 8550**

**CALL**
**MIKE or RAJAN**

**Car Certification**
**29.99**


Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்


Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்

We use
Quaker
State Oil




# GOOD BYE BALDNESS

முடி உதிர்பவர்களுக்கு ஓர் நற்செய்தி



ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை வளரச்
செய்கிறது

**பரீட்சித்துப்பாருங்கள்**
**TRY FIRST**

**பலர் இச்சிகிச்சை மூலம்**
**பயனடைந்துள்ளார்கள்**

239 CARLTON STREET
TORONTO, ONTARIO
TEL: 922–0478

# ஈழம் ஒரு தொடர்கதை

## பாகம் 2

சின்னத்தம்பி வேலாயுதம்

பாகம் ஒன்று போன்றே இதுவும் ஒரு நீண்ட தொடராகவிருக்கும். பாராளுமன்ற அரசியல் அணுகுமுறைகளில் தமிழர் பிரச்சனை பற்றி முதல் பாகத்தில் கண்டீர்கள். இந்தப் பாகத்தில் ஆயுத அரசியலில் தமிழர் பிரச்சனை பற்றிப் பார்க்கப் போகின்றீர்கள்.

இலங்கையின் ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்க வடகிழக்கு பகுதிகளில் இருப்பது ஒரு பயங்கரவாதப் பிரச்சனையேயன்றி இனப்பிரச்சனையேயல்ல என்ற ஒரு பெரும் கண்டு பிடிப்பை செய்து இராணுவத்தீர்வில் நம்பிக்கை கொண்டுள்ள இந்த வேளையில் அவருடைய கூற்றையும் நடவடிக்கையையும் வன்மையாக மறுப்பதே பிள்ளையார் சுழியாக இத்தொடர் ஆரம்பிக்கிறது.

இத்தொடரில்

1. ஈழப்பிரிவினையின் சாத்திய கூறுகளும் பாதகமான அம்சங்களும்
2, இயக்கங்கள் தோற்றமும் வீழ்ச்சியும்
3. தமிழீழ விடுதலைப் புலிகள்
4. தமிழ் ஈழமும் முஸ்லீம்களும்
5 ஈழப்பிரிவினையில் இந்தியாவின் பங்கு
6. தமிழ் ஈழமும் இடதுசாரிகளும்
7. தமிழ் ஈழமும் புகலிடத்தில் வாழும் மக்களும்
8. தமிழ் ஈழமும் ஸ்ரீலங்காவில் வதியும் மக்களும் (இந்திய தொழிலாளர் உட்பட) ஆகிய முக்கிய எட்டு அத்தியாயங்கள் வருகின்றன.

இந்த எட்டு அத்தியாயங்களிலும் ஆய்வு செய்யக் கூடிய விடயங்களை சிறிது விரிவாகப் பார்ப்போம். ஈழப்பிரிவினையின் சாத்தியக்கூறுகளும் பாதகமான அம்சங்களும் எனும் போது புவிசார் எல்லைகள், மக்கள் பரம்பரல், ஈழத்துக்கான அவர்களின் சம்மதம் போன்றவற்றை புள்ளிவிபரங்களுடன் ஆய்வு செய்வதாகும். அத்தோடு ஒரு தேசிய இனம் பிரிந்து போவதற்கான தகைமைகள் எவ்வளவு தூரம் சாதகமாக இருக்கின்றதென்பதையும் வேறேதும் மாற்று ஏற்பாடுகளின் மூலம் தீர்க்க முடியுமா என ஆய்வு செய்வதாகும்.

அத்தியாயம் இரண்டில் இயக்கங்களின் தோற்றமும் வீழ்ச்சியும் எனும் விடயம் 1983ம் ஆண்டு கலவரத்தைத் தொடர்ந்து ஆரம்பமான பல இயக்கங்களும் அவைகளின் துரித வீழ்ச்சியும் பற்றி ஆய்வு செய்யப்படும் தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்களான புளொட், ரெலோ, ஈ.பீ.ஆர்.எல்.எப் ஈரோஸ் போன்ற பெரியவைகள் பற்றியும் இன்னும்சிறுசிறு இயக்கங்கள் பற்றியும் வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றி தனியான ஒரு அத்தியாயம் வரும்.

அத்தியாயம் மூன்று தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றி கூறுகிறது. இதிலே புலிகளின் அரசியல் தந்திரோபாயங்கள், இராணுவக் கட்டமைப்பு, சயனைட் படை தற்கொலைப்படை, தலைவர் பிரபாகரன் பற்றியும், அரசியல் எதிரிகளை கையாளுதல், தண்டனைகள், ஜனநாயக சுதந்திரம் என்பன பற்றியும், ஒட்டு மொத்தமான சமூக மாற்றத்தில் புலிகளின் பங்கு போன்ற பல விடயங்களும் பிறவும் ஆய்வு செய்யப்படும்.

அத்தியாயம் நாலில் தமிழீழமும் முஸ்லீம்களும் எனும் விடயத்தில் அவர்களுடைய மதக்கலாச்சாரம் தனித்துவம் ஈழ விடுதலையில முஸ்லீம்களின் பங்களிப்புகள் தீர்வுகள் என்பன இடம் பெறும். ஈழப்பிரதேசத்துக்கு வெளியில அதாவது ஸ்ரீலங்காவில் வாழும் முஸ்லீம்களுடனான தொடர்புகள், அரசியல் பின்னணிகள், அவர்களின் ஈழம்பற்றிய எண்ணப்பாடுகள் என்பன பற்றியும் சொல்லப்படும்.

அத்தியாயம் ஐந்து ஈழப்பிரவினையில் இந்தியாவின் பங்கு பற்றி கூறுகிறது. இது இத்தொடரில் மிக முக்கிய பகுதியாகும். வரலாற்று ரீதியான இலங்கை இந்திய உறவுகள், ஈழப்பிரிவினை பற்றிய இந்தியாவின் கருத்தும், தலையீடும், ரே வின் பங்கு, இந்தியாவின் சர்வதேச உறவுகள் போன்ற பலவும் இதில் வருகின்றது.

ஆறுவது அத்தியாயம் தமிழீழத்தின் இடதுசாரிகள் பற்றிக் குறிப்பிடுகிறது. பாராளுமன்ற இடது சாரிகள், பாராளுமன்றத்தை நிராகரித்தவர்கள், ஈழப்பிரிவினையில் உடன்பாடில்லா இடதுசாரிகள் ஈழத்தைப் பிரித்து பின் உலகம் முழுவதையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்குள் கொண்டு வர முயற்சிப்பவர்கள், இன்னும் சிவப்புக் கொடியை உபயோகிக்கும் வலது சந்தர்ப்பவாதிகள் போன்ற இன்னோரன்ன இடதுசாரிகள் பற்றி விமர்சனங்கள் வரும்.

ஏழாவது அத்தியாயம் குறிப்பிடப்படுகின்ற தமிழ் பிரதேசத்திலிருந்து போரின் உக்கிரம் காரணமாகப் புலம் பெயர்ந்து மேற்கு நாடுகளில் நிரந்தரவாசிகளாக மாறி வரும் மக்கள் பற்றியது. இவர்களது வாழ்க்கை மாற்றங்கள் அத்துடன் குறிப்பிடப்படும் ஈழப் பிரதேசத்தில் எஞ்சிய உறவினர்கள் இருப்பதனாலுள்ள தொடர்புகள், புகலிடத்தமிழரின் புதிய பொருளாதார வளர்ச்சியால் ஏற்படக்கூடிய சிந்தனை மாற்றங்கள், ஈழ மண்ணில் வாழும் மக்களிடமிருந்து அந்நியப்படல் என்பன பற்றி குறிப்பிடும்.

எட்டாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்படுகின்ற ஈழம் தவிர்ந்த ஸ்ரீலங்கா பிரதேசங்களில் வாழ்ந்து வரும் மக்கள் பற்றியது. குறிப்பாக மலையகத்தில் வாழும் தமிழ் தொழிலாளர்கள் கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் வாழும் தமிழ் மக்கள் பற்றியது.

மேலே குறிப்பிட்ட எட்டு அத்தியாயங்களும் ஒரு உத்தேசத் தொடர்களே. ஏதும் சிறு சிறு மாற்றங்களுடன் வரலாமென்பதை

இப்போது கூறி வைக்க விரும்புகிறேன்.

மேலும் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட தமிழ் காங்கிரஸ் ஜி.ஜி.யின் அரசியல், தந்தை செல்வா அமிர்தலிங்கத்தின் தமிழரசு..கூட்டணி அரசியல் பற்றி எழுதுவதற்கும் தற்போது தளத்திலும், களத்திலுமுள்ள இயக்கங்கள் பற்றி எழுதுவதற்குமிடையே நிரம்ப வித்தியாசமுண்டு. குறிப்பாக எந்த விடயத்தை எடுத்து ஆய்வு செய்வதற்கும் போதிய, உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் இன்மையால் சில விடயங்களை அறுதியிட்டு கூறமுடியாமலிருப்பதுடன் அத்தகைய விடயங்கள் பல வாதப் பிரதிவாதகங்களாகத் தொடங்கும் எனக் கருதி முழுக்க முழுக்க ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைத் தவிர்த்து. ஆதாரங்கள் உள்ளவற்றை வைத்து ஆய்வு செய்ய முயற்சிப்பேன்.

இத்தொடர் போரின் வரலாற்றை அல்லது குற்றச்சாட்டுகளை ஆவணப்படுத்துவதற்கு பதிலாக போரின் பிரதான போக்கை விமர்சனத்துக்குட்படுத்தி ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உதாரணமாக அனுராதபுரத்தில் 160 பொதுமக்களைக் கொலை செய்தார்கள் என்ற தகவலை புலிகள் உரிமை கோராத வரை அக்குற்றச்சாட்டை அவர்கள் மீது ஆதாரங்களுடன் சுமத்தி ஆய்வு செய்ய முடியாது. ஆனால் அப்படி ஒன்று நடந்திருப்பின் அது சரியா பிழையா என ஆய்வு செய்ய முடியும். இதேபோன்ற சில சமயங்களில் எந்தவொரு இயக்கத்தின் மீதும் வைக்கப்படும் குற்றச்சாட்டை நாம் நோக்க வேண்டும். அதன்படியே நாம் பாரபட்சமின்றி ஆய்வு செய்யவேண்டியுள்ளது.

பத்திரிகைச் செய்திகள், இயக்கங்களின் பத்திரிகைத் தகவல்கள், உரிமை கோரப்பட்ட கொலைகள் போன்றவை மிக நுணுக்கமான பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு சரியெனக் கண்டபின் சேர்த்துக் கொள்வேன். இத்தொடர் தங்கு தடையின்றி தொடர வாசகர்களாகிய உங்கள் அன்பு எனும் பலத்தில் தங்கியுள்ளேன்.

# அத்தியாயம் 1

## ஈழப் பிரிவினையின் சாத்தியக் கூறுகளும் பாதகமான அம்சங்களும்.

"கல்தோன்றி மண்தோன்ருக் காலத்து முன்தோன்றிய மூத்தகுடி" என்று தமிழர்களே தமிழர்களே அழைத்துக் கொள்கிருர்கள். இது ஒரு உருவகிப்பு அன்றி உண்மையாக இருக்க விஞ்ஞான ரீதியான காரணங்கள் இடம்தரா. ஆனுல் உண்மையான பிரச்சனை மேற்கூறிய கூற்று ஏற்க முடியாதது என்று கூறும் தமிழனைத் தமிழனே "தமிழ்த் துரோகி"யாக அடையாளம் காணும் பேராபத்துதான்.

ஆகவே மேற்கூறிய மனப்பான்மை கூடக் கல்லும் மண்ணும் தோன்ற முன்பே தமிழன் மனதில் தோன்றிவிட்டது என்று சர்ச்சையில்லாமல் ஒத்துக் கொண்டு பெரும் சர்ச்சைக்குரிய பிரச்சனைகளை தமிழர் பாணியில் கூறினுல் ஏற்றுக் கொள்வார்கள் என்ற அடிப்படைக் கம்பீர பலத்தைக் கொண்டு ஈழப்பிரச்சனையை அலசுவோம்.

"ஆண்டபரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன தவறு இருக்கிறது" என்ற கவிஞர் காசி ஆனந்தனின் கவிதை வரிகள் வடபகுதி இடதுசாரிகளால் கடுமையான விமர்சனத்துக்குட்படுத்தப்பட்டது. இடதுசாரிகளின் சீற்றம் உயர்சாதிக்காரர் மேல் இருந்தது. ஆனுல் என் கருத்து வேருக இருந்தது. அதாவது ஆண்ட பரம்பரையில் சங்கிலியனின் வாரிகள் யார் என்று இப்போ அடையாளம் காண்பது எப்படி? அப்படிப் பரம்பரையைத் தேடத் தொடங்கினுல் சங்கிலியன் என் கொள்ளுப்பாட்டன், மணிமுடி எனக்குத் தான் சொந்தம் என்று உரிமை கொண்டாடப் பழைய தோம்புகளுடன் பலர் நிற்பர்.

ஆகவே சங்கிலியன் முன்பு ஆண்டதனுல் எமக்கென ஒரு இராச்சியம் இருந்ததனுல் அதை இப்போது பெற்றுக் கொள்ள உரிமையுடையவர்கள் என்ற வரலாற்றுக் காரணிகளை நாம் சாட்சிக்கு அழைக்கும் போது அதன் மறுபக்கங்கள் பற்றித் தர்க்க ரீதியாகவும், நியாய பூர்வமாகவும் விவாதித்து முடிவுக்கு வர கடமைப்பட்டுள்ளோம்.

சங்கிலியன் நல்லூரிலிருந்து ஆண்ட வரலாறு பற்றிக் கூறும் போது வன்னி இராச்சியம் பற்றியும் கண்டி இராச்சியத்தினுல் மாறி மாறி ஆளப்பட்ட திருகோணமலை உட்பட்ட கிழக்கு மாகாணம் பற்றியும் நாம் நோக்க வேண்டும்.

ஆகவே நாம் வரலாற்றைப் பின்நோக்கி நகர்த்தும் போது மேற்கூறியவை மட்டுமல்ல மலையகத் தொழிலாளர் பிரச்சனை கூட வந்து தட்டுப் படுகிறது. நாங்கள் எமது இராச்சியத்தைக் கோரும்போது 19ம் நூற்ருண்டில் மலையகத்துக்கு வந்து சேர்ந்தவர்களான மலையக தமிழ்த் தொழிலாளர்களையும் அவர்களில் முன்னேறிய பகுதியினரான மலையக கொழும்பு இந்திய வாணிபர்களையும் கூட நாட்டை விட்டுச் செல்லுமாறு சிங்கள அரசும் தமது வரலாற்றை பின்னுேக்கித் தள்ளி ஆதாரம் தேடலாம்.

இதிலே நாம் எமது பக்க நியாயத்தை மட்டும் எடுத்துக் கொண்ட மற்றதை நிராகரிக்க முடியாது. 1947 ம் ஆண்டு இந்திய பாகிஸ்தானியர் பிரஜா உரிமைச் சட்டம் வந்த பொழுது தந்தை செல்வா ஜனுப் அஸீஸ் மற்றும் இடதுசாரிகள் இந்தியத் தோட்டத் தொழிலாளரைத் திருப்பி அனுப்புவதை எதிர்த்தனர். இருந்த போதும் பத்து லட்சத்துக்கதிகமான தொழிலாளர் களும் 1964 இல்ஸ்ரீமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தில் ஆறு லட்சம் தமிழரும் இந்தியா செல்ல நேர்ந்தது.

## ஒரு சிறுகதை

ஸ்ரீமாவோ ஆட்சிக்காலத்தில் மலையகத் தமிழ் சிருர்கள் பட்டினியால் வடக்கே படையெடுக்க தொடங்கினுர்கள் அவ்வளவு தான் கூலிவேலை செய்தவன் கூட ஒரு மலையகச் சிறுவனை தன் வீட்டு வேலைக்காரனுக்கி பொதி சுமக்க வைத்தான். VERY VERY CHEAP LABOUR இன்று DISH WASHING முடித்துவிட்டு காரை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு பறக்கிருேம் இங்கே இப்போ நாங்கள் VERY VERY CHEAP..

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

வசந்த திசாநாயக, பற்றிக் பெர்னாண்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்; செ. லோகநாதன்

### தேசபக்த போராட்டத்திற்கு தயாராதல்

தேசபக்த போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய காலம் வந்து விட்டது என முடிவு செய்யப்பட்ட 1985 டிசம்பர் கொஸ்லந்த உரையாடலின்போது தேசபக்த போராட்டத்திற்காக கட்சியை பூரணமாக மறுசீரமைப்புச் செய்ய வேண்டியது அவசியம் எனவும் வர்க்க உணர்வுடன் கூடிய இயங்குனர்களின் எண்ணிக்கை பற்றி ஓரளவாவது மதிப்பீடு செய்யவேண்டும் எனவும தீர்மானிக்கப்பட்டது. ஆயுத நடவடிக்கைகளுக்கான பயிற்சிகளை நாடுபூராவும்துரிதப்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றியும் இவ் உரையாடலில் வலியுறுத்தப்பட்டது. அத்தோடு விஜேவீரவும் கமனாயகவும் நாடு பூராவும் பயணம் செய்து ஸ்தாபன வேலைகள் பற்றி வழிகாட்ட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. ஆனாலும் கமனாயகவே கூடுதலாக பயணம் செய்தார்.

(தேசபக்த போராட்டத்தை முன்னெடுப்பதற்காகவே தமது பிரதான உந்து சக்தியான மாணவ இயக்கத்துள் 1986ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 'தேசபக்த மாணவ இயக்கம்' என்னும் பெயரில் முன்னணி அமைப்பொன்றை ஜேவிபி உருவாக்கியது. இவ் அமைப்பின் வேலைகள் சோஷலிச மாணவர் சங்கத்தின் செயலாளர் ஆனந்த இடமேகம என்பவருக்கு பொறுப் பளிக்கப்பட்டன.

முன்பு போல் அல்லாமல் 'தேசபக்த' போராட்டத்திற்காக அடிஎடுத்து வைத்த பின்னர் பல்வேறு சக்திகளுடன் ஐக்கியமாக செயல்படவேண்டியது தவிர்க்க முடியாத நிபந்தனையாகியது ஆதலால் தேசபக்த போராட்டத்தை முன்னெடுப்பதற்காக நட்பு சக்திகளை தேடவேண்டிய நிலை ஜேவிபிக்கு ஏற்பட்டது. 1986ம் ஆண்டு இடம்பெற்ற தாதிமார் போராட்டத்தின போது ஜேவிபியைச் சார்ந்தோர் பெருமளவில் அப்போராட்டத்துடன் தொடர்பாக செயல்பட்டது நட்புச் சக்திகளை தேடும் நோக்குடனேயே ஆகும். அரசாங்க சேவை ஐக்கிய தாதிமார் சங்கத்தின் தலைவர் முதுத்தெட்டுவே ஆனந்த அடிகளுடன் தொடர்புகளை உருவாக்கிய ஜேவிபியினர் தாதிமார் சங்கத்தை முன் அணியாக பாவித்து 'மக்கள் போராட்ட முன்னணி' என்னும் பெயரில் ஸ்தாபனம் ஒன்றை உருவாக்க செயல்பட்டனர். அதன் பின்னர் இணைவுகளை ஏற்படுத்துவதற்காக 'தாய்நாடு பாதுகாப்பு அமைப்பு'டனும் பேச்சுவார்த்தைகளை நடாத்தியதோடு மக்கள் ஐக்கிய முன்னணியுடனும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்த சில பகுதியினருடனும் சில தொடர்புகளை ஏற்படுத்திக கொண்டனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் நட்புச் சக்தியே எனக்கருதும் நிலைமையை நோக்கியே ஜேவிபி இக்காலகட்டத்தில் பயணம் செய்து கொண்டிருந்ததால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜேவிபிக்கும் இடையில் இணைவை ஏற்படுத்திக் கொள்வது இலகுவாகவிருந்தது. அரசாங்கத்துக்கு எதிராக போராட முடியாதவாறு பெலவீனமான நிலையில் வீழ்ந்து கிடந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் நண்பர்கள் தேவைப்பட்டனர். இதன்படி இவ் இரு கட்சியினருக்கும் இடையே ஐக்கியம் ஏற்பட்டதோடு கிராமப்புறங்களைச் சார்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் அனேகர் ஜேவிபியுடன் நெருங்கிச் சென்றதையும் காண முடிந்தது. இதன் மூலம் ஜேவிபியின் வளர்ச்சிக்கு பெரும் உந்துதலே கிடைத்தது.

இக் காலகட்டத்தில் இனப் பிரச்சனை காரணமாக தோன்றிய யுத்தத்தால் நாடு மிகவும் சோர்வுற்றிருந்தது. இவ் யுத்தம் நீடிக்க நீடிக்க தென் பகுதியில் வாழ்ந்த சிங்கள மக்களில் பெரும்பாலானோர் மத்தியில் நாடு பிளவுபடுவதற்கு எதிரான உணர்வு பயங்கரமான முறையில் அதிகரித்த வண்ணமிருந்தது. ஆட்சியாளர் தொடக்கம் பதவி ஆசை பிடித்த சகல சந்தர்ப்பவாத அரசியல் சக்திகள் மட்டுமன்றி பௌத்த மதச் சக்திகளும் இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வொன்றைக் காண்பதற்கு தடங்கலை ஏற்படுத்தியதோடு சிங்கள மக்கள் மத்தியில் அவர்களது எதிர்காலம் பற்றிய பெரும் பீதியையும் கூடவே யுத்த மனோபாவத்தையும் பரப்பினர். இப் பின்னணியின் கீழ் வேறு எவருக்கும் இல்லாதவாறு ஜேவிபியினருக்கே வழி திறந்திருந்தது. சிங்கள மக்களது உணர்வுகளை போராட்ட வடிவமாக மாற்றும் ஆற்றல் ஏனைய சக்திகளிடம் இல்லாதது மட்டுமன்றி ஆத்திரத்தையும் பெரும் அழிவையும் ஏற்படுத்தும் வகையில் பெரும் பேச்சுக்களை நிகழ்த்திய போதிலும் போராட்ட வடிவத்தை வழங்க அவர்கள் தயாராகவும் இருக்கவில்லை. ஆதலால் இவ் அனைத்துச் சக்திகளையும் விட முன்னுக்குச் சென்று 'தேசபக்த போராட்டத்தின்' தலைவனாக ஜேவிபி மாறியது.

### தேசபக்த போராட்டத்திற்கு தலைமை வழங்க கட்சி தயாராகிறது.

மாவட்ட ரீதியான உரையாடல்கள் 1986 ம் ஆண்டு பெப்ரவரி ஆரம்ப பகுதியில் நாட்டின் சகல மாவட்டங்களிலும் நடாத்தப் பெற்றன. இக்காலகட்டத்தில் ஜேவிபியின் நடவடிக்கைகள் விருத்தி பெறுவதுடன் கூடவே அரசும் தனது அடக்குமுறையை துரிதப்படுத்துகிறது. அரசாங்கம் பெரும் அடக்குமுறைக்கு தயாராவதால் ஆயுதபாணியாகும் வேலைகளை விரைவுபடுத்த நடிவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. கட்சி நிதியொன்றை ஸ்தாபிக்குமாறும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் கட்சி நிதிக்காக ஐந்து இலட்சம் ரூபாய் சேகரிக்குமாறு அறிவிக்கப்பட்டதோடு இதனை நிறைவேற்றுவதற்கு ஆயுதப் பிரிவின் உதவியைப் பெறுமாறும் அறிவிக்கப்பட்டது. அங்கத்துவத்தை இருமடங்காக அதிகரிப்பதை இலக்காகக் கொள்ள வேண்டும் எனவும்

இவ் உரையாடலில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. நிதி சேகரிப்பில் மாத்தறை அநுராதபுரம் மாவட்டங்களிலிருந்து தலா எட்டு இலட்சம் ருபாய் திரட்டப்பட்டதாகவும் அறிய முடிந்தது.

1986ல் பல்வேறு பகுதிகளிலும் பெரும் வேலைகள் இடம் பெற்றன. பாதுகாப்புப் படைக்குள் தமது அங்கத்தவர்களை நுழைப்பது துரிதப்படுத்தப்பட்டதோடு இராணுவத்திலிருந்து தப்பியோடி வருபவர்களுடன் கூடுதலான தொடர்புகளை ஏற்படுத்தவும் ஒழுங்குகள் செய்யப்பட்டன. 1986 முடிவுறும் போது ஜேவிபியின் முழுநேர ஊழியர்களின் எண்ணிக்கை சுமார் 500 ஆகவிருந்தது. முழு இயக்கமும் உயிரோட்டமுள்ள தொடர்புடன் செயல்படும் நிலைமைக்கு மாற்றப்பட்டிருந்ததோடு மாதத்திற்கு ஒரு அல்லது இரு தடவை மாவட்டக் கமிட்டி கூடியது.

1987 அளவில் பிரமிட் (கூர்ங்கோபுரம்) போன்ற மிகச் சக்தி வாய்ந்த அடித்தளத்துடன் கட்சியின் ஸ்தாபனக் கட்டமைப்பை வைத்திருக்கும் அளவிற்கு ஜேவிபி வெற்றி கண்டது. கிளைக் கமிட்டி, பிரதேசக் கமிட்டி, மாவட்டக்கமிட்டி, வலயக் கமிட்டி, மத்திய குழு, அரசியல் குழு ஆகியவற்ருல் இவ் ஸ்தாபன பிரமிட் கட்டி எழுப்பப்பட்டிருந்தது.

### *தனிநபர் படுகொலை அரசியல் எனப்படும் அரசியல் பயங்கரவாதத்தில் ஜேவிபி*

விஜேவீர தான் எழுதிய 'தமிழ் ஈழபோராட்டத்திற்கு தீர்வு என்ன?' என்னும் நூலில் தனிநபர் படுகொலை அரசியல் பயங்கரவாதத்தை மிகவும் உறுதியாக நிராகரித்தார். அந்நூலில் அரசியல் பயங்கர வாதத்தை இவ்வாறு நிராகரிக்கிருர்,

"மார்க்சிஸ்ட்டுகளாகிய நாம் பயங்கரவாதத்திற்கு அர்த்தம் கூறுவது எவ்வாறு? இது தொடர்பாக தெளிவான வரைவிலக்கணமொன்றை எமது ஆசிரியரான லெனின் வழங்கியுள்ளார். லெனின் பயங்கரவாதத்திற்கு அர்த்தம் கூறி வரைவிலக்கணம் வழங்கியுள்ளது இவ்வாறுதான், "அரசியல் போராட்டத்தின் தற்போதைய காலத்தில் மிகவும் பிரயோசனமற்ற முறையில் ஸ்தாபன வேலைகளிலும் எதிர்ப்பார்ப்பாட்டங்களிலும் உடனடியாகவும் அத்தியாவசியமாகவும் செய்யவேண்டிய வேலைகளிலிருந்து மிக நல்ல சக்திகளை திசைதிருப்புவதும் புரட்சிவாதிகளுக்கும் மக்களுக்கும் இடையேயான தொடர்புகளை அழித்தொழிப்பதும் ஏதேச்சா திகாரத்துக்கு எதிரான போராட்டத்தின் நோக்கத்தையும், வழிமுறைகளையும் துவம்சம் செய்வதுமான பயங்கரவாதம் அதாவது தனி நபர் படுகொலை செயல் முறைகளை இம் மாநாடு உறுதியாக நிராகரிக்கிறது!" இக் கூற்றின்படி லெனின் பயங்கரவாதம் என அறிமுகப்படுத்துவது தனிநபர் அரசியல் படுகொலை நடவடிக்கைகளையாகும். ஆதலால் தனி நபர் படுகொலை செயல்முறைகளைப் பின்பற்றுபவர்கள் பயங்கரவாதிகள். அவ்வாறான அமைப்புகள் பயங்கரவாத அமைப்புகளாகும்! (பக்கம் 215..216)

இவ்வாறு கூறி வடக்கு கிழக்கின் சகல தமிழ் அமைப்புகளையும் பயங்கரவாத அமைப்புகள் என நாமம் சூடி விஜேவீரவும் ஜேவிபியும் அவற்றைக் கண்டித்தனர். அவ்வாறு கூறிய ஜேவிபி அதிக காலம் செல்லுமுன்னரே தம்மால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டதும் சிறு முதலாளித்துவ போக்கு என அறிமுகப் படுத்தப்பட்டதுமான பயங்கரவாதத்தை பின்பற்ற தொடங்கியது.

தென் பகுதியிலுள்ள கோனதெனிய என்னும் இடத்தைச் சார்ந்த பாடசாலை அதிபர் ஒருவரே ஜேவிபி படுகொலை அரசியலின் முதலாவது பலியாகும். ஜேவிபி போஸ்டர்கள் ஒட்டிய மாணவர்கள் சிலரை வகுப்புக்கு வராமல் தடுத்ததற்கு தண்டனையாகவே இக்கொலை செய்யப்பட்டதாக கூறப்பட்டது. அடுத்த பலி கொழும்பு பல்கலைக் கழகத்தின் சுதந்திர மாணவர் சங்கத்தின் தலைவன் தயாபத்திரணவாகும். ஜேவிபி தனி நபர் படுகொலை அரசியலை ஆரம்பித்த போதிலும் இப்படுகொலைகளுக்கு உரிமை கோரவில்லை. தயாபத்திரணவை தாம் தான் கொலை செய்ததாகக் கூட இவர்கள் உரிமை கோரவில்லை. ஆனால் உரிமை கோருவதற்குப் பதிலாக இப்படுகொலைகள் வேறு நபர்களால் செய்யப்பட்டதாக பிரச்சாரம் செய்தனர். இப் பிரச்சாரத்திற்காக பலவிதமான கதைகளைக் கட்டினர். மாணவர் இயக்கத்தை அழிப்பதற்காகவே அரசாங்கமே தயா பத்திரணவை கொலை செய்தது என ஒரு தடவை கதை விட்டனர். அடுத்த தடவை தயாபத்திரணவை தயான் ஜயதிலகவே கொலை செய்வித்தார் என இன்னுமொரு கதையையும் அவிழ்த்துவிட்டனர். ஆனால் தயா பத்திரன கொலை செய்யப்பட்டதை ஜேவிபி கண்டிக்காதது மட்டுமன்றி இக் கொலையை நியாயப்படுத்தக் கூடியவாறு பரவலான பிரச்சாரத்திலும் ஈடுபட்டது. (1988 டிசம்பர் 25ம் திகதி ஜேவிபியினால் வெளியிடப்பட்ட 'பல்கலைக் கழக மாணவர் படுகொலைகளின் பின்னால் இரத்தம் தோய்ந்த சதி' என்னும் பிரச்சாரத்தைப் பார்க்கவும்) ஆனால் தற்போது அம்பலமாகியுள்ள தகவல்களின்படி தயாபத்திரணவின் படுகொலை ஜேவிபியின் ஆயுத பிரிவைச் சார்ந்த அகிரிஸ கொஸ்தா என்பவரின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற ஒன்ருகும். ஜேவிபி ஊழியரான மகிபால என்பவரே இக்கொலையை செய்தார். தயாபத்திரணவுடன் சேர்த்து கொல்ல முயற்சித்து பின்னர் சாகாமல் உயிர்தப்பிய கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சார்ந்த சோமசிறி வெளிப்படுத்திய தகவல்களும் இதனையே உறுதிப்படுத்துகின்றன.

ஜேவிபியின் தனி நபர் பயங்கரவாத நடவடிக்கைகளில் அடுத்துச் சிக்கியது ஜேவிபியின் பிரதான தலைவர்களில் ஒருவராக இருந்த வாஸ் திலக்கரத்னவாகும், முதலாவது தடவை தனியார் பஸ் ஒன்றில் பயணம் செய்யும் போதும், இரண்டாவது தடவையாக பதுளை பெரிய ஆசுபத்திரியிலும் வாஸ் திலகரத்னவை கொலை செய்ய முயன்றனர். ஆனால இவ் இரு முயற்சிகளும் கை கூடவில்லை. வாஸ் திலகரத்னவை காயப்படுத்தவே இவர்களால் முடிந்தது. ருகம சோமே என்பவரை உள்ளடக்கிய குழுவே வாஸ் திலக்கரத்னவை படுகொலை செய்வதற்கான நடவடிக்கைளை மேற்கொண்டது.

இச் சம்பவங்களை அடுத்து சிறிது காலம் மௌனம் நிலவியது. பின்னர் இந் தனி நபர் படுகொலை அரசியல் வேகமாக பரவத் தொடங்கியது. அரசாங்க கட்சியைச் சார்ந்தோர், இடதுசாரிகள் ஜேவிபி நடவடிக்கைகளுக்கு இடைஞ்சலாக இருந்தவர்கள் ஆகியோர் ஜேவிபியின் அரசியல் பயங்கரவாதத்தின் குறியாகினர். முதலில் தந்திரோபாயமாக ஆரம்பிக்கப்பட்ட இத் தனி நபர் படுகொலை அரசியல் பின்னர் ஜேவிபி அரசியலின் பிரதான மூல உபாயமாக மாறியது.

தொடரும்

# கடவுளையே 'சுத்திய' விண்ணர்கள்

மதம் மாற்ற முயன்றவர்களை ஜேர்மனியில் சுத்தியவர்கள் மூவர். மூவருமே நான் வாழ்ந்த நகரத்தில வாழ்ந்ததால் இவர்களின் 'சுத்தல்' பற்றி நேரடியாகவே கண்டவன். இதில ஒருவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர். இவர் அங்குள்ள கிறிஸ்தவ ஆலயமொன்றுக்கு சென்று வந்தார். உண்மையில் இவர் ஒரு இந்து. இவரது பக்தியைக் கண்ட ஜேர்மானியர்கள் உள்ளம் உருகி இவரது கதையைக் கேட்க, தனது குடும்பத்ினரை தான் பிரிந்திருப்பது பற்றியும் அவர்களை அழைக்க வேண்டிய அவசியம் பற்றியும் கூறியிருக்கிறார். இதைக் கண்ட ஒரு ஜேர்மானிய வயோதிப மாது ஒருவர் இவரது கதையைக் கேட்டு.. இவருக்கு உதவி செய்ய முயன்றார். தனது குடும்பத்தினரைக் கூப்பிட பத்தாயிரம் மார்க் தேவை என்றும் அவர்களை தான் ஊருக்கு சென்று கூட்டி வரப் போவதாகவும் கூறியிருக்கிறார். இடைக்கிடை ஊரில் ஒரு மினிவான் இருந்தால் தான் நன்றாக உழைக்கலாம் என்றும் கூறியிருக்கிறார். ஊரில பிரச்சனை என்று அகதித் தஞ்சம் கோரியவர் எப்படி ஊருக்குப் போய் மனைவி மக்களை கூப்பிட்டு வரலாம் என்பது பற்றி அந்த ஜேர்மன் மாது அறிந்திருக்கவில்லை. கடைசியாக பத்தாயிரம் மார்க்கும் கொடுத்து, அவரது தாய்க்கு விஸ்கிப் போத்தலும் வாங்கிக் கொடுத்து அந்தப் பெண் உதவி செய்தார். பணத்தை வாங்கிய அன்பர் மெதுவாய் தனது அகதிக் கோரிக்கையை ரத்துச் செய்து அரச செலவிலேயே ஊருக்குத் திரும்பி விட்டார். அந்தப் பெண்ணும் அன்போடு அவர் என்ன ஆனாரோ என்று விசாரிக்கத் தொடங்கி விட்டார். ஆனால் அன்பர் தன் நண்பர்களுக்கு பம்மாத்து பற்றி உளறியும் இருந்தார். போனவர் இன்னமும் அந்தப் பெண்ணை ஏமாற்றும் நோக்குடன் 'தன்னை இராணுவத்தினர் கைது செய்து விட்டதாகவும் தன்னை வெளியில் எடுக்க பணம் தேவை என்றும்' எழுதியிருந்தார். ஏற்கனவே இது நண்பர்களுக்கு உளறிய விடயம் தான். ஆனால் பெண் பின்னர் பணம் அனுப்பவில்லை. இப்படியாக நல்ல மனங்களை ஏமாற்றுபவர்கள் கூட இருக்கிறார்கள்.

★ ★ ★

மறுபுறத்தில் இன்னொருவர்.... வயதானவர் என்றதால் எல்லோராலும் ஐயா என்று அன்புடன் அழைக்கப்படுபவர்... இவர் தான் முன்பு கியூறியஸ் வருவதற்கு முன்னர் அங்கு ஆங்கிலம் தெரிந்தவர் என்பதும் பின்னர் கியூறியஸ் வந்ததால் தனது ஏகபோகம் உடைந்து போக.. இவர் கியூறியஸ் மீது ஏறிப் பாய்ந்ததும் முன்பு குறிப்பிட்டிருக்கிறேன். இருவருமே ஒரே றூம்மேட்கள். இவர் கொஞ்ச நாள் தலைமாட்டில் பைபிளை வைத்துக் கொண்டிருந்தார். ஆனால் படித்ததை நான் கண்டதில்லை. புதிய அப்போஸ்தலிக்க சபையில் இவர் சேர்ந்து விட்டிருந்தார். ஞாயிற்றுக்கிழமை காலைகளில் இவரை காரில் வந்து வெள்ளையர்கள் ஏற்றிச் செல்வர். அவர்கள் கொடுத்த கோட், சூட்டுடன் ஒரு நாள் புறப்படும் போது. . வாசனைத் திரவியத்தை ஸ்பிரே பண்ணுவதாக நினைத்துக் கொண்டு அவசரத்தில் ஷேவிங் கிறீமை ஸ்பிரே பண்ணி இடறுப்பட்டது பற்றி மற்றவர்கள் கூறுவார்கள். அவர்களுடன் சென்று வந்து ஒரு நாள் ஞானஸ்நானமும் பெற்று விட்டார். வீட்டில் சாமிப்படங்கள் சகிதம் எல்லாமே இருந்தன. இவரையும் இவரது மனைவி, இரண்டு பெண்பிள்ளைகள், ஒரு மகன் நாலவரையும் கூப்பிட... இந்த சமயத்தவர்கள் பணம் கொடுத்தார்கள்.

எனக்கு ஒரே ஆச்சரியம்.. ஒரு ஐந்து திசை மாறிய செம்மறிகளை மனம் மாற்ற... இவ்வளவு பணம் இவர்களால் எப்படி செலவிட முடிகிறது? இதற்கும் அராபிய எண்ணெய் பணத்தில் மதம் மாற்றியவர்களுக்கும், பதவி ஆசையைக் காட்டி இலங்கையில் காலனித்துவ நாட்களில் மதம் மாற்றியவர்களுக்கும் என்ன வித்தியாசம்? இவர்களின் நோக்கம் என்ன? எண்ணிக்கையை அதிகரிப்பதா? இல்லை, ஆன்ம ஈடேற்றம் தானா? ஆன்ம ஈடேற்றத்தை விரும்பும் ஒருவனுக்கு பணத்தை காட்டி ஏமாற்றலாமா? ஒரு உலோகாதாய விடயத்தைக் காட்டி மதம் மாற்றி பரலோகத்திற்கு வழிகாட்டலாமா? இப்படி மதம் மாறுகின்ற ஒவ்வொருவருக்கும் பணம் கொடுத்தால் கடைசியில் மதமே வங்குரோத்து ஆகி



விடுமே?

கடைசியாக.. பணம் கொடுத்தது மட்டுமன்றி.. அந்தக் குடும்பத்தினரை பேர்லினில் இருந்து காரில் கூட்டி வந்தனர். வந்து கொஞ்ச நாள் ஐயா தன் மனைவி பிள்ளைகளுடன் கோயிலுக்குப் போய் வந்தார். நாட் செல்ல செல்ல சுகவீனத்தைக் காரணம் காட்டி குறைத்துக் கொண்டார். சமயத்தினர் பிள்ளைகளை பாடசாலையில் சேர்ப்பது முதல் சந்தையில் சாமான்கள் வாங்குவது வரை கார் சேவை செய்தது தான் மிச்சம். ஐயா நன்றாக அவர்களைச் சுற்றிக் கொண்டார்.

★ ★ ★

ஐயாவின் குடும்பத்தினர் வந்து சேர்ந்ததும் இன்னொருவர் விழித்துக் கொண்டார். இவ்வளவு காலமும் ஐயாவை ஐயாவுக்குப் பின்னால் நக்கல் அடித்த இவர் திடீரென்று ஞாயிற்றுக்கிழமைகளில் வந்த கார்களில் ஓட்டிக் கொண்டார். பைபிள் கையில் கிடைத்தது. அடிக்கடி கோயிலுக்குப் போனார். ஆனாலும் இந்து தெய்வங்களுக்கு வீட்டில் சாமியறையும் இருந்தது. மெதுவாக தனது குடும்பத்தினர் ஊரில் படும் அவலம் பற்றி கதையைத் தொடங்கினார். ஆனால் இவர் ஐயா மாதிரி வீட்டாரை அங்கே கூப்பிட்டு அவலப்பட மனமில்லாமல் மாஸ்டர் பிளான் ஒன்றில் இறங்கினார். தனது வீட்டாரை கூப்பிட பெருந்தொகைப் பணம் வேண்டும் என்றும் கதை விட்டார். இவர் ஒட்டிக் கொள்வது ஐயாவுக்கு பிடிக்கவில்லை. இருந்தாலும் மற்றவர் விசயகாரர். மெதுவாக கதையைப் போட்டு பெருந்தொகைப் பணத்தை வாங்கிக் கொண்டார். பணத்தை பெற்று ஊருக்கு அனுப்பி குடும்பத்தினரை கூப்பிடுவதாக பேச்சு. சமயகாரர்களும் வீட்டார் வந்தால் அவர்களை பேர்லினில் போய் அழைத்து வருவதாகப் பேச்சு. ஆனால் ஒரு நாள் திடீரென்று ஆள் தலைமறைவாகி கொஞ்ச நாள் வந்து சேர்ந்தார். என்னவென்று கேட்டால் தான் பேர்லினிற்கு போனதாகவும் தனது மனைவி பிள்ளைகளை மொஸ்கோவில் வைத்து திருப்பி அனுப்பி விட்டார்கள் என்றும் சோகம் நிறைந்த முகத்துடன் கதை விட்டார். இருந்தாலும் ஏன் சமயகாரர்களை விட்டு இவர் தனியே பேர்லின் போனார் என்பது பலத்த கேள்விக்குள்ளானது. இவர் வீட்டாருக்கு பணம் அனுப்பாமல் தானே சுருட்டிக் கொண்டதாகத் தான் எல்லாரும் கருதிக் கொண்டார்கள்.

சமயகாரர்களை சுலபமாக ஏமாற்றியாயிற்று. மற்ற தமிழர்களை சுத்த வேண்டாமா? தான் சிங்கப்பூர் போவதாகவும் ஏதும் பொருட்கள் வாங்க விரும்புவோர் தன்னிடம் பணத்தை தந்தால் தான் வாங்கி வருவதாகவும் சொல்ல... ஆசை யாரைத் தான் விட்டது.. நகை வாங்கவும் சாறி வாங்கவும் கமெரா வாங்கவும் பலர் பணம் கொடுத்தார்கள். அவர் தந்திரமாக பணத்தை வாங்கிக் கொண்டு கம்பி நீட்டி விட்டார். இவ்வளவு தூரம் ஏமாற்றிய இந்த வித்துவான் இத்தனைக்கும் மூன்றும் வகுப்புடன் உயர்கல்வியை முடித்துக் கொண்டு கிளிநொச்சி சந்தையில் வியாபாரம் செய்தவர். சுத்திஜீவிதம் சொல்லியா தரவேண்டும்? கடவுளை ஏமாற்றியவர் மனிதரையும் ஏமாற்றிக் கொண்டு ஊருக்கு கிளம்பி விட்டார்.

★ ★ ★

இதெல்லாம் ஒரு சில உதாரணங்கள். நான் நேரில் கண்டவை. இப்படி எத்தனையோ? திரும்பவும் அதே தான்.. மதம் மாறுதல் தனிமனித சுதந்திரம்.. ஆனால் பொருளைக்காட்டி மதம் மாற்றுவதும் பொருளை எதிர்பார்த்து மதம் மாறுவதும் அசல் ஏமாற்று வாழ்க்கையே! மற்றவனை ஏமாற்றிப் பிழைப்பது பலருக்கு பிழைப்பாகவே போய் விட்டது. அடிப்படை மனிதப் பண்புகள் கூட இங்கே சீர்கெட்டு விடுகின்றன. இப்படியெல்லாம் வாழ வேண்டுமா என்ற கேள்வியும் எழுகிறது.

★ ★ ★

வடஅமெரிக்காவில் மதம் ஒரு பெரிய நிதிநிறுவனமாகி விட்டது. இங்கே மதப்பிரசாரகர்கள் எனபோர் பெரும் செல்வாக்குப் பெற்றவர்கள். பில்லி கிரகாம் என்பவர் நற்செய்தி போதித்தால் லட்சக்கணக்கில் மக்கள் திரளுவார்கள். பிற்பாடு தொலைக்காட்சியைப் பயன்படுத்தி பலர் மதப் பிரசாரம் செய்தார்கள். தொலைக்காட்சியைத் திறந்தால் யேசுவின் நாமத்தை போதிப்பதையும் அங்கு வந்தவர்களில் பலர் குணமாவதையும் கண்டிருக்கக் கூடும். இறுதியில் உங்கள் காணிக்கை அனுப்பும்படி ஒரு தொடர்பு இலக்கமும் தருவார்கள்.

இதில் எவ்வகையான ஏமாற்றுக்காரர்கள் இருந்தார்கள் என்றால்.. ஜேம்ஸ் பேக்கர் என்று ஒருவர். PTL என்ற மாபெரும் பிரசார நிறுவனம்.. Praise The Lord.. இதில் பேக்கரும் அவரது மனைவியும் லட்சக்கணக்கான டொலர்கள் பெறுமதியான சொத்துக்களுக்கு நிர்வாகிகளாக இருந்தனர். அத்தனையும் அப்பாவி பக்தர்களின் பணம்.. இவர் தனது செயலாளராக இருந்த பெண்ணுடன் கள்ளத் தொடர்பு கொண்டார்.

மோயீசனுக்கு கடவுள் கொடுத்த பத்துக் கட்டளைகளில் மோக பாவம் செய்யாதிருப்பாயாக என்கிறார். அதை பிரசங்கிக்கும் இந்த போதகர் அதையே செய்து விட்டார். இதனால் தான் Practise what you preach என்கிறார்கள். அந்தப் பெண்ணோ பின்னர் கோபம் வந்ததும் செய்தியை வெளியே விடுவேன் என்று பயமுறுத்தி பிளாக்மெயில் பண்ணியதும் அவளுக்கு லட்சக்கணக்கில் பணம் கொடுத்தார். இறுதியில் விடயம் வெளியே வந்து இப்போது கம்பி எண்ணுகிறார். அந்தப் பெண் பிளேபோய் சஞ்சிகையின் நடுப்பக்கத்தை அலங்கரித்து விட்டு, பிளேபோய் நிறுவன அதிபர் ஹெஃப்னரின் மாளிகையில் தஞ்சம் புகுந்துள்ளார். இந்த சுப்பர்மார்க்கட் பத்திரிகைகளில் இவர்கள் பற்றியும் அடிக்கடி செய்தி வரும்.

அடுத்தவர் ஜிம்மி ஸ்வக்கார்ட். இவர் ஜேம்ஸ் பேக்கர் விவகாரம் வெளியில் வந்ததும் பெரிதாக சத்தம் போட்டவர். பின்னர் இவருக்கு ஒரு விபசாரியுடன் தொடர்பு என்ற விடயம் வெளியில் வந்தது. பின்னர் பகிரங்கமாக சாத்தான் தன்னை ஆட்கொண்டு விட்டான் என்று கூறி அழுது மன்னிப்புக் கோரி மீண்டும் புனர்ஜென்மம் பெற்று விட்டார். அந்த விபசாரிக்கு என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது.

இன்னொருவர் ஒறல் றொபேட்ஸ். .. ஒருநாள் ஒரு குறிப்பிட்ட திகதிக்கு

முன்னர் குறிப்பிட்ட தொகை மில்லியன்களை தான் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க பெற்றுக் கொடுக்கா விட்டால் கடவுள் தன்னை இறக்கச் செய்வார் என்றும் அதைத் தடுக்க உடனடியாக பணம் அனுப் புங்கள் என்றும் அறிவித்திருந்தார். ஆனால் பணமும் கிடைக்கவில்லை. ஆளும் சாகவில்லை.

இன்னொருவர் பத்ரொபேட்சன். . இவர் அமெரிக்க ஜனாதிபதியாக வர முயன்றவர்.. இப்படியாக பலவேறு கோளாறுகளுடன் சமயம் பரப்ப முயன்றவர்கள் இருக்கிறார்கள். இவர்களின் நோக்கம் இறைவனைப் பரப்ப முன்னர் பணம் சேர்ப்பதுதான். தாங்கள் சொகுசான வாழ்வு வாழ்ந்து கொண்டு ஏழைகளுக்கு போதிப்பார்கள். இந்த தொகையான பணம்தான் நம்ம செம்மறிகளை ஈடேற்ற பயன்படுகின்றன.

★ ★ ★

அமெரிக்காவிலும் பல கறுப்பர்கள் இனஒடுக்கல் காரணமாக மதம் மாறி முஸ்லிம்களாகிறார்கள். இந்தியாவிலும் டாக்டர் அம்பேத்கார் பௌத்த மதம் மாறியது இன ஒடுக்கலால் தான்.

★ ★ ★

இங்கேயும் நம்மவர்களுக்கு எக்கச்சக்கமான கோயில்கள் உள்ளன. பலர் போகிறார்கள். "யேசுவால் இரட்சிக்கப்படுகிறார்கள்.." சிலர் பலன் கிடைக்காத போது நழுவிக் கொள்கிறார்கள். சிலர் பலன் பெற்றதும் நழுவிக் கொள்கிறார்கள். இதெல்லாம் பிரச்சனை அல்ல...

ஆனால் மூளைச்சலவை செய்யப்பட்ட மாதிரி.. திடீரென்று யேசுவால் ஆகர்சிக்கப்பட்டதும் மற்ற மதங்களை மதிக்காமல்.. தங்களுடையது தான் உண்மையான மதம் என்ற ரீதியில் வாதம் புரிவதுதான் தாங்க முடிவதில்லை. அதைவிட எரிச்சல் தருவது.. ஏற்கனவே கிறிஸ்துவை அறிந்தவர்களுக்கு உபதேசம் செய்வது.. இவ்வளவு காலமும் தாங்கள் நம்பிக் கொண்டிருந்த ஒரு மதத்தை ஒரு சிறிய கால எல்லைக்குள் இவர்களால் எப்படி தூக்கி எறிய முடிகிறது? அப்படியாயின் இவர்களின் நம்பிக்கைகளின் மீதான நம்பகத்தன்மை போய் விடுகிறதே.. அதோடு புலித்தனம் போல இன்னொரு பக்கத்து நியாயத்தை கேட்க மறுக்கின்ற சுபாவமும் இவர்களுக்கு வந்து விடுகிறது..

வார்த்தைக்கு வார்த்தை பைபிளை மேற்கோள் காட்டுகிறார்கள். பிரச்சனை அதுவல்ல.. ஆனால் சொல்லப்பட்ட வசனங்கள் என்ன சூழ்நிலையில் சொல்லப்பட்டன என்பதைப் பற்றி அல்லாமல் பைபிளில் சொல்லப்பட்டிருக்கின்றன என்ற ஒரே காரணத்துக்காக பயன்படுத்துகிறார்கள். உதாரணத்திற்கு ஒன்று..

யேசு கூறுகிறார்.. என்னைப் பின்செல்ல விரும்புகிறவன் என் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என் பின்னால் வரட்டும்..

பின்னர் இன்னொரு கட்டத்தில் 'என் சுமை இனிது, நுகம் எளிது' என்கிறார். இரண்டுமே வெவ்வேறு சூழ்நிலைகளில் சொல்லப்பட்டன.

★ ★ ★

மத மாற்றம் மன மாற்றத்தை ஏற்படுத்தி அயலவனை நேசிப்பதன் மூலம் அமைதியான சமுகமான வாழ்வை ஏற்படுத்த வேண்டும். என் மதத்தில் சேராமல் இன்னொரு மதத்தில் இருப்பதால் நீ முட்டாள் என்பதற்கும் எங்களை ஆதரிக்காததால் நீ துரோகி என்கின்ற புலித்தனத்துக்கும் என்ன வித்தியாசம்?

உன்னிடம் இரண்டு ஆடையிருந்தால் மற்றதை உன் அயலவனுக்கு கொடு என்றுதான் யேசு சொன்னாரே தவிர.. ஆடையைக் கொடுத்து விட்டு என் மதத்தில் சேர் என்று நிபந்தனை விதி என்று சொல்லவில்லை. ஏழைகளுக்கும் எளியவர்களுக்கும் உதவி செய்வது தவறல்ல.. ஆனால் பலனை எதிர்பார்த்து உதவி செய்வது வியாபாரம்.

★ ★ ★

கலைநிகழ்ச்சிகளில் தான் பிரகிருதிகளின் கூச்சல் என்றால் தேவாலயங்கள் வரை அது வளர்ந்து விட்டது. சென்ற வாரம் தேவாலயம் ஒன்றில் பூசை நேரத்தில் திடீரென்று பின்னே நின்ற சில பிரகிருதிகள் திடீரென்று ஒரு பெண்ணின் பெயரைக் குறிப்பிட்டு 'ஐ லவ் யூ' என்று கத்தி விட்டு ஓடி விட்டார்கள். நக்குகிற நாய்களுக்கு செக்கென்ன? சிவலிங்கமென்ன?

This newspaper is published by
Georgicka communications.
A member of
Ethnic Press Council Of Canada.

Editor: George R.Ckrhushchev

P.O.Box 1031, Station "F",
Toronto, Ont, M4Y 2T7.

Tel: (416) 920 9081
Fax: 963 5738
E mail:71650,3216 Compuserve

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா
தொடர்பு நிறுவனத்தினால்
வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்:
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## தாயகம் சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை,
இந்திய, கனடிய உணவுப் பொருட்
தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 Queen St West**
**(Queen/Lansdowne),**
**Toronto, Ont. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும்
காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

- தமிழக, இலங்கை வாரப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் உடனுக்குடன்

உடன் மீன், இறைச்சி, பழவகைகள் மலிவு விலையில்


- முத்திரை, சிகரெட், TTC Tickets, Lottery Tickets
- போட்டோக்கொப்பி, ஃபாக்ஸ் வசதிகள்

தமிழ்,ஹிந்தி, மலையாள வீடியோக்கள் வாடகைக்குப் பெறலாம்

- லேசர் இசைத்தட்டுக்கள் மலிவு விலையில்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உடைகள்,
பரிசுப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

# ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**

**588 0310**

TRADING CO LTD
SIVA'S
321-2739

அனைத்து வகையான இலங்கை, இந்திய உணவு வகைகள், பலசரக்கு வகைகளை மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

## சிவாஸ் ரேடிங் கோ

**3852 FINCH AVE EAST**
**KENNEDY/FINCH**

உலகெங்கும் செல்வதற்கான விமானச்சீட்டுக்களை மலிவுவிலையில் பெற தொடர்பு கொள்ளுங்கள்
சுந்தரலிங்கம் (சுந்தரி)

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உடன் இறால், நண்டு, கணவாய், மீன் மற்றும் கடலுணவு வகைகள் மலிவு விலையில்

தோசை, இடியப்பம், அப்பம் சுடச்சுடக் கிடைக்கும்

இந்தியா ருடே, பேசும்படம், சினிமா எக்ஸ்பிரஸ், ராசி பலன், பொம்மை தவிர்ந்த அனைத்து தமிழக சஞ்சிகைகளும் 89 சதங்கள் மட்டுமே

## P.S.S.T

| | |
|---|---|
| எக்கோ, தொம்சன் கசட்டுகள் | 1.99 |
| 8 லேசர் இசைத்தட்டுக்கள் | 29.99 |
| வீடியோ பிரதி வாடகைக்கு | 99 சதம் |
| VIDEO TRANSFER (ANY SYSTEM) | 8.99 |

$40 க்கு மேல்பொருட்கள் வாங்கினால் இரண்டு வீடியோப் பிரதிகள் வாடகைக்கு இலவசம்
$75 க்கு மேல் கொள்வனவு செய்தால் ஒரு தமிழ்ப்படம் இலவசம்

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

**TEL:609-0141**

**5210 FINCH AVE EAST #23**
**(FINCH/MIDDLEFIELD)**

சகல தமிழ், இந்தி, மலையாளப் படங்கள் வாடகைக்கு கிடைக்கும்